# தின பூமி

thinaboomi.com

பூமி: 25 சுற்று: 345 வைகாசி 08

Regd. No.TN/WR/SLM(E)/14/2017-2019 RNI Regn. No. TNTAM/2001/4003

சேலம், வியாழன், மே 22, 2025

▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி

பக்கம் 8 ₹ 3.00




**காஸாவினுள் மனிதாபிமான உதவிகளை அனுமதியுங்கள் இஸ்ரேலுக்கு போப் வலியுறுத்தல்**

...2-ம் பக்கம்

**மிசோரம் முழு கல்வியறிவு பெற்ற முதல் மாநிலமானது: முதல்வர் லால்துஹோமா அறிவிப்பு**

...3-ம் பக்கம்

**ரோகித்தின் பரிந்துரையை நிராகரித்த பி.சி.சி.ஐ.: வெளியான புதிய தகவல்**

...6-ம் பக்கம்






● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் நிறுவனம் சார்பில் பரங்கிமலை, ஓசூர், திருவண்ணாமலை ஆகிய இடங்களில் ரூ.38 கோடியே 15 லட்சம் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள 3 தோழி விடுதி கட்டிடங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர் கீதா ஜீவன், தலைமைச்செயலாளர் நா.முருகானந்தம், மகளிர் உரிமைத்துறை செயலாளர் திருமதி ஜெயஸ்ரீ, இயக்குநர் ச.வளர்மதி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

### வரும் 24-ம் தேதி நிதிஆயோக் கூட்டம்:

# தமிழ்நாட்டின் நியாயமான நிதி உரிமைக்காக டெல்லி பயணம்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் விளக்கம்

சென்னை, மே 22-

**தமிழ்நாட்டுக்கான நியாயமான நிதி உரிமையை நிதிஆயோக் கூட்டத்தில் வெளிப்படுத்த 24-ம் தேதி டெல்லி செல்கிறேன் என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.**

**ஏன் வலிக்கிறது?**

இதுதொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது சமூகவலைதளப் பக்கத்தில், தமிழ்நாட்டுக்கான நியாயமான நிதி உரிமையை நிதி ஆயோக் கூட்டத்தில் வெளிப்படுத்த 24-ம் தேதி டெல்லி செல்கிறேன்.

சசிகலா முதல் அமித்ஷா வரை ஆள் மாறினாலும், டேபிளுக்கு அடியில் காலைப்பிடிக்கும் பழக்கம் மாறாத எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமிக்கு இதனைக் கண்டு ஏன் வலிக்கிறது? பா.ஜ.க.வுடன் கூட்டணி கிடையாது என்று அடித்துச் சொன்ன நாக்கின் ஈரம் காய்வதற்குள், ஒரே ரெய்டில் 'புலிகேசி'யாக மாறி 'வெள்ளைக்கொடி ஏந்தச் சென்ற' பழனிசாமி என்னைப் பார்த்து வெள்ளைக் கொடி ஏந்தியதாகப் பேச நா கூசவில்லையா?

**உரிமைக்காக....**

இந்த ஸ்டாலினின் கை கருப்பு சிவப்புக் கழகக்கொடியை ஏந்தும் கை. பேரறிஞரால் தூக்கிவிடப்பட்ட கை. கருணாநிதியின் கரம் பற்றி நடந்த கை. எந்நாளும் உரிமைக் கொடியைத்தான் ஏந்துவேன், ஊர்ந்து போகமாட்டேன். இன்றைக்குக்கூட, தமிழ்நாட்டின் உரிமைக்காக சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடுத்துள்ளேன். கொண்ட கொள்கையில் உறுதியாக நிற்பேன், தமிழ்நாட்டுக்கான நிதியைப் போராடிப் பெறுவேன் என்று முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

# ரூ.176 கோடி மதிப்பிலான 14 புதிய தோழி விடுதிகள்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல்

சென்னை, மே 22-

**பணிபுரியும் மகளிருக்காக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் தோழி விடுதிகள் கட்டப்பட்டு வருகின்றன. அந்த வகையில், மதுரை, கோயம்புத்தூர், நாகப்பட்டினம், கிருஷ்ணகிரி, ஈரோடு, காஞ்சிபுரம், கடலூர், தர்மபுரி, தேனி உள்ளிட்ட ரூ. 176 கோடியில் கட்டப்பட உள்ள 14 புதிய தோழி விடுதிகளுக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.**

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று (21.5.2025) தலைமைச் செயலகத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் நிறுவனம் சார்பில் பரங்கிமலை, ஓசூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய இடங்களில் 38 கோடியே 15 லட்சம் ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள 3 தோழி விடுதிக் கட்டடங்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

மேலும், சென்னை – தரமணி மற்றும் சேப்பாக்கம், மதுரை, கோயம்புத்தூர், நாகப்பட்டினம், கிருஷ்ணகிரி, ஈரோடு, காஞ்சிபுரம், கடலூர், தர்மபுரி, தேனி, சிவகங்கை, இராணிப்பேட்டை, கரூர் ஆகிய இடங்களில் 176.93 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 14 தோழி விடுதிக் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

பணி நிமித்தமாக தங்கள் சொந்த ஊர்களை விட்டு பிற நகரங்களுக்கு இடம் பெயரும் பணிபுரியும் பெண்களின் தேவைகளை உணர்ந்து தரமான, பாதுகாப்பான மற்றும் குறைந்த கட்டணத்தில் பெண்களுக்கான தங்கும் விடுதிகளான "தோழி விடுதிகள்" தமிழ்நாடு அரசின் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ் பல்வேறு மாவட்டங்களில் நடத்தப்பட்டு வருகின்றன.

இதுவரை சென்னை, திருவள்ளூர், கோவை. செங்கல்பட்டு, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், வேலூர், சேலம், விழுப்புரம், திருநெல்வேலி, பெரம்பலூர், புதுக்கோட்டை, தூத்துக்குடி ஆகிய 13 மாவட்டங்களில் 16 தோழி விடுதிகளில் 1380-க்கும் மேற்பட்ட பணிபுரியும் மகளிர் பயனடையும் வகையில் முதல்-அமைச்சரால் திறந்து வைக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

பொருளாதார ரீதியாக நலிவுற்ற மற்றும் குறைந்த வருவாய் பிரிவினர்களுக்கான பணிபுரியும் மகளிர் தங்கும் விடுதிகள் அனைத்து வசதிகளுடன் பாதுகாப்பாக உள்ளதால், பணிபுரியும் மகளிரிடையே மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது.

அந்த வகையில், பணிபுரியும் மகளிர் விடுதிகளின் தேவை அதிகரித்து வருவதைத் கருத்தில் கொண்டு, கூடுதலாக தற்போது சென்னை - பரங்கிமலை, ஓசூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய இடங்களில் 38 கோடியே 15 லட்சம் ரூபாய் செலவில் 442 படுக்கைகள் கொண்ட மூன்று புதிய தோழி விடுதிகள் முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

மேலும், தரமணி, சேப்பாக்கம், மதுரை, கோயம்புத்தூர், நாகப்பட்டினம், கிருஷ்ணகிரி, ஈரோடு, காஞ்சிபுரம், கடலூர், தர்மபுரி, தேனி, சிவகங்கை, இராணிப்பேட்டை, கரூர் ஆகிய இடங்களில் 176.93 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2000 பணிபுரியும் பெண்கள் பயன்பெறும் வகையில் 14 தோழி விடுதிகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று அடிக்கல் நாட்டப்பட்டது. இவ்விடுதிகளில் பயோமெட்ரிக் உள் நுழைவு, 24x7 பாதுகாப்பு வசதி, Wi-Fi வசதி, சிசிடிவி வசதி, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், ஆரோக்கியமான உணவு, தொலைக் காட்சி, சுடுநீர் வசதி, சலவை இயந்திரம், இஸ்திரி வசதி, வாகன நிறுத்துமிடம் போன்ற வசதிகள் நியாயமான வாடகையில் வழங்கப்பட்டு வருகின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கல்வி நிதியை விடுவிக்காத விவகாரம்: சுப்ரீம் கோர்ட்டில்

# மத்திய அரசுக்கு எதிராக தமிழ்நாடு அரசு வழக்கு

## ரூ.2,291 கோடியை வழங்க உத்தரவிட வலியுறுத்தல்

புதுடெல்லி, மே 22-

**சமக்ர சிக்ஷா திட்டத்தின் (ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி திட்டம்) கீழ் கல்வி நிதியில் ஆண்டு தோறும் ரூ.2000 கோடிக்கும் அதிகமான பங்கை மத்திய அரசு நிறுத்தி வைத்துள்ளதாக குற்றம் சாட்டி சுப்ரீம் கோர்ட்டில் தமிழக அரசு வழக்கு தாக்கல் செய்துள்ளது. தமிழக அரசு தாக்கல் செய்த மனுவில் மத்திய அரசு ரூ.2291 கோடியை செலுத்த உத்தரவிட வேண்டும் என்று தெரிவித்துள்ளது.**

இந்த மனுவில், "பி.எம். ஸ்ரீ திட்டத்துக்கான நிதியை தமிழக அரசுக்கு மத்திய அரசு ஒதுக்கவில்லை. தேசியக் கல்விக் கொள்கையை ஏற்றால் மட்டுமே இந்த நிதி ஒதுக்கப்படும் என்று மத்திய அரசு கூறுகிறது. தேசியக் கல்விக் கொள்கை மும்மொழி திட்டத்தைக் கொண்டுள்ளது. ஆனால், தமிழ்நாடு இருமொழி கொள்கையை கொண்டுள்ளது. பி.எம். ஸ்ரீ பள்ளிகள் திட்டம், மாநிலத்தில் தேசிய கல்விக் கொள்கையை முழுமையாக செயல்படுத்துவதை கட்டாயமாக்குகிறது.

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி (சமக்ர சிக்ஷா அபியான் - எஸ்.எஸ்.ஏ.) திட்டத்தின் கீழ் நிதி பெறும் மாநிலத்தின் உரிமையை மத்திய அரசு தடுத்து நிறுத்தியுள்ளது. கல்வி நிதியை நிறுத்துவது, கல்வி தொடர்பாக சட்டம் இயற்றுவதற்கான மாநிலத்தின் அரசியலமைப்பு அதிகாரத்தை அபகரிப்பதற்கு சமம். தேசியக் கல்விக் கொள்கையை மாநிலம் முழுவதும் முழுமையாக செயல்படுத்தவும், மாநிலத்தில் பின்பற்றப்படும் கல்வி முறையில் இருந்து விலகவும் மாநிலத்தை கட்டாயப்படுத்த மத்திய அரசு முயல்கிறது.

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி திட்டத்தின் கீழ் 2025-2026-ம் ஆண்டுக்கு தமிழ்நாட்டுக்கு ஒதுக்க வேண்டிய ரூ.2,151 கோடி வழங்கப்படாததால், இத்திட்டத்தை செயல்படுத்துவதை கடுமையாகப் பாதித்துள்ளது. நிதிப் பற்றாக்குறை மாநிலத்தில் 43,94,906 மாணவர்கள், 2,21,817 ஆசிரியர்கள் மற்றும் 32,701 ஊழியர்களையும் பாதித்துள்ளது.

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி திட்டத்தின் கீழ் செலவினங்களுக்காக வாரியம் மொத்தம் ரூ.3585.99 கோடியை ஒதுக்கியிருந்தது. ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி திட்டத்தின் கீழ் கல்வி நிதியை பெறுவதற்கான உரிமையை தேசிய கல்விக் கொள்கை, பி.எம். ஸ்ரீ ஆகியவற்றுடன் இணைப்பது அரசியலமைப்புக்கு எதிரானது, சட்டவிரோதமானது, தன்னிச்சையானது மற்றும் நியாயமற்றது என்று அறிவிக்க வேண்டும். மே 1, 2025 முதல் இந்த ஆணை நிறைவேற்றப்படும் தேதி வரை அசல் தொகையில் ஆண்டுக்கு 6% வட்டியுடன் சுப்ரீம் கோர்ட் நிர்ணயித்த குறிப்பிட்ட காலத்திற்குள் மத்திய அரசு ரூ.2291 கோடியை மாநிலத்திற்கு செலுத்த உத்தரவிட வேண்டும். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஆபரேஷன் சிந்தூர் குறித்து விளக்கம்:

# கனிமொழி தலைமையிலான குழு இன்று ரஷ்யா பயணம்

புதுடெல்லி, மே 22-

**ஆபரேஷன் சிந்தூர் குறித்து விளக்கமளிக்க உலக நாடுகளுக்கு புறப்பட்ட முதல் எம்.பி.க்கள் குழு. கனிமொழி எம்.பி. தலைமையிலான குழு இன்று (22-ம் தேதி) ரஷ்யா புறப்பட்டு செல்கிறது.**



பாகிஸ்தான் மீதான தாக்குதல் நடவடிக்கை முடிவுக்கு வந்தாலும், பயங்கரவாதத்துக்கு எதிரான நிலைப்பாட்டில் இந்தியா உறுதியாக உள்ளது. பாகிஸ்தான் ஆதரவு பயங்கரவாத விவகாரத்தில், உலக நாடுகளின் ஆதரவை திரட்ட அனைத்துக்கட்சி குழுக்களை அனுப்பி வைக்க மத்திய அரசு திட்டமிட்டது.

அதன்படி, பா.ஜ.க. எம்.பி.க்கள் ரவிசங்கர் பிரசாத், பைஜெயந்த் பாண்டா, காங்கிரஸ் எம்.பி. சசிதரூர், ஐக்கிய ஜனதாதளம் எம்.பி. சஞ்சய் ஜா, தி.மு.க. எம்.பி. கனிமொழி, தேசியவாத காங்கிரஸ் (சரத்பவார்) எம்.பி. சுப்ரியா சுலே, சிவசேனா எம்.பி. ஸ்ரீ காந்த் ஷிண்டே ஆகியோர் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது. இவர்களில் 4 பேர் தேசிய ஜனநாயக கூட்டணியையும், 3 பேர் 'இந்தியா' கூட்டணியையும் சேர்ந்தவர்கள்.

ஒவ்வொரு குழுவிலும் 6 அல்லது 7 எம்.பி.க்கள் இடம் பெற்றுள்ளனர். பல்வேறு கட்சிகளை சேர்ந்த அனுராக் தாக்குர், அபராஜிதா சாரங்கி, மணீஷ் திவாரி, அமர்சிங், அசாதுதின் ஒவைசி, ராஜீவ் பிரதாப் ரூடி, சமிக் பட்டாச்சார்யா, பிரிஜ் லால், சர்பராஸ் அகமது, பிரியங்கா சதுர்வேதி, விக்ரம்ஜித் சவ்னி, சஸ்மித் பத்ரா, புவனேஸ்வர் கலிடா உள்ளிட்ட எம்.பி.க்கள் இக்குழுக்களில் இடம் பெற்றுள்ளனர். அந்த குழுக்களில் திறமையான தூதரக அதிகாரிகளும் இடம் பெறுவார்கள். ஒவ்வொரு குழுவும் 4 அல்லது 5 நாடுகளுக்கு செல்லும். பயங்கரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டை விளக்கி சொல்லும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், பாகிஸ்தானின் அத்துமீறல் குறித்தும், ஆபரேஷன் சிந்தூர் தொடர்பாகவும், உலக நாடுகளிடம் விளக்கம் அளிக்க ஐக்கிய ஜனதா தள எம்.பி. சஞ்சய் ஜா தலைமையில் 9 பேர் கொண்ட முதல் எம்.பி.க்கள் குழு தனது பயணத்தை தொடங்கியுள்ளது.

டெல்லி விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட இந்த குழு ஜப்பான், தென்கொரியா, மலேசியா, இந்தோனேசியா, சிங்கப்பூர் உள்ளிட்ட நாடுகளுக்கு பயணம் செய்து இந்தியாவின் நிலைபாடு குறித்து விளக்கம் அளிக்கிறது.

கனிமொழி எம்.பி. தலைமையிலான குழு இன்று (22-ம் தேதி) ரஷ்யா புறப்பட்டு செல்கிறது. இந்த குழு அங்கிருந்து ஸ்பெயின், கிரீஸ், லாத்வியா, சுலோவேனியா ஆகிய நாடுகளுக்கு பயணம் மேற்கொள்கிறது. கனிமொழி எம்.பி. இடம் பெற்ற இந்த குழு பயணத்தை முடித்துக் கொண்டு ஜூன் 2-ம் தேதி நாடு திரும்புகிறது.

### கண்டலேறு அணையிலிருந்து திறக்கப்பட்ட

# கிருஷ்ணா நதி நீர் தமிழகம் வந்தது

திருவள்ளூர், மே 22-

**தெலுங்கு - கங்கை கால்வாய் மதகு சீரமைப்பு பணிக்காக நிறுத்தப்பட்டிருந்த கிருஷ்ணா நதி நீர், மீண்டும் கண்டலேறு அணையில் இருந்து திறக்கப்பட்டு நேற்று (மே 21) காலை தமிழக எல்லையை வந்தடைந்தது.**



சென்னையின் குடிநீர் தேவைக்காக, தெலுங்கு கங்கை திட்டத்தின் கீழ் ஆந்திர அரசு ஆண்டு தோறும் ஜூலை முதல் அக்டோபர் வரை 8 டி.எம்.சி., ஜனவரி முதல் ஏப்ரல் வரை 4 டி.எம்.சி. என, 12 டி.எம்.சி. கிருஷ்ணா நதி நீரை தமிழகத்துக்கு வழங்கவேண்டும். அந்த வகையில், ஆந்திர அரசு, சென்னையின் குடிநீர் தேவைக்காக ஜனவரி முதல் ஏப்ரல் வரை வழங்கவேண்டிய கிருஷ்ணா நதி நீரை வழங்கவேண்டும் எனக் கோரி, தமிழக நீர்வளத்துறை அதிகாரிகள், ஆந்திர நீர்வளத் துறை அதிகாரிகளுக்கு கடிதம் எழுதினர்.


இதையடுத்து, சென்னைக் குடிநீருக்காக ஆந்திர மாநிலம் - கண்டலேறு அணையில் இருந்து, தெலுங்கு - கங்கை திட்ட கால்வாய் மூலம் கிருஷ்ணா நதி நீரை கடந்த மார்ச் 24-ம் தேதி ஆந்திர நீர்வளத்துறையினர் திறந்தனர். கண்டலேறு அணையிலிருந்து திறக்கப்பட்ட கிருஷ்ணா நதி நீர், 152 கி.மீ., தூரம் பயணித்து, தமிழக எல்லையான திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை அருகே தாமரைக் குப்பம் ஜீரோ பாயிண்டுக்கு கடந்த மார்ச் 28-ம் தேதி காலை வந்தடைந்தது. தொடர்ந்து, அந்த நீர், கடந்த மார்ச் 30-ம் தேதி பூண்டி ஏரியை சென்றடைந்தது.

இந்நிலையில், திறக்கப்பட்டு வந்த கிருஷ்ணா நதி நீர், தெலுங்கு - கங்கை கால்வாயில், ஆந்திர மாநிலம் - ஸ்ரீ காளஹஸ்தியில் மதகு சீரமைப்பு பணி மேற்கொள்வதற்காக ஏப்.19-ம் தேதி ஆந்திர நீர்வளத்துறையினர் நிறுத்தினர். இதனால், கிருஷ்ணா நதி நீர் தமிழக எல்லைக்கு வருவது ஏப்.24-ம் தேதி, முற்றிலுமாக நின்று போனது.

இச்சூழலில், தெலுங்கு-கங்கை கால்வாய் மதகு சீரமைப்பு பணி முடிவடைந்ததையடுத்து, மே 5-ம் தேதி மீண்டும் சென்னை குடிநீருக்காக கிருஷ்ணா நதி நீரை கண்டலேறு அணையில் இருந்து ஆந்திர நீர்வளத்துறையினர் , திறந்தனர். தொடக்கத்தில் விநாடிக்கு 500 கன அடி என, திறக்கப்பட்ட கிருஷ்ணா நதி நீரின் அளவு படிப்படியாக அதிகரிக்கப்பட்டு, கடந்த 19-ம் தேதி விநாடிக்கு 2,500 கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

கண்டலேறு அணையில் இருந்து திறக்கப்பட்ட கிருஷ்ணா நதி நீர், 4 அல்லது 5 நாட்களில் தமிழக எல்லையான தாமரைக்குப்பம் ஜீரோ பாயிண்டுக்கு வரவேண்டிய நிலையில், 10 நாட்கள் தாமதமாக நேற்று காலை 7 மணிக்கு வந்தடைந்தது. அப்போது, தமிழக எல்லைக்கு வந்த கிருஷ்ணா நதி நீரின் அளவு விநாடிக்கு 50 கன அடியாக இருந்தது என, கூறும் தமிழக நீர்வள ஆதாரத் துறையினர், இரவுக்குள் (நேற்று) 25 கி.மீ., தூரம் பயணித்து பூண்டி ஏரிக்கு கிருஷ்ணா நதி நீர் சென்றடையும் என தெரிவித்துள்ளனர். மேலும், கண்டலேறு அணையில் இருந்து, மீண்டும் திறக்கப்பட்ட கிருஷ்ணா நதி நீர், தமிழக எல்லைக்கு 10 நாட்கள் தாமதமாக வந்தடைந்ததற்கு தெலுங்கு - கங்கை கால்வாயில், ஸ்ரீகாளஹஸ்தி முதல் சத்தியவேடு வரையான பகுதிகளில், ஆந்திர விவசாயிகள் சட்ட விரோதமாக மின்மோட்டார்கள் மூலம் கிருஷ்ணா நதி நீரை உறிஞ்சியதுதான் காரணம் என கூறப்படுகிறது.


**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
| --- | --- |
| 410.19 | 129.55 |
| பாயிண்ட் 81,596.63 | பாயிண்ட் 24,813.45 |




**தங்கம்**
1 சவரன் ₹71,440
1 கிராம் ₹8,930



**வெள்ளி**
1 கிலோ ₹111,000
1 கிராம் ₹111.00

**டாலர்** ₹85.59

**பெட்ரோல்** ₹102.63
**டீசல்** ₹94.24



# காஸாவினுள் மனிதாபிமான உதவிகளை அனுமதியுங்கள்
## இஸ்ரேலுக்கு போப் வலியுறுத்தல்

**வாடிகன் சிட்டி, மே 22-**

காஸாவினுள் போதுமான அளவிற்கு அத்தியாவசிய மனிதாபிமான உதவிகள் செல்ல அனுமதிக்கப்பட வேண்டுமென போப் பதினான்காம் லியோ வலியுறுத்தியுள்ளார்.

வாடிகன் நகரத்தின் தலைவரும், கத்தோலிக்க திருச்சபையின் தலைமை மதகுருவுமான போப் பதினான்காம் லியோ, புனித பீட்டர் சதுக்கத்தில் தனது முதல் வார உரையை மக்களிடம் ஆற்றினார். அப்போது, போரில் பாதிக்கப்பட்ட காஸாவினுள் மனிதாபிமான உதவிகள் செல்வதற்கு இஸ்ரேல் விதித்துள்ள தடை விலக்கப்பட்டு அங்கு வாழும் மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய உதவிகள் வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளார். இத்துடன், காஸா பகுதியின் நிலைமை மிகவும் வருத்தமளிப்பதுடன், வலி மிகுந்ததாகவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.



இதுகுறித்து அவர் கூறியதாவது: குழந்தைகள், முதியவர்கள் மற்றும் நோயாளிகள் இதயத்தை நொறுக்கும் விலைக்கு முற்றுப்புள்ளி வைத்து, காஸாவினுள் போதுமான அத்தியாவசிய மனிதாபிமான உதவிகள் செல்ல அனுமதிக்க வேண்டும் எனும் எனது வேண்டுகோளை மீண்டும் புதுப்பிக்கிறேன்” என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த மே 8 ஆம் தேதியன்று தேர்ந்தெடுக்கப்பட்ட அமெரிக்காவைச் சேர்ந்த போப் பதினான்காம் லியோ, இஸ்ரேல் - ஹமாஸ் போரை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்.

# போரை நிறுத்த தயார்: அமெரிக்க அதிபரிடம் தெரிவித்த ரஷ்ய அதிபர்

**மாஸ்கோ, மே 22-**

உக்ரைனுக்கு எதிரான போரை முடிவுக்கு கொண்டு வர ரஷ்யா தயாராக இருப்பதாக அமெரிக்க அதிபர் ட்ரம்புடன் 2 மணி நேர தொலைபேசி உரையாடலுக்குப் பிறகு ரஷ்ய அதிபர் புதின் தெரிவித்தார்.

உக்ரைன் மீது ரஷ்யா கடந்த 2022 பிப்ரவரியில் போர் தொடுத்தது. இதற்கு உக்ரைனும் பதில் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்நிலையில் அமெரிக்க அதிபராக டொனால்டு ட்ரம்ப் பதவியேற்ற பிறகு இப்போரை நிறுத்த உக்ரைன், ரஷ்யா ஆகிய இரு தரப்புக்கும் அழுத்தம் கொடுத்து வருகிறார். என்றாலும் இதில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. இந்நிலையில் ரஷ்ய அதிபர் விளாடிமர் புதினுடன் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தொலைபேசியில் 2 மணி நேரம் பேசினார். அப்போது ரஷ்யா - உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வருவது தொடர்பாக இரு தலைவர்களும் விரிவாக விவாதித்ததனர்.

இதன் பிறகு செய்தியாளர்களிடம் புதின் கூறுகையில், “மூன்று ஆண்டு கால போரை முடிவுக்கு கொண்டு வர உக்ரைனுடன் இணைந்து பணியாற்ற ரஷ்யா தயாராக இருப்பதாக அமெரிக்க அதிபரிடம் கூறியுள்ளோம். ஆனால் அமைதியை நோக்கிய எந்தவொரு முன்னேற்றத்துக்கும் விதிமுறைகளை நிர்ணயிப்பது அவசியம். ரஷ்யா உடனடியாக நிபந்தனையற்ற 30 நாள் போர் நிறுத்தத்தை ஏற்க வேண்டும் என்று உக்ரைன், அதன் ஐரோப்பிய கூட்டாளிகள் மற்றும் அமெரிக்கா இணைந்து வலியுறுத்தியுள்ளன. பொருத்தமான ஒப்பந்தங்கள் எட்டப்பட்டால், போர்நிறுத்தம் நிச்சயமாக சாத்தியமாகும். பிரச்சினைக்கான மூல காரணங்கள் அகற்றப்பட வேண்டும் என்பதே எங்களது நிலைப்பாடாகும் என்றார்.

## விண்வெளியில் இருந்து தாக்கினாலும் பாதுகாப்பு:
# கோல்டன் டோம் அமைக்க அதிபர் டிரம்ப் தீவிர ஆர்வம்

**வாஷிங்டன், மே 22-**

அமெரிக்காவில் ஏவுகணை தாக்குதலில் இருந்து தற்காத்து கொள்ளும் வலிமையான பாதுகாப்பு அமைப்புகள் உள்ளன. அலாஸ்காவில், இடைமறித்து தாக்கும் அமைப்புகள் உள்ளன. இதுதவிர, வான் பாதுகாப்பு அமைப்புகளும் உள்ளன. அவற்றுடன் மற்றொரு புதிய பாதுகாப்பு அமைப்பாக கோல்டன் டோம் ஒன்றை நிறுவ அமெரிக்கா முடிவு செய்துள்ளது.




இதுபற்றி அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் வெள்ளை மாளிகையில் உள்ள ஓவல் அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் கூறும்போது, குடியரசு கட்சி உறுப்பினரான அமெரிக்காவின் 40-வது ஜனாதிபதி ரொனால்டு ரீகன் இதனை அமைக்க விரும்பினார் என்றார்.

வெளிநாட்டு அச்சுறுத்தல்களுக்கு எதிராக ஏவுகணை பாதுகாப்பு கவசம் ஒன்றை கட்டமைப்பது என அமெரிக்க மக்களுக்கு, தேர்தல் பிரசாரத்தின்போது நானும் வாக்குறுதி அளித்திருந்தேன் என மீண்டும் கூறினார். இதன்படி, ரூ.14 லட்சத்து 97 ஆயிரத்து 833 கோடி (175 பில்லியன் அமெரிக்க டாலர்) திட்ட மதிப்பில் இந்த கோல்டன் டோம் கட்டப்பட உள்ளது என கூறினார். அதற்கான திட்ட வடிவமைப்பு இறுதி செய்யப்பட்டு விட்டது. இதனை விண்வெளி நடவடிக்கைகளுக்கான துணை தலைவர்கமைக்கேல் கட்லெயின் மேற்பார்வை செய்வார்.

இந்த டோம் முழு அளவில் கட்டி முடிக்கப்பட்டதும், உலகின் எந்த பகுதியில் இருந்து ஏவுகணைகள் ஏவப்பட்டாலும் அதனை இடைமறித்து தாக்கும் திறன் பெற்றிருக்கும். விண்வெளியில் இருந்து தாக்கினாலும் கூட அது முறியடிக்கப்படும் என்று டிரம்ப் கூறினார். இந்த திட்டம் முற்றிலும் அமெரிக்காவிலேயே உருவாக்கப்படும் என வலியுறுத்திய டிரம்ப், இஸ்ரேலின் அயன் டோமை அது ஒத்திருக்கும் என்றும் கூறினார்.

# புதுச்சேரியில் தாலுகா அலுவலகங்கள் அனைத்தும் சனிக்கிழமை செயல்படும்
## மாவட்ட கலெக்டர் அறிவிப்பு

**புதுச்சேரி, மே 22-**

புதுச்சேரியில் அனைத்து தாலுகா அலுவலகங்களும் சனிக்கிழமை செயல்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி மாவட்ட கலெக்டர் குலோத்துங்கன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:- 2025-26 கல்வியாண்டிற்கான பள்ளி மற்றும் கல்லூரி சேர்க்கை பருவத்தை முன்னிட்டு, குடியிருப்பு, வருமானம் மற்றும் சாதி சான்றிதழ்களுக்கு விண்ணப்பங்கள் பெருமளவில் பெறப்பட்டு வருகின்றன.

இதனால் மாணவர்களும், அவர்களது பெற்றோர்களும் தாலுகா அலுவலகங்களில் சான்றிதழ்கள் பெறும் போது சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இந்த நிலையில், மாணவர்களின் விண்ணப்பங்கள் சரியான நேரத்தில் பரிசீலிக்கப்பட்டு, தேவையான சான்றிதழ்கள் வழங்கப்படுவதை உறுதி செய்ய, புதுச்சேரி மாவட்டத்தில் உள்ள அனைத்து தாலுகா அலுவலகங்களும் மாணவர்களுக்காக மட்டும் (24.05.2025), (31.05.2025) மற்றும் (07.06.2025) ஆகிய சனிக்கிழமைகளில் செயல்படும்.

மேலே குறிப்பிட்டுள்ள நாட்களில் வட்டாட்சியர் / தாலுகா அலுவலகங்களில் விண்ணப்பதாரர்களுக்கான இருக்கை, குடிநீர் போன்ற தேவையான ஏற்பாடுகள் செய்ய அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மாணவர்களின் நலனுக்காகவும், கடைசி நேரத்தில் பொதுமக்களுக்கு ஏற்படும் சிரமங்களைத் தவிர்க்கும் வகையில் இந்த முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. எனவே, மாணவர்களும் அவர்களது பெற்றோர்களும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தங்கம் விலை மீண்டும் உயர்வு

**சென்னை, மே 22-**

தங்கம் விலை நேற்று (மே.21) அதிரடியாக பவுனுக்கு ரூ.1,760 உயர்ந்து ஒரு பவுன் ரூ.71,440-க்கு விற்பனையானது.

சர்வதேச பொருளாதார நிலவரத்துக்கு ஏற்ப, தங்கம் விலை உயர்ந்தும், குறைந்தும் வருகிறது. கடந்த ஏப்.22-ம் தேதி ஒரு பவுன் தங்கம் ரூ.74,320 ஆக உயர்ந்து, புதிய உச்சத்தை தொட்டது. அதன்பிறகு, தங்கம் விலை ஏற்ற இறக்கமாக இருந்து வருகிறது.

அந்த வகையில், சென்னையில் ஆபரணத்தங்கத்தின் விலை கடந்த 13-ம் தேதி (மே 13) காலை, மாலை என அடுத்தடுத்து 2 முறை உயர்ந்து அதிர்ச்சியை ஏற்படுத்தியது. காலையில் பவுனுக்கு ரூ.120, மாலையில் ரூ.720 என மொத்தமாக, பவுனுக்கு ரூ.840 உயர்ந்து ரூ.70,840-க்கு விற்பனையானது. அதன் பின்னர் சற்றே குறையத் தொடங்கியது. (மே 15) 22 காரட் ஆபரணத் தங்கம் ஒரு பவுன் ரூ.68,660-க்கும் விற்பனை செய்யப்பட்டது. நீண்ட காலத்துக்குப் பின்னர் பவுன் ரூ.69,000-க்கும் கீழ் குறைந்தது.

பின்னர் மீண்டும் தங்கம் விலை படிப்படியாக உயரத் தொடங்கியது. அதன்படி, நேற்று (புதன்கிழமை) சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கம் கிராமுக்கு ரூ.220 உயர்ந்து ஒரு கிராம் ரூ.8,930-க்கும், பவுனுக்கு ரூ.1,760 உயர்ந்து ஒரு பவுன் ரூ.71,440-க்கும் விற்பனையானது. வெள்ளி விலையும் நேற்று அதிரடியாக உயர்ந்து விற்பனையானது.கிராமுக்கு ரூ.3 உயர்ந்து ஒரு கிராம் வெள்ளி ரூ.111-க்கும், ஒரு கிலோ கட்டி வெள்ளி ரூ.1,11,111-க்கும் விற்பனையானது.

## அரிசி வாங்குவது குறித்து சர்ச்சை கருத்து;
# மக்களிடம் மன்னிப்பு கேட்ட ஜப்பான் வேளாண் அமைச்சர்

**டோக்கியோ, மே 22-**


அரிசி வாங்குவது குறித்த சர்ச்சை கருத்தை தொடர்ந்து வேளாண் மந்திரி டகு இடொ தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

ஜப்பான் வேளாண் துறை மந்திரி டகு இடொ. இவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கியூஷா தீவில் உள்ள சாஹா மாகாணத்தில் நடந்த நிகழ்ச்சியில் பங்கேற்றார். நிகச்சியில் பேசிய அவர், நான் எப்போதும் கடைக்கு சென்று அரிசி வாங்குவதில்லை. எனது ஆதரவாளர்கள், கட்சிக்காரர்கள் எனக்கு அரிசியை பரிசாக கொடுப்பார்கள் என்றார்.

இதனிடையே, ஜப்பானில் அரிசி விலை உயர்ந்து வரும் நிலையில் மந்திரியின் கருத்து பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. ஜூலை மாதம் அந்நாட்டில் நாடாளுமன்ற தேர்தல் நடைபெற உள்ள நிலையில் வேளாண் மந்திரியின் பேச்சு அரசுக்கு எதிரான விமர்சனங்களை மேலும் அதிகரித்தது. மேலும், டகு ராஜினாமா செய்யாவிட்டால் அவர் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவரப்படும் என்று எதிர்க்கட்சிகள் எச்சரிக்கை விடுத்தன.

இந்நிலையில், அரிசி வாங்குவது குறித்த சர்ச்சை கருத்தை தொடர்ந்து வேளாண் மந்திரி டகு இடொ தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார். மேலும், தனது பேச்சுக்கு நாட்டு மக்களிடையே அவர் மன்னிப்பும் கேட்டுள்ளார்.

**22-05-2025**



# இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** பெண்களின் நட்பால் புதிய சுகம் ஏற்படும். அக்கறையுடன் படித்து மாணவர்கள் கல்வியில் தேர்ச்சி பெறுவர். தொழில், தொல்லைகள் குறைந்து, வியாபாரத்தில் எல்லைகள் விரியும்.

**ரிஷபம்:-** புதிய உத்தியோக வாய்ப்புகளை எதிர்பார்க்கலாம். அனைத்துப் பணிகளும் அனுகூலமான திசைகளிலும் நகரும். அரசு அதிகாரிகள் மூலம் எதிர்பார்த்த காரியங்களில் வெற்றி மேல் வெற்றி வரும்.

**மிதுனம்:-** வாழ்க்கையில் புதிய மாற்றங்களால் முன்னேற்றம் ஏற்படும். புண்ணிய காரியங்களில் ஈடுபாடு அதிகரிக்கும். இனிய உல்லாசப் பயணங்கள் ஏற்படும். சுகம் சந்தோஷம் கூடும்.

**கடகம்:-** விளையாட்டாக இருக்காமல் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டிய நாள். பிறர் துன்பத்தில் மகிழ்ச்சி காணாதீர்கள். உயர் அதிகாரிகளிடம் பணிவுடன் நடந்தால் உயர்வு உண்டு.

**சிம்மம்:-** சாதுர்யமான பேச்சால் சகலமானவர்களையும் சமாளித்துவிடுவீர்கள். வளமான வாழ்வும், வாகன யோகமும் உண்டு. வியாபாரத்தில் கவனத்துடன் செயல்பட்டால் இழப்பைத் தவிர்க்கலாம்.

**கன்னி:-** வெற்றியைத் தவிர வேறொன்றுமில்லை. நண்பர்களின் உதவி நலம் பயக்கும். வீடு, மனை வாங்கும் எண்ணங்கள் மனதில் எழுந்தாலும், எதிர்பார்த்த கடன்கள் வரத் தாமதமாகும்.

**துலாம்:-** ஆரோக்கியத்தை பொருத்து குழந்தைகளை நல்ல அக்கறையுடன் கவனிப்பது முக்கியம். வெளியூர் பயணங்களில் கவனம் தேவை. அமைதியும், ஆதரவான பேச்சு எதிர்ப்புக்களை குறைக்கும்.

**விருச்சிகம்:-** வேலை அதிகமாக வேண்டாத அலைச்சல்கள் ஓய்வு குறையும். அம்மாவின் ஆரோக்கியத்தை அக்கறையுடன் பேண வேண்டிய நாள். தொழிலில் புதிய முயற்சிகள் கை விடுவது நல்லது.

**தனுசு:-** மகிழ்ச்சியான மனநிலை தேகத்தில் தெம்பு தரும். மனைவியின் ஒத்துழைப்பால் மனம் குளிரும். குழந்தைகள் பால் பாசம் பொழிவார்கள். தொழில் வளர்ச்சியில் திருப்தி நிலவும்.

**மகரம்:-** மனைவியின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. எதிர்பார்த்த அளவுக்கு வரவினங்கள் இருக்காது. புதிய தொழில் முதலீடுகளை ஒத்திப் போடுவது நல்லது. வார்த்தைகளை அளந்து பேசுக.

**கும்பம்:-** ஆசைகள் நிறைவேறி அனைத்து விஷயங்களிலும் மனத்திருப்தி ஏற்படும். புத்தி சாதுர்யமும், வாக்கு வன்மையும் ஓங்கி வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். இனிய பயணங்களால் இன்பம் பெருகும்.

**மீனம்:-** அன்றாட வாழ்க்கையில் எதிர்பார்த்த மாற்றங்கள் வந்து ஏற்றம் தரும். குழப்பவாதி மனைவியால் உறவுகளிடையே மனக்கசப்பு ஏற்படும். வாடிக்கையாளர் மனம் அறிந்து நடந்தால் இலாபம் அதிகரிக்கும்.

## வாடிக்கையாளர்களிடம்
# இந்தியில் பேசிய வங்கி மேனேஜருக்கு கர்நாடகா முதல்வர் கடும் கண்டனம்

**கர்நாடகா, மே 22-**

வாடிக்கையாளரிடம் இந்தியில் பேசிய வங்கி மேனேஜருக்கு கர்நாடகா முதல்வர் சித்தராமையா கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

கர்நாடகாவில் கன்னடம், ஆங்கிலத்தில் பேச மறுத்து இந்தியில் மட்டுமே தான் பேசுவேன் என வாடிக்கையாளர்களிடம் முறையிட்ட எஸ்.பி.ஐ. வங்கி மேலாளருக்கு அம்மாநில முதலமைச்சர் சித்தராமையா கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இது தொடர்பான அவரது எக்ஸ் பதிவில், “கன்னடம், ஆங்கிலத்தில் பேச மறுத்து மக்களை அலட்சியப்படுத்திய எஸ்.பி.ஐ. வங்கி மேனேஜரின் செயல் கடுமையாக கண்டிக்கத்தக்கது. இத்தகைய சம்பவங்கள் இனி நடக்கக் கூடாது. வங்கி ஊழியர்கள் அனைவரும் மக்களை கண்ணியத்துடன் அணுக வேண்டும், மாநில மொழியில் பேச முயற்சிக்க வேண்டும்.

இந்தியில் பேசிய ஊழியரை பணி இடமாற்றம் செய்த எஸ்.பி.ஐ. வங்கி நிர்வாகத்தின் விரைவான நடவடிக்கையை பாராட்டுகிறேன்.

வங்கி ஊழியர்களுக்கு மாநில கலாசார, மொழியை மதிப்பதற்கான விழிப்புணர்வு வகுப்புகளை மத்திய நிதியமைச்சகம் நடத்த வேண்டும் என்று தெரிவித்தார்.

## சென்னையில் இருந்து புறப்பட இருந்த
# விமானங்கள் திடீர் ரத்து; பயணிகள் கடும் அவதி

**சென்னை, மே 22-**

சென்னையில் இருந்து பல்வேறு இடங்களுக்கு புறப்பட தயாராக இருந்த விமானங்கள் திடீர் என்று ரத்து செய்யப்பட்டது. இதனால் பயணிகள் அவதி அடைந்தனர்.

சென்னை விமான நிலையத்தில் இருந்து டெல்லி, கொச்சி, புனே, ஹைதராபாத் உள்ளிட்ட நகரங்களுக்குச் செல்ல இருந்த 10 ஏர் இந்தியா மற்றும் ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானங்கள் திடீரென ரத்து செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், ஏர் இந்தியா நிறுவனம் எந்த முன்னறிவிப்பும் இன்றி திடீரென ரத்து செய்யப்பட்டதால் பயணிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். விமானங்கள் திடீர் ரத்துக்கான காரணம் குறித்து விமான நிறுவனங்கள் அறிவிப்பில் கூறியிருப்பதாவது:-

நிர்வாக காரணங்களால் விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளதாக, சென்னை விமான நிலைய அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளன. ஏர் இந்தியா மற்றும் ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானங்கள் திடீரென ரத்து செய்யப்பட்டதால் பயணிகள் கடும் அவதி அடைந்துள்ளனர்.

# உக்ரைன் ஆக்கிரமித்த பகுதிகளுக்கு ரஷ்ய அதிபர் புதின் திடீர் பயணம்

**ரஷ்யா, மே 22-**

உக்ரைன் படைகள் ஆக்கிரமித்த குர்ஸ்க் பிராந்தியத்திற்கு ரஷ்யா அதிபர் பயணம் செய்துள்ளார்.

ரஷ்யா கடந்த 2022-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் திடீரென உக்ரைன் மீது படையெடுத்தது. இரு நாட்டின் எல்லைகளில் உள்ள உக்ரைனின் பெரும்பாலான இடங்களை ரஷ்யா கைப்பற்றியது. பின்னர் அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகள் (பிரான்ஸ், இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகள்) உதவியுடன் ரஷ்யாவுக்கு உக்ரைன் பதிலடி கொடுத்தது. சில இடங்களில் ரஷ்யா பின்வாங்கியது. பின்னர் தரைவழி தாக்குதலை குறைத்துக் கொண்ட ரஷ்யா, உக்ரைன் மீது வான்வழி தாக்குதலை நடத்தி வருகிறது. இதற்கு உக்ரைனும் பதிலடி கொடுத்து வருகிறது.

இதற்கிடையே யாரும் எதிர்பார்க்காத வகையில் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம், ரஷ்யாவின் குர்ஸ்க் பிராந்தியத்தில் உக்ரைன் படைகள் நுழைந்தது. அப்பிராந்தியத்தில் உள்ள பல்வேறு நகரங்களை கைப்பற்றியது. இது ரஷ்யாவுக்கு மிகப்பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியது. 2-வது உலகப் போருக்குப்பின் ரஷ்யா நிலப்பரப்பில் அடுத்த நாட்டின் ராணுவம் நுழைவது இதுவே முதல்முறையாகும். இதனால் உக்ரைன் படைகளை விரட்டியடிக்க ரஷ்யா ராணுவம் கடுமையாக சண்டையிட்டது.

கடந்த 26-ம் தேதி, குர்ஸ்க் பிராந்தியத்தில் இருந்து உக்ரைன் படைகள் முற்றிலுமாக விரட்டியடிக்கப்பட்டது என ரஷ்ய ராணுவம் தெரிவித்தது. ஆனால் உக்ரைன் அதிகாரிகள் இதை மறுத்தனர். இந்த நிலையில் ரஷ்ய அதிபர் புதின் குர்ஸ்க் பிராந்தியம் சென்றதாக, ரஷ்ய அதிபர் மாளிகை தெரிவித்துள்ளது. குர்ஸ்க் அணுஆயுத நிலையம்-2 கட்டப்பட்டு வருகிறது. இதை புதின் பார்வையிட்டுள்ளார். மேலும், குறிப்பிட்ட தன்னார்வலர்களுடன் ரகசியமாக பூட்டிய அறையில் ஆலோசனை நடத்தியுள்ளார். அத்துடன் பொறுப்பு கவனர் அலேக்சாண்டர் கின்ஸ்டெய்ன் உடனும் பேசியுள்ளார்.

# கார் - பஸ் மோதி விபத்து: கர்நாடகாவில் 6 பேர் பலி

**பெங்களூரு, மே. 22-**

கர்நாடகாவில் ஸ்கார்பியோ- பஸ்சில் மோதிய விபத்தில், ஒரே குடும்பத்தை சேர்ந்த 5 பேர் உட்பட 6 பேர் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

கர்நாடகாவின் விஜயபுராவில் கட்டுப்பாட்டை இழந்த மகேந்திரா ஸ்கார்பியோ வாகனம் சாலை தடுப்பு மற்றும் பஸ்சில் மோதி விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில், காரில் பயணம் செய்த ஒரே குடும்பத்தை சேர்ந்த 5 பேர் மற்றும் பஸ் டிரைவர் என மொத்தம் 6 பேர் உயிரிழந்தனர். மேலும், 7 பேர் பலத்த காயம் அடைந்துள்ளனர். இவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர். இதில் சிலர் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். மனகுலி கிராமத்திற்கு அருகிலுள்ள தேசிய நெடுஞ்சாலையில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது, மேலும் இறந்தவர்களின் அடையாளங்கள் காணும் பணி நடந்து வருகிறது. இது குறித்து மீட்பு படை அதிகாரி கூறியதாவது:-

துரதிர்ஷ்டவசமாக, இந்த விபத்தில் ஆறு பேர் உயிரிழந்துள்ளனர். 5 பேருடன் சென்று கொண்டிருந்த ஸ்கார்பியோ கட்டுப்பாட்டை இழந்து விபத்தில் சிக்கியது. விபத்திற்கான காரணம் குறித்து விசாரணை நடந்து வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

# ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல்..? விலை உயரும் கச்சா எண்ணெய்

**வாஷிங்டன், மே 22-**

ஈரானின் அணுசக்தி நிலையங்கள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தத் தயாராகி வருவதாக வெளியாகும் தகவல் காரணமாக கச்சா எண்ணெய் விலை உயர தொடங்கி உள்ளது.

இஸ்ரேலுக்கும் மற்றும் பாலஸ்தீனைச் சேர்ந்த ஹமாஸ் அமைப்பிற்கும் இடையே கடந்த ஓராண்டாகப் போர் நடந்து கொண்டிருக்கிறது. காசா பகுதியை தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வருவோம் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு திட்டவட்டமாக கூறியுள்ளார். இஸ்ரேல் படையினர் காசாவில் தாக்குதலை தீவிரப்படுத்தி உள்ளனர்.

இந்நிலையில், ஈரானின் அணுசக்தி நிலையங்கள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தத் தயாராகி வருவதாக அமெரிக்க உளவுத்துறை தெரிவித்துள்ளது. இதனால் சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர தொடங்கி உள்ளது. கச்சா எண்ணெய் விலை 1%க்கும் அதிகமாக உயர்ந்தன.

# எல்லையில் ஊடுருவ முயற்சி: பாகிஸ்தானியர் கைது

**பஞ்சாப், மே 22-**

பஞ்சாபின் அமிர்தசரஸ் மாவட்டத்தில் சர்வதேச எல்லையைத் தாண்டிய ஊடுருவ முயன்ற பாகிஸ்தானியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பிஎஸ்எப் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

செவ்வாய்க்கிழமை மாலை சர்வதேச எல்லையைத் தாண்ட முயற்சித்த நபரின் நடமாட்டத்தை எல்லை பாதுகாப்புப் படையினர் கவனித்துள்ளனர். உடனடியாக அவரை தடுத்து நிறுத்தினர். அமிர்தசரஸில் உள்ள கரிம்புரா கிராமத்தை ஒட்டிய எல்லைப் பகுதியிலிருந்து பாகிஸ்தானியர் கைது செய்யப்பட்டார். மேலும் விசாரணைக்காக அவர் உள்ளூர் போலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். சர்வதேச எல்லையில் பலத்த பாதுகாப்புப் போடப்பட்டுள்ள நிலையில் இச்சம்பவம் நடந்துள்ளது.

## பெண்கள் பணிபுரியும் அலுவலகங்களில்
# விசாகா கமிட்டி அமைக்காதது ஏன்? அரசுக்கு எடப்பாடி பழனிசாமி கேள்வி

**சென்னை, மே 22-**
பெண்கள் பணிபுரியும் அலுவலகங்களில் விசாகா கமிட்டி அமைக்காதது ஏன்? என்று எடப்பாடி பழனிசாமி கேள்வி எழுப்பியுள்ளார்.

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

பெண்கள் மரியாதையுடனும், கௌரவத்துடனும், பாதுகாப்புடனும் வாழத் தகுதியற்ற மாநிலமாக தமிழ்நாடு மாறிவிட்டதற்கு மற்றும் ஒரு சம்பவம் சென்னை அரசு பல் மருத்துவக் கல்லூரியில் நடந்திருப்பது அதிர்ச்சி அளிக்கிறது.

கல்வியைக் கற்பிக்கும் ஒருசில ஆசிரியர்கள் தங்கள் வரம்புகளை மீறி உளவியல் ரீதியாக பெண்களை, குறிப்பாக உடன் பணியாற்றும் ஆசிரியைகளையும், மாணவிகளையும் தகாத வார்த்தைகளில் பேசுவதும், வரம்பு மீறிய செயல்களில் ஈடுபடுவதும் இப்பொழுது வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

'சென்னை பல் மருத்துவக் கல்லூரியில்' பணிபுரியும் ஒரு துறையின் தலைவர்,



உடன் பணியாற்றும் பேராசிரியர்கள் மற்றும் கல்வி கற்கும் மாணவிகளிடம் ஆபாச வார்த்தைகளைப் பேசுவது; உடல் உருவ அமைப்பை கேலி செய்வது; அவர்களை வீடியோ படங்கள் எடுப்பது;

பேசுவதை ரெக்கார்டு செய்வது போன்ற தகாத செயல்களில் ஈடுபட்டு வருவதால், அக்கல்லூரியில் பணிபுரியும் ஆசிரியைகளும், மாணவிகளும் தினம் தினம் மன உளைச்சலைச் சந்தித்து அவதியுற்று வருகின்றனர்.

ஒரு துறையின் தலைவர் இவ்வாறு நடந்துகொள்வதை கண்டித்தும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டியும், பாதிக்கப்பட்ட பெண்கள் கடந்த 2024-ம் ஆண்டு மார்ச் மாதமே கல்லூரி நிர்வாகத்திடம், தகாத செயல்களில் ஈடுபடும் பேராசிரியரைப் பற்றி புகார் அளித்தும், பல் மருத்துவக் கல்லூரி நிர்வாகம் எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை;

அவரது செயல்களைக் கண்டிக்கவும் இல்லை. இதன் காரணமாக, பாதிக்கப்பட்ட ஒரு பேராசிரியை இந்த ஆண்டு (2025) ஜனவரி மாதம் தற்கொலை செய்துகொண்டுள்ளதாக நாளிதழ்களில் செய்திகள் வந்துள்ளன.

பெண்கள் பணிபுரியும் இடங்களில் `விசாகா கமிட்டி' அமைக்கப்பட வேண்டும் என்ற வழிகாட்டுதல் என்ன ஆனது? மாணவிகள் புகார் கொடுத்தும் ஒருவருட காலமாக ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்கு எந்த அரசியல் தலைவரின் தலையீடு, யாருடைய அழுத்தம்? போன்ற பல்வேறு கேள்விகள் எழுகின்றன.

வேலியே பயிரை மேய்வது போல் இன்று கல்வியை கற்றுக்கொடுக்கும் கல்வி வளாகங்களிலேயே பாலியல் வன்கொடுமைகளும், பெண்களுக்கு எதிரான குற்றங்களும் நடைபெறுவதற்கு, எனது கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கன்னட எழுத்தாளர்
# பானுவுக்கு சர்வதேச புக்கர் பரிசு

**பெங்களூரு, மே 22-**
சர்வதேச புக்கர் பரிசு வென்ற கன்னட எழுத்தாளருக்கு பாராட்டு குவிகிறது.

கர்நாடக மாநிலம் ஹாசன் மாவட்டத்தை சேர்ந்தவர் பானு முஷ்டாக். கன்னட எழுத்தாளரான இவர் சமூக செயற்பாட்டாளராகவும், வழக்கறிஞராகவும் செயல்பட்டு வருகிறார். இதனிடையே, இவர் கன்னடத்தில் ஹசீனா அண்ட் அதர் ஸ்டோரிஸ் என்ற தலைப்பில் புத்தக தொகுப்பை எழுதியிருந்தார். 1990 முதல் 2012-ம் ஆண்டு இடைவெளியில் வெளியிடப்பட்ட இந்த புத்தக தொகுப்பு தென்னிந்தியாவில் இஸ்லாமிய மதப் பெண்களின் வாழ்வியல் குறித்து வெளிப்படுத்தியது.

இந்த புத்தகம் ஆங்கிலத்தில் ஹார்ட் லேம்ப் என்ற பெயரில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டது. இந்த புத்தகத்திற்கு சர்வதேச அளவில் மிகப்பெரிய அங்கீ



காரம் கிடைத்தது. இந்நிலையில், ஹார்ட் லேம்ப் புத்தகத்தை எழுதிய பானு முஷ்டாக் சர்வதேச புக்கர் பரிசு வென்றுள்ளார். சர்வதேச புக்கர் பரிசு வெல்லும் முதல் கன்னட எழுத்தாளர் பானு முஷ்டாக் ஆவார். அவருக்கு லண்டனில் நடந்த நிகழ்ச்சியில் விருதும் 58 லட்ச ரூபாய் பணமும் பரிசாக வழங்கப்பட்டுள்ளது. சர்வதேச புக்கர் பரிசு வென்ற பானுவுக்கு பல்வேறு தரப்பினரும் பாராட்டு தெரிவித்து வருகின்றனர்.

# நாடு என்று வரும்போது யாருக்கும் மாற்று கருத்து கிடையாது: கனிமொழி

**புதுடெல்லி, மே 22-**
நாடு என்று வரும்போது யாருக்கும் மாற்றுக்கருத்து கிடையாது என்று கனிமொழி எம்.பி. கூறினார்.

பாகிஸ்தான் மீதான தாக்குதல் நடவடிக்கை முடிவுக்கு வந்தாலும், பயங்கரவாதத்துக்கு எதிரான நிலைப்பாட்டில் இந்தியா உறுதியாக உள்ளது. பாகிஸ்தான் ஆதரவு பயங்கரவாத விவகாரத்தில், உலக நாடுகளின் ஆதரவை திரட்ட அனைத்துக்கட்சி குழுக்களை அனுப்பி வைக்க மத்திய அரசு திட்டமிட்டது. அதன்படி, பாஜக எம்.பி.க்கள் ரவிசங்கர் பிரசாத், பைஜெயந்த் பாண்டா, காங்கிரஸ் எம்.பி. சசிதரூர், ஐக்கிய ஜனதாதளம் எம்.பி. சஞ்சய் ஜா, தி.மு.க. எம்.பி. கனிமொழி, தேசியவாத காங்கிரஸ் (சரத் பவார்) எம்.பி. சுப்ரியா சுலே, சிவசேனா எம்.பி. ஸ்ரீகாந்த் ஷிண்டே ஆகியோர் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இவர்களில் 4 பேர் தேசிய ஜனநாயக கூட்டணியையும், 3 பேர் 'இந்தியா' கூட்டணியையும் சேர்ந்தவர்கள். ஒவ்வொரு குழுவிலும் 6 அல்லது 7 எம்.பி.க்கள் இடம் பெற்றுள்ளனர்.




இந்நிலையில் ஆபரேஷன் சிந்தூர் குறித்து ரஷியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளுக்கு விளக்கம் அளிக்க செல்லும் முன்பு கனிமொழி எம்.பி. செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறுகையில், "பயங்கரவாதத்தால் நாம் 26 உயிர்களை இழந்தோம், பயங்கரவாதத்தால் இந்த நாட்டில் உண்மையில் என்ன நடந்தது, என்ன நடக்கிறது என்பது பற்றிப் பேச விரும்புகிறோம். அதற்கு முற்றுப் புள்ளி வைக்க விரும்புகிறோம். பல்வேறு கட்டுக்கதைகளை உருவாக்க முயற்சிக்கும் ஏராளமான சுயநலவாதிகள் இருப்பதால் இந்தியாவின் நிலைப்பாட்டை விளக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. அதனால் தான் என்ன நடந்தது என்பதை விளக்கவும், என்ன நடந்தது என்பது குறித்த எங்கள் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தவும் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களைக் கொண்ட பிரதிநிதிகள் குழுக்கள் உலகம் முழுவதும் பல நாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன என்ன நடந்தது என்பது பற்றி இந்தியா ஏற்கனவே பேசியுள்ளது. இரண்டு நிலைப்பாடுகள் இல்லை. நாங்கள் எவ்வாறு தாக்கப்பட்டோம், நாங்கள் எவ்வாறு பதிலளித்தோம், இதற்கு எவ்வாறு தீர்வு காண விரும்புகிறோம் என்பது பற்றி அவர்கள் மிகவும் தெளிவாகவும், வெளிப்படையாகவும் பேசியுள்ளனர். எனவே, நாங்கள் ஏற்கனவே கூறிய அதே விஷயத்தை விளக்க விரும்புகிறோம்.

இந்த நாட்டின் பாதுகாப்பு மற்றும் இறையாண்மை விஷயத்தில் நாம் அனைவரும் ஒன்றாக நிற்பது மிக முக்கியமான விஷயம். அதில் எந்த கருத்து வேறுபாடும் இல்லை என்று நான் நினைக்கிறேன்" என்று கனிமொழி எம்.பி. கூறினார்.

# விழுப்புரம் அருகே ஆற்றில் மூழ்கி 3 பேர் பலி

**விழுப்புரம், மே 22-**
விழுப்புரம் மாவட்டம், அரசூர் பகுதியில் மலட்டாற்றில் 3 பேர் குளிக்க சென்றனர். அப்போது ஆற்றில் மூழ்கி 3 பேரும் உயிரிழந்தனர். இவர்கள் மூன்று பேருக்கும் நீச்சல் தெரியாமல் நீரில் மூழ்கி உயிரிழந்ததாக முதற்கட்ட தகவல் வெளியாகி உள்ளது. அரசூரைச் சேர்ந்த அபிநயா,15, சிவசங்கரி,20, தட்டம்பாளையத்தைச் சேர்ந்த ராஜேஷ்,15, ஆகிய 3 பேர் உயிரிழந்தது போலீசார் விசாரணையில் தெரியவந்தது. இதில் அபிநயா, சிவசங்கரி ஆகிய இருவர் சகோதரிகள் ஆவர். ஆற்றில் குளிக்க சென்றபோது 3 பேர் நீரில் முழ்கி உயிரிழந்த சம்பவம் அந்த பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# ராஜீவ்காந்தி நினைவு தினம்: டெல்லியில் ராகுல் அஞ்சலி



**டெல்லி, மே 22-**
டெல்லியில் உள்ள ராஜீவ் காந்தி நினைவிடத்தில் ராகுல் காந்தி அஞ்சலி செலுத்தினார்.

காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தியின் தந்தை ராஜீவ் காந்தி. இவர் 1984 முதல் 1989 வரை நாட்டின் பிரதமராக செயல்பட்டார். இதனிடையே , முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கடந்த 1991ம் ஆண்டு மே 21ம் தேதி கொல்லப்பட்டார். இந்நிலையில், ராஜீவ் காந்தியின் 34வது நினைவு தினம் நேற்று அனுசரிக்கப்படுகிறது. இதையொட்டி, டெல்லியில் உள்ள ராஜீவ் காந்தி நினைவிடத்தில் ராகுல் காந்தி அஞ்சலி செலுத்தினார். அதேபோல், பிரதமர் மோடியும் ராஜீவ் காந்தி நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினார். ராஜீவ் காந்தி நினைவு தினத்தை ஒட்டி ராகுல் காந்தி தனது எக்ஸ் பக்கத்தில் இவ்வாறு பதிவிட்டுள்ளார். "அப்பா, உங்கள் நினைவுகள் என்னை ஒவ்வொரு அடியிலும் வழிநடத்துகிறது. உங்களின் நிறைவேறா கனவுகளை நிறைவேற்றுவதே எனது இலக்கு. நிச்சயம் நிறைவேற்றுவேன்." என்று குறிப்பிட்டுள்ளார்.

## 'ஹெல்மெட்' அணியாமல் இருப்பது உள்ளிட்ட
# 5 வகையான விதிமீறலுக்கு மட்டுமே இனி அபராதம்
## சென்னை போக்குவரத்து போலீஸாருக்கு உத்தரவு

**சென்னை, மே 22-**
5 வகையான விதிமீறலுக்கு மட்டுமே அபராதம் விதிக்க வேண்டும், என போக்குவரத்து போலீஸாருக்கு சென்னை மாநகர காவல் ஆணையர் அருண் உத்தரவிட்டுள்ளார்.

சென்னையில் போக்குவரத்து விதிமீறல்களைக் கட்டுப்படுத்த பெருநகர சென்னைப் போக்குவரத்து காவல் துறையின் போக்குவரத்துப் பிரிவு போலீசார் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். குறிப்பாக, குடிபோதையில் வாகனம் ஓட்டுதல், ஹெல்மெட் அணியாமல் வாகனம் ஓட்டுதல், ஓட்டுநர் உரிமம், அனுமதிக்கப்பட்ட வேகத்தைவிட அதிவேகத்தில் சாலைகளில் செல்லுதல், பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் வாகனங்களை ஓட்டுதல் உள்ளிட்ட குற்றங்களில் ஈடுபடுவோரைக் கண்டறிந்து, அபராதம் விதிப்பது உள்ளிட்ட பல்வேறு சட்ட நடவடிக்கைகளை போலீசார் மேற்கொண்டு வருகின்றனர்.

போக்குவரத்து விதிமீறல்களில் ஈடுபடுவோரைக் கண்டறிய போலீஸாருக்கு உதவும் வகையில், சென்னையின் முக்கியச் சாலைகள், சந்திப்புகள், மக்கள் அதிகம் கூடும் இடங்களில் கண்காணிப்புக் கேமராக்கள் பொருத்தப்பட்டு அபராதம் விதிக்கும் பணிகளிலும் போக்குவரத்து போலீசார் தொடர்ந்து ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில், சோதனை என்ற பெயரில், போக்குவரத்து போலீசார் கூட்டமாக சாலையில் நின்று வாகன ஓட்டிகளுக்கு அபராதம் விதிப்பதாக குற்றச்சாட்டுகள் எழுந்தன.

இதையடுத்து சென்னையில் போக்குவரத்து போலீசார், என்னென்ன குற்றங்களுக்காக அபராதம் விதிக்க வேண்டும் என்பது தொடர்பாக, பெருநகர சென்னை காவல்துறை ஆணையர் உத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளதாக கூறப்படுகிறது.

அதன்படி, அதிவேகமாக வாகனம் ஓட்டுவது, `ஹெல்மெட்' அணியாமல் வாகனம் ஓட்டுவது,

நோ-என்ட்ரியில் வாகனம் ஓட்டுவது, மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுவது, இருசக்கர வாகனத்தில் இருவருக்கு மேல் பயணித்தல், ஆகிய 5 வகையான விதமீறல்களுக்கு மட்டுமே அபராதம் விதிக்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# மிசோரம் முழு கல்வியறிவு பெற்ற முதல் மாநிலமானது
## முதல்வர் லால்துஹோமா அறிவிப்பு

**ஐஸ்வால், மே 22-**
'உல்லாஸ்' முன்முயற்சியின் கீழ் மிசோரம் அதிகாரபூர்வமாக முழு கல்வியறிவு பெற்ற முதல் மாநிலமாக மாறியுள்ளது என்று அம்மாநில முதல்வர் லால்துஹோமா அறிவித்துள்ளார்.

மிசோரம் பல்கலைக்கழக ஆடிட்டோரியத்தில் மத்திய கல்வி, திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் துறை இணையமைச்சர் ஜெயந்த் சவுத்ரி மற்றும் மிசோரம் கல்வி அமைச்சர் டாக்டர் வன்லால்த்லானா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற விழாவில் இந்த அறிவிப்பை வெளியிட்ட மிசோரம் முதல்வர் லால்துஹோமா, "இன்று நமது மாநிலத்தின் பயணத்தில் ஒரு வரலாற்று தருணத்தைக் குறிக்கிறது. நமது மக்களின் கூட்டு விருப்பம், ஒழுக்கம் மற்றும் தொலைநோக்குப் பார்வையை பிரதிபலிக்கும் ஒரு



மாற்றத்திற்கான மைல்கல் இது.

உல்லாஸ் தரநிலைகளின் படி 95% கல்வியறிவு விகிதத்தை தாண்டியுள்ளோம். இதனால் மிசோரம் முழு கல்வியறிவு பெற்ற மாநிலமாக மாறியுள்ளது. நாங்கள் 98.2% கல்வியறிவு விகிதத்தை அடைந்துள்ளோம். மிசோரம் கல்வியறிவு தரவரிசையில் முதலிடத்தில் இருப்பதை உறுதி செய்வதற்காக எங்கள் கல்வி அமைச்சர் டாக்டர் வன்லால்த்லானா, ஒப்பந்த அடிப்படையில் 292 கல்வியாளர்களை நியமித்தார். இந்த சாதனை முடிவு அல்ல, புதிய தொடக்கம். இந்த நாளை ஒரு பிரச்சாரத்தின் முடிவாக அல்ல, ஒரு புதிய சகாப்தத்தின் விடியலாக நாங்கள் கொண்டாடுகிறோம். இனி ஒவ்வொரு மிசோரம் மக்களும் டிஜிட்டல் கல்வியறிவு, நிதி கல்வியறிவு மற்றும் தொழில்முனைவோர் திறன்களை மேம்படுத்துவதில் உயர்ந்த இலக்கை அடைவோம். நாம் நாட்டில் முதலிடத்தில் இருப்பதில் பெருமைப்படுகிறோம் என்றார்.

இந்த விழாவில் மத்திய அமைச்சர் ஜெயந்த் சவுத்ரி மிசோரம் மக்களை வாழ்த்தினார். மேலும், இந்த சாதனைக்கு பங்களித்த அனைவரின் அர்ப்பணிப்பையும் பாராட்டினார்.

# அசோகா பல்கலை. பேராசிரியருக்கு சுப்ரீம் கோர்ட் இடைக்கால ஜாமீன்

**புதுடெல்லி, மே 22-**
அசோகா பல்கலைக்கழக பேராசிரியர் அலி கான் மஹ்முதாபாத்துக்கு இடைக்கால ஜாமீன் வழங்கியுள்ள சுப்ரீம் கோர்ட், இந்த விவகாரம் தொடர்பாக விசாரிக்க சிறப்பு புலனாய்வு குழுவை அமைக்க ஹரியானா காவல் துறை இயக்குநர் ஜெனரலுக்கு உத்தரவிட்டுள்ளது.

ஆபரேஷன் சிந்தூர் தொடர்பாக அசோகா பல்கலைக்கழக பேராசிரியர் அலி கான் மஹ்முதாபாத் வெளியிட்ட சமூக ஊடக பதிவுகளுக்கு எதிராக, ஹரியானா மாநில மகளிர் ஆணையத் தலைவர் ரேணு பாட்டியா புகார் அளித்திருந்தார். புகாரின் பேரில் பதிவு செய்யப்பட்ட எப்.ஐ.ஆரின் அடிப்படையில் அலி கான் மஹ்முதாபாத் கைது செய்யப்பட்டார். பா.ஜ.க. யுவ மோர்ச்சா பொதுச் செயலாளர் யோகேஷ் ஜாதேதியும் இதே போன்ற குற்றச்சாட்டுகளை கூறி மே 17 அன்று அலி கான் மீது தனியாக எப்.ஐ.ஆர் பதிவு செய்தார்.

இரண்டு வழக்குகளில் ஒன்றில் அலி கான் இரண்டு நாட்கள் போலீஸ் காவலில் வைக்கப்பட்டார். யோகேஷ் ஜாதேதி தாக்கல் செய்த இரண்டாவது வழக்கில், அலி கான் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டார். இந்நிலையில், சோனிபட் ராய் காவல் நிலையத்தில் தனக்கு எதிராகப் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கைகளை ரத்து செய்யக் கோரி மூத்த வழக்கறிஞர் கபில் சிபல் மூலம் அலி கான் மனு தாக்கல் செய்தார். இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அலி கான் சார்பில் ஆஜரான கபில் சிபல், முதல் தகவல் அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருப்பதைப் போல அலி கானின் சமூக ஊடகப் பதிவுகள் எந்த வகுப்புவாத பதட்டங்களையும் உருவாக்கவில்லை. அவரது சமூக ஊடகப் பதிவுகள் தேசபக்தியின் வெளிப்பாடு. அலி கான் மஹ்முதாபாத்தின் மனைவி 9 மாத கர்ப்பிணியாக உள்ளார்." என வாதிட்டார்.

அலி கானின் பதிவுகள் ஆரம்பத்தில் போரின் கொடூரங்களை மையமாகக் கொண்டிருந்தாலும், அவை படிப்படியாக அரசியல் வர்ணனையை நோக்கி நகர்கின்றன. நாடு ஒரு பெரிய சவாலை எதிர்கொண்டுள்ள நேரத்தில், பொதுமக்கள் தாக்குதலுக்கு உள்ளாகி இருக்கக் கூடிய இந்த நேரத்தில், பிரபலமடைய முயற்சித்தது ஏன்." என்று நீதிபதி காந்த் கேள்வி எழுப்பினார்.

அசோகா பல்கலைக்கழக பேராசிரியர் அலி கான் மஹ்முதாபாத்திற்கு இடைக்கால ஜாமீன் வழங்கிய சுப்ரீம் கோர்ட், விசாரணையை நிறுத்த மறுத்தது. மேலும், அலி கானுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை விசாரிக்க மூன்று பேர் கொண்ட சிறப்பு புலனாய்வு குழுவை மே 22, 2025-க்குள்அமைக்க ஹரியானா காவல்துறை இயக்குநர் ஜெனரலுக்கு சுப்ரீம் கோர்ட்உத்தரவிட்டுள்ளது.

# தொடர் கனமழை: பெங்களூருவில் பலி 5 ஆனது

**பெங்களூரு, மே 22-**
பெங்களூருவில் கன மழை மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக உயிரிழந்தோரின் எண்ணிக்கை 5 ஆக அதிகரித்துள்ளது. நூற்றுக்கணக்கான வீடுகள் நீரில் மூழ்கியுள்ளன. இந்நிலையில், பெங்களூருவுக்கு கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பெங்களூருவில் கடந்த சில நாட்களாக பெய்துவரும் கனமழையைத் தொடர்ந்து கடுமையான வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. பெங்களூருவில் கெங்கேரி, ஹெச்.ஏ.எல், மாரத்தஹள்ளி, ஹென்னூர் உட்பட 10க்கும் மேற்பட்ட இடங்களில் 105.5 மிமீ மழை பதிவானது. இதனால் அந்த பகுதிகள் வெள்ளத்தில் மிதக்கின்றன.

கடந்த 1909-ம் ஆண்டு மே மாதம் 6-ம் தேதி பெங்களூருவில் 153.9 மிமீ மழை பதிவானது. இதற்கு அடுத்தப்படியாக 2011-ம் ஆண்டில் மே மாதத்தில் 112 மிமீ மழையும், 2022-ம் ஆண்டு மே மாதத்தில் 114.6 மிமீ மழையும் பதிவானது. இதற்கு பிறகு நடப்பாண்டில் பெய்த 136 மிமீ மழையே அதிகபட்சமாக உள்ளது.


கனமழை காரணமாக பெங்களூரு மகாதேவபுராவில் உள்ள இஸ்மோ லிமிடெட் நிறுவனத்தில் பராமரிப்பு ஊழியராக பணிபுரிந்த 35 வயதுடைய சசிகலா என்ற பெண், சுவர் இடிந்து விழுந்து உயிரிழந்தார். தெற்கு பெங்களூருவில் வெள்ளத்தில் மூழ்கிய வீட்டில் இருந்து தண்ணீரை வெளியேற்ற முயன்றபோது, 63 வயதான மன்மோகன் காமத் மற்றும் 12 வயது தினேஷ் ஆகிய இருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தனர். மேலும், கர்நாடகாவின் ராய்ச்சூர் மற்றும் கார்வாரில் தனித்தனி மின்னல் தாக்குதல் சம்பவங்களில் இரண்டு பேர் உயிரிழந்தனர். இதனால் சமீபத்திய கனமழையால் மொத்த இறப்பு எண்ணிக்கை ஐந்தாக உயர்ந்துள்ளது. இதற்கிடையே இந்திய வானிலை ஆய்வு மையம் பெங்களூருவுக்கு கனமழை எச்சரிக்கை வெளியிட்டுள்ளது. பெங்களூரு வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட அறிக்கையில், கர்நாடகாவில் கடலோர மாவட்டங்களிலும், மலைப்பகுதி மாவட்டங்களிலும் அதிதீவிர கன மழை பொழிய வாய்ப்பு இருப்பதாக வானிலை மையம் எச்சரித்துள்ளது.

## விவாகரத்து வழக்கு:
# நடிகர் ரவி மோகன், மனைவி ஆர்த்தி குடும்ப நல நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்

**சென்னை, மே 22-**
விவாகரத்து கோரிய வழக்கில், நடிகர் ரவி மோகன், ஆர்த்தி இருவரும் சென்னை குடும்ப நல நீதிமன்றத்தில் நேற்று (புதன்கிழமை) நேரில் ஆஜராகினர். ரவி மோகன் விவாகரத்துக் கோரியும், ஆர்த்தி ஜீவனாம்சம் கேட்டும் புதிதாக மனுக்கள் தாக்கல் செய்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

தமிழ் திரைத்துறையில் பிரபலமான நடிகர் ரவி மோகன். இவர் ஆர்த்தி என்பவரை காதலித்து கடந்த 2009-ம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார். 15 ஆண்டு கால திருமண உறவில் இருவருக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக, தற்போது அவர்கள் தனித்தனியாக பிரிந்து வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில், மனைவியிடம் இருந்து விவாகரத்து கேட்டு நடிகர் ரவி சென்னை குடும்ப நல நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தார். இந்த மனுவை விசாரித்த சென்னை மூன்றாவது குடும்பநல நீதிமன்றம், சமரச தீர்வு மையத்தில் பேச்சுவார்த்தை நடத்த உத்தரவிட்டிருந்தது. அதன்படி நடிகர் ரவி, ஆர்த்தி ஆகியோர் சம





ரச தீர்வு மையத்தில் ஆஜராகி பேச்சுவார்த்தை நடத்தி வந்தனர்.


இந்நிலையில் நடிகர் ரவி மோகன் விவாகரத்து கோரிய வழக்கு குடும்பநல நீதிமன்ற நீதிபதி தேன்மொழி முன்பு நேற்று (புதன்கிழமை) மீண்டும் விசாரணைக்கு வந்தது. இதில் நடிகர் ரவி மற்றும் ஆர்த்தி ஆகியோர் நேரில் ஆஜராகினர்.

அப்போது, ஆர்த்தியுடன் சேர்ந்து வாழ விருப்பம் இல்லை, ஆர்த்தியிடம் இருந்து விவாகரத்து அளிக்க வேண்டும். சேர்ந்து வாழ வேண்டுமென்ற ஆர்த்தியின் கோரிக்கை நிராகரிக்க வேண்டும் என நடிகர் ரவிமோகன் தரப்பில் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

ஆர்த்தி தரப்பில், மாதம்தோறும் ஜீவனாம்சம் நடிகர் ரவி வழங்க வேண்டும் எனக்கோரி புதிய மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த மனுக்களுக்கு நடிகர் ரவி மோகன், ஆர்த்தி தரப்பில் பதிலளிக்க உத்தரவிட்ட நீதிபதி, வழக்கின் விசாரணையை ஜூன் 12 ம் தேதிக்கு தள்ளி வைத்தார்.

மழைத்துளி மண்ணின் உயிர்துளி

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



காவிரி பாசன மாவட்ட உழவர்களுக்கு குறுவைத் தொகுப்புத் திட்டத்தை தமிழக அரசு உடனடியாக அறிவிக்க வேண்டும். அத்துடன், குறுவை சாகுபடியை ஊக்குவிக்கும் வகையில் தெலங்கானா மாநிலத்தில் வழங்கப்படுவதைப் போன்று ஏக்கருக்கு ரூ.5,000 வீதம் ஊக்குவிப்பு மானியமும் வழங்க வேண்டும்.

**- அன்புமணி**



தமிழகத்தில் சில தனியார் பள்ளிகளில் மாணவர்கள் விண்ணப்பம் செய்வதற்கான இணைய தளத்தை முடக்கி வைத்திருக்கின்றனர். எனவே, தமிழக அரசு, மாணவர்களின் கல்வி நலனை கருத்தில் கொண்டு நிதியை வழங்கி முழுமையாக மாணவர் சேர்க்கைக்கான முயற்சிகளை எடுக்க வேண்டும்.

**- பெ.சண்முகம்**



வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் நகைக்கடன் வழங்குவதற்காக ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள வரைவு விதிகளில் பிரிவுகள் 2, 4, 6 ஆகியவை மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதால் ரிசர்வ் வங்கி அவற்றை திரும்பப் பெற வேண்டும் அல்லது நகைக் கடன் வழங்குவதற்கான இப்போதைய நடைமுறையே தொடரும் என்று அறிவிக்க வேண்டும்.

**- ராமதாஸ்**



தமிழகம் முழுவதும் கல்குவாரிகளில் பாதுகாப்பு ஏற்பாடுகளை அரசு உறுதி செய்ய வேண்டும். குவாரிகளில் தொடரும் விபத்துக்களை தடுக்கவும், தொழிலாளர்களின் உயிர்களை பாதுகாக்கவும், விதிமுறைகளை மீறிச் செயல்படும் குவாரிகளையும், தொழிலகங்களை தமிழக அரசு தடை செய்ய வேண்டும்.

**- முத்தரசன்**

# அனகாபுத்தூர் பகுதியில் அடையாறு ஆற்றை ஆக்கிரமித்து கட்டப்பட்ட வீடுகள் அகற்றம்

சென்னை மே 22-

அனகாபுத்தூர் பகுதியில் அடையாறு ஆற்றை ஆக்கிரமித்து கட்டப்பட்ட வீடுகளை அதிகாரிகள் நேற்று அகற்றினர். தமிழ்நாடு அரசு, சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை அடையாறு நதி சீரமைப்பு திட்டத்தின் கீழ், அடையாறு ஆற்றங்கரையை ஆக்கிரமித்து வசிக்கும் குடும்பங்களுக்கு 'மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு' பணிகள் பெருநகர சென்னை மாநகராட்சி, நீர்வளத்துறை, மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் ஆகிய சார் துறைகள் இணைந்து செயல்படுத்தப்படுகிறது. அதன்படி, அடையாறு நதி கரையோரங்களில் வசிக்கும் குடும்பங்கள் கணக்கெடுக்கப்பட்டு, அவர்களுக்கு வீடு ஒதுக்கீடு செய்யப்பட்டு, மறுகுடியமர்வு செய்யப்படுகின்றனர். குறிப்பாக, அனகாபுத்தூர் அடையாறு ஆற்றங்கரையை ஆக்கிரமித்து தாய் மூகாம்பிகை நகர், காயிதே மில்லத் நகர், சாந்தி நகர், எம்ஜிஆர் நகர் 3வது தெரு ஆகிய பகுதிகள் அமைந்துள்ளன.அவற்றில், சுமார் 600 வீடுகள் உள்ளன. அதில், ஏராளமான பொதுமக்கள் வசித்து வருகின்றனர்.

இவர்களை அங்கிருந்து அகற்றி, மறுகுடியமர்வு செய்ய அதிகாரிகள் திட்டமிட்டனர். முதற்கட்டமாக, அங்கிருந்த 81 குடும்பத்தினரை வருவாய்த்துறை அதிகாரிகள் அகற்றி, அவர்களுக்கு சென்னை பெரும்பாக்கம், கூடுவாஞ்சேரி அடுத்த கீரப்பாக்கம் மற்றும் கிஷ்கிந்தா சாலை ஆகிய இடங்களில் சுமார் ரூ.30 லட்சம் மதிப்பீட்டில் தமிழக வீட்டு வசதி வாரியம் சார்பில் அடுக்குமாடி குடியிருப்பில் வீடுகள் கொடுத்து, அதில் தங்க வைக்கப்பட்டனர். மீதியுள்ள ஆக்கிரமிப்பு வீடுகளையும் அகற்ற, கடந்த 12ம் தேதி வருவாய்த்துறை அதிகாரிகள் தயாராகினர். தகவலறிந்த அப்பகுதி மக்கள் 100க்கும் மேற்பட்டோர் அங்கு திரண்டு, கையில் பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால், தற்காலிகமாக ஆக்கிரமிப்புகளை அகற்றாமல் அதிகாரிகள் சென்றனர்.இந்நிலையில், மீண்டும் நேற்று காலை செங்கல்பட்டு மாவட்ட கலெக்டர் அருண் தலைமையில் வருவாய்த்துறை அதிகாரிகள், அனகாபுத்தூர் அடையாறு ஆற்றங்கரையை ஆக்கிரமித்து கட்டப்பட்டிருந்த கட்டிடங்களை அகற்றுவதற்கு தயார் நிலையில் வந்தனர். மேலும், ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு பொதுமக்களில் பலர் எதிர்ப்பு தெரிவிக்க கூடும் என்பதால், முன்னதாகவே துப்பாக்கி ஏந்திய போலீசார் 100க்கும் மேற்பட்டோர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். அதிகாரிகள் நடத்திய பேச்சுவார்த்தையில், ஆக்கிரமிப்பாளர்களில் முதல்கட்டமாக 20 பேர் தங்களது வீடுகளை காலி செய்துவிட்டு, அரசு ஒதுக்கியுள்ள அடுக்குமாடி குடியிருப்பு வீட்டிற்கு குடிபெயர சம்மதம் தெரிவித்தனர். இதையடுத்து, முதற்கட்டமாக 10 வீடுகளை அதிகாரிகள் பொக்லைன் இயந்திரங்கள் மூலம் அகற்றினர். மீதமுள்ள வீடுகளையும் காலி செய்வதற்கான முயற்சியில் தொடர்ந்து அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றனர்.இதனிடையே, அப்பகுதியை சேர்ந்த அதிமுக, தேமுதிக, நாம் தமிழர் போன்ற பல்வேறு அரசியல் கட்சி பிரமுகர்கள், ஆக்கிரமிப்பாளர்களுக்கு ஆதரவாக தொடர்ந்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றனர். இதுகுறித்து, அப்பகுதி மக்கள் கூறுகையில், ''நாங்கள் கடந்த 60 ஆண்டுகளாக இந்த பகுதியில் குடியிருந்து வருகிறோம். எங்களது வாழ்வாதாரம் அனைத்தும் இப்பகுதியை சார்ந்தே அமைந்துள்ளது. அப்படி இருக்கையில் திடீரென்று எங்களை அப்புறப்படுத்தி, எங்களது குடியிருப்புகளை அகற்ற நினைப்பது எந்த விதத்தில் நியாயம். நாங்கள் குடியிருந்து வரும் எங்களது குடியிருப்புகளை அகற்றாமல், எங்களுக்கு பட்டா வழங்க வேண்டும்,'' என்றனர். இந்த ஆக்கிரமிப்புகள் அகற்றும் பணிகளால் பல்லாவரம் – குன்றத்தூர் சாலையில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.20 குடும்பத்தினருக்கு அரசு வீடு ஒதுக்கீடு

அடையாறு ஆற்றங்கரையில் அகற்றப்பட்ட 20 வீடுகளில் வசித்து வந்த குடும்பங்களில் 17 குடும்பங்களுக்கு தைலாவரம் பகுதியில் உள்ள அரசு அடுக்குமாடி குடியிருப்பில் வீடுகள் வழங்கப்பட்டுள்ளது. இதற்கான ஆணையை தாம்பரம் மாநகராட்சி ஆணையர் பாலச்சந்தர் பயனாளிகளுக்கு வழங்கினார். மீதமுள்ள 3 குடும்பங்களுக்கு கீரப்பாக்கம் பகுதியில் உள்ள அரசு அடுக்குமாடி குடியிருப்பில் வீடு கேட்டுள்ளதால் விரைவில் அவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், ஆக்கிரமிப்புகள் அகற்றும் பணிகள் தொடர்ந்து நடைபெறும் எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# புழல் பகுதியில் இருசக்கர வாகனத்தை திருடிய சிறுவன் சிக்கினான்

சென்னை மே 22-

சென்னை, புழல், ஜீவாராமன் தெருவில் வசித்து வரும் சீனிவாசன், என்பவர் புழல், காவாங்கரை, மாரியம்மன் 4வது தெருவில் உள்ள தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறார்.

**திருட்டு**

இவர் கடந்த 10.ந் தேதி அன்று மதியம் மேற்படி நிறுவனத்தின் முன்பு அவரது இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு, நிறுவனத்திற்குள் சென்றிவிட்டு சிறிது நேரம் கழித்து வந்து பார்த்தபோது, அவரது இருசக்கர வாகனத்தை யாரோ திருடிச் சென்றது தெரியவந்தது. இது குறித்து சீனிவாசன் புழல் காவல் நிலைய குற்றப்பிரிவில் புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டன குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி இருசக்கர வாகனத்தை திருடிச் சென்ற 18 வயது இளஞ்சிறாரிடம் விசாரணை செய்தனர்.

விசாரணையில் இளஞ்சிறார் புகார்தாரரின் இருசக்கர வாகனம் மற்றும் கவரப்பேட்டை காவல் நிலைய எல்லையில் ஒரு இருசக்கர வாகனத்தை திருடியது தெரியவந்தது. அதன்பேரில், அவரிடமிருந்து புகார்தாரரின் இருசக்கர வாகனம் மற்றும் வாகனம் என 2 இருசக்கர வாகனங்கள் மீட்கப்பட்டது.

மேலும் விசாரணையில் இளஞ்சிறார் மீது கவரப்பேட்டை காவல் நிலையத்தில் 4 திருட்டு வழக்குகள் உட்பட ஏற்கனவே 6 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது.விசாரணைக்குப் பின்னர், 18 வயது இளஞ்சிறார், சிறார் நீதிகுழுமத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, அரசு கூர்நோக்கு இல்லத்தில் சேர்க்கப்பட்டார்.

# காஞ்சிபுரம் மாவட்டத்தில் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் வழிகாட்டு நிகழ்ச்சி: கலெக்டர் கலைச்செல்வி துவக்கி வைத்தார்



காஞ்சிபுரம், மே 22 -

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் தனியார் பொறியியல் கல்லூரியில் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் உயர்கல்வி பெற வழிகாட்டும் நிகழ்ச்சியை கலெக்டர் கலைச்செல்வி துவக்கி வைத்தார். 2024 - 25ம் ஆண்டில் 12ம் வகுப்பு முடித்த மாணவர்களுக்கு கல்லூரியில் சேர்க்கை பற்றிய தகவல்கள், பல்வேறு தொழில் பாதைகள், கல்வி கடன்கள் எப்படி பெற வேண்டும். தனித்துவ மிக்க ஆலோசனைகள் வழங்குவதை நோக்கமாகக் கொண்டு கல்லூரி கனவு நிகழ்ச்சி நடைபெறுகிறது. அதன்படி, காஞ்சிபுரம் மாவட்டத்தில் சிறப்பு தேவை குழந்தைகள். மாணவர்கள், நலத்துறை பள்ளிகள், ஒரு பெற்றோர் இல்லாதவர். இடைநிறுத்தம் ஏற்பட்ட சூழ் நிலை உள்ளவர்கள். அரையாண்டு தேர்வில் தோல்வி அடைந்தவர்கள். 50 சதவீதம் அதிகமான வருகை தவறிய இருக்கும் மாணவர்கள். பழங்குடியின மாணவர்கள் என மொத்தம் 2, 587 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.மேலும் 2024 - 25ம் கல்வியாண்டு 2587 மாணவர்கள், 2024 - 25ம் கல்வியாண்டு தாய், தந்தை இல்லாத மாணவர்கள் 28 என மொத்தம் 2, 953 மாணவர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் மாணவர்களுக்கு பல்வேறு உயர்கல்வி சார்ந்த அனைத்து சந்தேகங்களும் துறைசார் வல்லுனர்களைக் கொண்டு விளக்கப்பட்டது. மாணவர்களுக்கு தேவையான இருப்பிட சான்றிதழ், வருவாய் சான்றிதழ் மற்றும் சாதி சான்றிதழ் பெறுவதற்கு உதவியாகவும், கல்லூரிகளுக்கு இணையதளம் வாயிலாக கட்டணம் இல்லாமல் விண்ணப்பிக்கலாம். மாணவர்களுக்கு கல்வி கடன் பெறுவது சார்ந்த விவரங்களையும் வழங்கப்பட்டது. இ நிகழ்ச்சியில் மாணவ, மாணவியர்கள் கலந்துக் கொண்டு பயனடைந்தனர். இதைத தொடர்ந்து கல்லூரி கனவு கையேட்டினை கலெக்டர் கலைச்செல்வி வெளியிட்டு, மாணவ, மாணவியர்களுக்கு வழங்கினார். இந்நிகழ்ச்சிக்கு முன்னதாக மாணவ, மாணவியர்களுக்கு வழிகாட்டும் வகையில் அமைக்கப்பட்டிருந்த கண் காட்சி அரங்குகளை கலெக்டர் பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் திருப்பெரும்புதூர் சப் கலெக்டர் மிருணாளினி, முதன்மைக் கல்வி அலுவலர் வெற்றிச்செல்வி, அரசு அலுவலர்கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

வருவாய் உட்கோட்ட நடுவர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் கிருஷ்ணகிரி
ந.க.எண்.மே.ம.அ.2891/2025/எப் நாள்: 13.05.2025
முருகேசன் த/பெ.பொம்மன்(எ)தொண்னையன், கதவு எண்.184, நாய்க்கனூர் கிராமம் மற்றும் அஞ்சல், ஊத்தங்கரை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் 635 307 ....மனுதாரர்
உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர் அவர்கள், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், கிருஷ்ணகிரி. ....எதிர்மனுதாரர்
அறிவிப்பு
[illegible]
//உத்தரவுப்படி//
மனுதாரர்
முருகேசன் த/பெ.பொம்மன்(எ)தொண்னையன், கதவு எண்.184, நாய்க்கனூர் கிராமம் மற்றும் அஞ்சல், ஊத்தங்கரை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் 635 307 செல்: 6381241469

# இதயம் காப்போம் திட்டம் இன்னுயிர் காப்போம் – நம்மைக் காக்கும்-48 போன்ற பிற பல்வேறு திட்டங்கள் மூலம் இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது: அமைச்சர் மா.சுப்பிரமணியன் பெருமிதம்



சென்னை,மே.22

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் (20.05.2025) அமெரிக்கா-கலிபோர்னியா மாகாணம், லாஸ் ஏஞ்சல்ஸில் நடைபெற்ற மனநல சர்வதேச மாநாட்டில் 'நாள்தோறும் மேற்கொள்ளப்படும் நடைபயிற்சியால், உடல் மற்றும் மனநலத்தில் ஏற்படும் தாக்கம்' குறித்த தலைப்பில் பேசினார். அப்போது அவர் பேசியதாவது,

2004-ஆம் ஆண்டு நிகழ்வுற்ற ஒரு மிகப்பெரிய சாலை விபத்தில் கால்மூட்டு நான்கு ஐந்து துண்டுகளாக உடைந்து தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு அறுவை சிகிச்சையென மூன்று மாதங்களாக படுத்த படுக்கையாக இருக்க வேண்டிய ஒரு எதிர்பாராத சூழ்நிலை எனக்கு நேரிட்டது. நிலைகுலைந்த அத்தகைய ஓர் சூழலில் இனிமேல் தொடர்ந்து தரையில் உட்காரவோ, நடக்கவோ அல்லது ஓடவோ கூடாது என்ற மருத்துவர்களின் அறிவுரை ஒரு பேரிடியாக வந்தாலும் தன்னம்பிக்கையை கைவிடாது ஆறு மாதங்கள் கழிந்த பின்னர் படிப்படியாக யோகா பயிற்சி, மெதுவாக நடத்தல், சிறிய தூரங்கள் ஓடுதல் என முயற்சிக்கத் தொடங்கி ஓட்டப்பயிற்சி அளவிற்கு உயர்ந்து மாரத்தான் பந்தயத்தில் பங்கேற்கும் அளவிற்கு வளர்ச்சி கண்டேன்.

அதைத் தொடர்ந்து அடுத்த ஐந்து ஆண்டுகளில் 100 மாரத்தான் பந்தயங்களில் பங்கேற்று உலக சாதனையாளர்கள் பட்டியலில் இடம் பெற்றதோடு விடாமுயற்சி மற்றும் சளைக்காத மனவுறுதியுடன் இதுவரை 160 மாரத்தான் போட்டிகளில் பங்கேற்றுள்ளேன். வரும் 24.05.2025 அன்று 161-வது மாரத்தான் போட்டி அமெரிக்கா-காலிபோர்னியா மாகாணத்திலுள்ள சன்னிடேல் என்கின்ற இடத்தில் கலந்து கொள்ள உள்ளேன்.

தமிழ்நாடு அரசால் 2020 மற்றும் 2021-ஆம் ஆண்டு நடத்தப்பட்ட 'கலைஞர் நினைவு பன்னாட்டு மெய்நிகர் மாரத்தான்கள்', 2022-ஆம் வருடம் நடைபெற்ற 'கலைஞர் நினைவு பன்னாட்டு மாரத்தான்' மற்றும் 2023-ஆம் ஆண்டு நடைபெற்ற கின்னஸ் உலக சாதனை படைத்த 'கலைஞர் நூற்றாண்டு பன்னாட்டு மாரத்தான்' ஆகியவற்றில் முன்னிலை வகுத்து பங்கேற்றதுடன், இந்நிகழ்வுகள் மூலம் கிடைக்கப்பெற்ற பதிவுத்தொகையான ரூபாய் 5.43 கோடியை கொரோனா நோய்த்தடுப்பு நிவாரண நிதி, எழும்பூர் அரசு குழந்தைகள் மற்றும் தாய்சேய் நல மருத்துவமனையில் குழந்தைகளின் பெற்றோர்கள் தங்குவதற்கான 4 மாடி கொண்ட உறைவிட கட்டடம் மற்றும் இராயப்பேட்டை அரசு பொது மருத்துவமனையில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கான உயர் சிகிச்சைக்கான கட்டடம் போன்ற பல்வேறு உயர் நோக்கங்களுக்காக நன்கொடையாக அளிக்கப்பட்டதை இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மேலும், தொற்றா நோய்களை கட்டுப்படுத்துவதில் எவ்வாறு தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக இந்திய அளவில் திகழ்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கடந்த 05.08.2021-ல் தொடங்கப்பட்ட 'மக்களைத் தேடி மருத்தும் திட்டம்', ஐக்கிய நாடுகள் அமைப்பின் 2004-ஆம் ஆண்டிற்கான விருது பெற்றுள்ளதையும், 'பாதம் பாதுகாப்போம் திட்டம்', 'இதயம் காப்போம் திட்டம்இன்னுயிர் காப்போம் – நம்மைக் காக்கும்-48' போன்ற பிற பல்வேறு திட்டங்கள் மூலம் இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது தன்னம்பிக்கை எத்தகைய பலம் வாய்ந்தது என்பதற்கு இலக்கணமாக மயிரிழையில் உயிர்தப்பி இனி முன்பு போல இயங்கவியலாது என்ற நிலையிலிருந்து மனவுறுதி, விடாமுயற்சி மற்றும் தொடர் பயிற்சி காரணமாக மாரத்தான் ஓட்டத்தில் உலக சாதனைகள் புரிந்து இன்று சமுதாயத்தில் உள்ள அனைவருக்கும் குறிப்பாக இளைய சமுதாயத்தினருக்கும், வருங்காலத் தலைமுறையினருக்கும் தினசரி நடைபயிற்சி மற்றும் ஓட்டப்பயிற்சி மூலம் உடல் மற்றும் மனநலம் காக்கப்படுவதை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நல்வாய்ப்பாக இப்பயணம் அமைந்துள்ளது என்றார்.



சென்னை திருவிகநகர் மண்டலம் 74வது வார்டுக்குட்பட்ட புதிய வாழைமா நகர்பகுதியில்மேயர் ஆர்.பிரியா ஆய்வுமேற்கொண்டுகழவுநீர்தொட்டிகளை தூர்வார அலுலர்களுக்கு உத்தரவிட்டார்.

# மயிலாப்பூரில் எடப்பாடி கே.பழனிசாமியின் பிறந்த நாளையொட்டி கால்பந்து போட்டி: நடிகை கவுதமி பரிசு வழங்கினார்



சென்னை. மே 22-

மயிலாப்பூரில் எம்.ஜி.ஆர் இளைஞரணி துணை செயலாளர் எம்.இராமலிங்கம் ஏற்பாட்டில் ,தலைவருக்கு பிறந்த நாள் இளைஞர்களுக்கான எழுச்சி நாள்) அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமியின் 71வது பிறந்த நாளை முன்னிட்டு நடைபெற்ற 48 அணிகள் கலந்து கொண்ட மாநில அளவிலான மாபெரும் கால்பந்தாட்ட விளையாட்டு போட்டியை முன்னாள் அமைச்சரும் எம்.ஜி.ஆர் இளைஞர் அணி செயலாளருமான என்.ஆர்.சிவபதி, துவக்கிவைத்தார்.

முதல் நாளில் 32 போட்டியும், இரண்டாம் நாளில் 16 போட்டியும் நடைபெற்றது.இந்த விளையாட்டு போட்டியில் மூத்த 10 கால்பந்தாட்ட வீரர்களுக்கு பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இறுதி போட்டியில் வெற்றி பெற்ற சாந்தோம் சாய் அணி முதல் பரிசை தட்டி சென்றது. இந்த அணிக்கு தென்சென்னை தெற்கு கிழக்கு மாவட்ட செயலாளர் எம்.கே.அசோக் ,கொள்கை பரப்பு துணை செயலாளர் நடிகை கௌதமி வெற்றி பெற்ற அணிக்கு பரிசு மற்றும் கோப்பையை வழங்கினார்.

இந்த் நிகழ்ச்சியில் மாணவர் அணி செயலாளர் சிங்கை ஜி. ராமசந்திரன், கழக மருத்துவ அணி இனை செயலாளர் டாக்டர் ராமசாமி, வழக்கறிஞர் அணி செயலாளர் ஐ.எஸ்.இன்பதுரை, எஸ்.டி.எஸ். செல்வம் கே.ஏ.கே முகில், தலைமை கழக பேச்சாளர் அப்ஸரா ரெட்டி, மயிலாப்பூர் கிழக்கு பகுதி செயலாளர் ஜெயச்சந்திரன், டி.சிவராஜ், ஆ.பழனி, ஜாகிர் உசேன், சல்மான் ஜாவித், ஆலந்தூர் ஆசார்,ஜெ. குலாம் நபி ஆசாத், 126 வது வட்ட செயலாளர் கோஷா முரளி உட்பட நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# சுகாதாரம் தொடர்பான ஆராய்ச்சி: எம்ஜிஆர் மருத்துவ பல்கலை-விஐடி புரிந்துணர்வு ஒப்பந்தம்

சென்னை மே 22-

செயற்கை நுண்ணறிவு சார்ந்த சுகாதாரம் தொடர்பான ஆராய்ச்சிக்காக விஐடி மற்றும் தமிழ்நாடு டாக்டர் எம்ஜிஆர் மருத்துவ பல்கலைக்கழகம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது. இதில் விஐடி பல்கலைக்கழகத்தின் துணை தலைவர் ஜி.வி.செல்வம் மற்றும் தமிழ்நாடு டாக்டர் எம்ஜிஆர் மருத்துவ பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் கே.நாராயணசாமி கையெழுத்திட்டனர். நிகழ்வில், விஐடி சென்னையின் இணை துணைவேந்தர் டி.தியாகராஜன், விஐடி வேந்தரின் ஆலோசகர் ச.ப.தியாகராஜன், தமிழ்நாடு டாக்டர் எம்ஜிஆர் மருத்துவ பல்கலைக்கழகத்தின் பதிவாளர் சிவசங்கீதா ஆகியோர் கலந்துகொண்டனர்.இந்த ஒப்பந்தத்தின் மூலம் பிஎச்டி மேற்பார்வை, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு திட்டங்களை சமர்ப்பித்தல், கூட்டு வெளியீடுகள், புதிய தொழில்நுட்பங்களின் வளர்ச்சி மற்றும் காப்புரிமை ஆகியவற்றை வளர்ப்பதிலும் கவனம் செலுத்தப்படும். விஐடி மற்றும் தமிழ்நாடு டாக்டர் எம்ஜிஆர் மருத்துவ பல்கலைக்கழகம் சுகாதாரத்துறையில் கூட்டு ஆராய்ச்சி மேற்கொள்ளும்.

தமிழ்நாடு அரசு
**கணபதிபுரம் முதல் நிலை பேரூராட்சி, கன்னியாகுமரி மாவட்டம்.**
ந.க.எண். 152 / 2025 / அ1 — **ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு** — நாள்.19.05.2025
சிறப்பு நிதி திட்டம் 2025-2026-ல் கணபதிபுரம் பேரூராட்சிக்குட்பட்ட புதுமடம் செவ்வல்குளம் முதல் வடக்கு பக்க நீலாம்பிகுளம் தார்சாலை மேம்பாடு செய்தல் பணி **ரூ.61.00 இலட்சம்** மதிப்பீட்டில் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் **03.06.2025 பிற்பகல் 3.00 மணி வரை https://tntenders.gov.in** என்ற இணையதளம் மூலம் வரவேற்கப்படுகிறது. ஒப்பந்தங்கள் 03.06.2025 **(செவ்வாய்கிழமை) 3.30 மணிக்கு** திறக்கப்படும். இதர விபரங்களை இணையதளம் வாயிலாகவும் பேரூராட்சி அலுவலகத்தில் வேலை நாட்களில் வேலை நேரங்களில் கேட்டு தெரிந்துகொள்ளலாம்.
செ.ம.தொ.இ /2460/ ஒப்பந்தப்புள்ளி / 2025
செயல் அலுவலர்
கணபதிபுரம் பேரூராட்சி
கன்னியாகுமரி மாவட்டம்

தமிழ்நாடு அரசு
**பேரூராட்சிகள் துறை - தேனி மாவட்டம், தேவாரம் பேரூராட்சி**
ந.க.எண்.75 / 2025 / நாள்: 19.05.2025
தேனி மாவட்டம். தேவாரம் பேரூராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் 2025-2026 இன்கீழ் மண்சாலைகளை தார்ச்சாலைகளாக அமைத்தல் பணிகள் மேற்கொள்ளுவதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு.
1.தேனி மாவட்டம், தேவாரம் பேரூராட்சியில் மேற்காணும் பணிகளை மேற்கொள்ள பேரூராட்சி செயல் அலுவலரால், தகுதியான ஒப்பந்ததாரர்களிடமிருந்து பணிகள் வாரியாக ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தபுள்ளி தொடர்பான விபரங்களை சம்பந்தப்பட்ட பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
2. பணியின் மதிப்பீடு **ரூ.78.50 இலட்சம்**
3. பணி வாரியான ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை http://tntenders.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து இலவசமாக எடுத்துக் கொள்ளலாம். இந்த இணையதள முகவரியிலிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விபரங்களும் பெறலாம்.
4. பொதுவான நேரம் மற்றும் நாள்.

| | | |
|---|---|---|
| அ | ஒப்பந்த நமூனா இறக்கம் செய்தல் | 20.05.2025 காலை 10.00 மணி முதல் 12.06.2025 மாலை 3.00 மணி வரை |
| ஆ | ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் | 12.06.2025 மாலை 3.00 மணி வரை |
| இ | ஒப்பந்தப்புள்ளிகள் திறத்தல் | 12.06.2025 மாலை 3.30 மணி |

ஒப்பந்தபுள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின், அதற்கு அடுத்த வேலை நாளில், அதே நேரத்தில், அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு திறக்கப்படும்.
செ.ம.தொ.இ / 2404 / ஒப்பந்தப்புள்ளி / 2025
செயல் அலுவலர்.
தேவாரம் பேரூராட்சி, தேனி மாவட்டம்.

தமிழ்நாடு அரசு
**பொதுப்பணித்துறை, கட்டடம் (க & ப) வட்டம் 2, சேப்பாக்கம், சென்னை-5**
ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண்: 05 கட்டட (க & ப) வட்டம் 2 /2025 - 2026 / நாள். 20.05.2025.
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை : மொத்த வகை /இன விலை முறை
தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை கட்டட (க (ம) ப) வட்டம் 2. சென்னை-5 அவர்களால் பொதுப்பணித்துறையில் தகுந்த வகுப்பில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து கீழ்காணும் பணிக்காக மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றது.

| வ.எண் | பணியின் பெயர் மற்றும் முன் வைப்புத் தொகை | பணியின் தோராய மதிப்பீட்டுத் தொகை | காலம் | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் தகுந்த வகுப்பு |
|---|---|---|---|---|
| 1. | செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டிலுள்ள அரசினர் சிறப்பு இல்லத்தில் கூடுதல் தங்கும் விடுதி, போதை மீட்பு மையம், கண்காணிப்பாளர் மற்றும் உதவி கண்காணிப்பாளர்களுக்கான குடியிருப்புகள் கட்டும் பணி. மு.வை.தொகை: ரூ.2,52,600/- | ரூ.485.10 இலட்சங்கள் | 8 மாதங்கள் | வகுப்பு III மற்றும் அதற்கு மேல் |

1. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியை அணுகவும்.
2. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : 12.06.2025 மாலை 03.00 மணி வரை.
3. ஒப்பந்தப்புள்ளிகள் இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 12.06.2025 மாலை 04.00 மணி.
செ.ம.தொ.இ / 2413/ ஒப்பந்தப்புள்ளி /2025
கண்காணிப்புப் பொறியாளர்,பொபது., கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம் 2, சேப்பாக்கம், சென்னை-5.

**கன்னியாகுமரி மாவட்டம்**
**அழகப்பபுரம் முதல் நிலை பேரூராட்சி**
ந.க.எண்: 408/2025/அ1 — ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு — நாள்: 14.05.2025
அழகப்பபுரம் முதல் நிலை பேரூராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் மற்றும் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தில் ரூ.1.08 இலட்ச மதிப்பீட்டில் அழகப்பபுரம் பேரூராட்சியில் சிமன்ட் சாலை அமைத்தல் பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.
1. ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளிகள் குறித்து முழு விபரங்களுடன் பெறலாம்.
2. ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்பான நேரம் மற்றும் நாள்:
அ) ஒப்பந்தப்புள்ளி விபர முன் கூட்டம் – 27.05.2025 மாலை 11.00 மணி வரை
ஆ) ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் – 11.06.2025 மாலை 3.00 மணி வரை
இ) ஒப்பந்தப்புள்ளி திறத்தல் – 11.06.2025 மாலை 4.00 மணி
3. ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின் அதற்கு அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு திறக்கப்படும்.
4. ஒப்பந்தப்புள்ளியின் காலநீட்டிப்பு குறித்த அறிவிப்பு மற்றும் ஒப்பந்தப்புள்ளி இரத்து செய்யப்பட்டது உள்ளிட்ட விபரங்களை மேற்படி இணைய முகவரியில் அறிந்து கொள்ளலாம்.
செ.ம.தொ.இ / 2456 / ஒப்பந்தப்புள்ளி / 2025
செயல் அலுவலர்
அழகப்பபுரம் முதல் நிலை பேரூராட்சி

**பணகுடி சிறப்பு நிலை பேரூராட்சி**
**திருநெல்வேலி மாவட்டம்**
ந.க.எண்.134/2025/அ1 — நாள்.20.05.2025
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
திருநெல்வேலி மாவட்டம், பணகுடி சிறப்புநிலை பேரூராட்சியில் சிறப்பு நிதி திட்டம் **(Special Fund) 2025-26-**ன் கீழ் பணியை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.
1. ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விபரங்களும் பெறலாம்.
2. ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்பான நேரம் மற்றும் நாள் :
அ) ஒப்பந்தப்புள்ளி விபர முன் கூட்டம் – 30.05.2025 முற்பகல் 11.00 மணி
ஆ) ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் – 04.06.2025 மாலை 3.00 மணி வரை
இ) ஒப்பந்தப்புள்ளி திறத்தல் – 04.06.2025 மாலை 3.30 மணி
3. ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாளன்று விடுமுறை தினமாக அறிவிக்கப்படின் அதற்கு அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு திறக்கப்படும்.
4. ஒப்பந்தப்புள்ளியின் மறு ஒப்பந்தம் அறிவிப்பு, கால நீட்டிப்பு குறித்த அறிவிப்பு மற்றும் ஒப்பந்தப்புள்ளி இரத்து செய்யப்பட்டது உள்ளிட்ட விபரங்களை மேற்படி இணையதள முகவரியான https://tntenders.gov.in–ல் அறிந்து கொள்ளலாம்.
(ஒம்) திருமதி.த.தனலெட்சுமி, தலைவர், சிறப்பு நிலை பேரூராட்சி, பணகுடி–627109, திருநெல்வேலி மாவட்டம்
செ.ம.தொ.இ/2468/ஒப்பந்தப்புள்ளி/2025
(ஒம்) திரு.மூ.சி.சுப்பிரமணியன், செயல் அலுவலர் (பொ) சிறப்பு நிலை பேரூராட்சி, பணகுடி–627109, திருநெல்வேலி மாவட்டம்

தமிழ்நாடு அரசு
**பொதுப்பணித்துறை**
கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், திருச்சி-1.
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் : 03 க.பொ/க (க & ப) வட்டம். / திருச்சி /2025-2026/ நாள் : 20.05.2025
இனவிலை முறை ஒப்பந்தவகை : ஒட்டுமொத்தம்
தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும் கண்காணிப்புப்பொறியாளர், பொதுப்பணித்துறை கட்டடம் (க&ப ) வட்டம் திருச்சி-1 அவர்களால் பொதுப்பணித்துறையில் தகுந்த வகுப்பில் பதிவு செய்துள்ள மின் ஒப்பந்தகாரர்களிடமிருந்து கீழ்காணும் பணிக்கான மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

| வ. எண் | பணியின் பெயர் | பணியின் தோராய மதிப்பு தொகை (ரூபாய் இலட்சங்களில்) | முன்வைப்புத் தொகை | ஒப்பந்தக் காலம் | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரர்கள் வகுப்பு (திருத்திய வகுப்பின் படி) |
|---|---|---|---|---|---|
| 1 | திருச்சி மாவட்டம், லால்குடியில் உள்ள காட்டூர் லால்குடி இரயில் நிலையத்திற்கு இடையே உள்ள ROB, கி.மீ 1/6 சிறுதையூர்- செங்கரையூர் சாலையில் LC No. 226-311/8-9-க்கு பதிலாக LED தெரு விளக்கு அமைக்கும் பணி. | ரூ.56.53 | ரூ. 38,300/- | 3 மாதங்கள் | வகுப்பு-IV மற்றும் அதற்கு மேல் வகுப்பில் பதிவு பெற்றவர்களாகவும் ESB மற்றும் அதற்கு மேல் மின் உரிமம் பெற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும். |

1. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு https:/tntenders.gov.in என்ற இணையதள முகவரியினை அணுகவும். 2. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் கிடைக்கப்பெறும் நாள் : **26.05.2025 முதல் 10.06.2025 மாலை 3.00 மணி** வரை. 3. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் : **10.06.2025 மாலை 3.00 மணி** வரை. 4. ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலமாக திறக்கப்படும் நாள் மற்றும் **நேரம் : 11.06.2025 மாலை 3.30 மணி முதல்.**
செ.ம.தொ.இ/2430/ஒப்பந்தப்புள்ளி/2025
கண்காணிப்புப் பொறியாளர் பொபது., கட்டட (க&ப) வட்டம், திருச்சி-1.

தமிழ்நாடு அரசு
**பொதுப்பணித்துறை**
கட்டடம் (க&ப) வட்டம், திருச்சி-1
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.04கபொ/கட்டட(க&ப)வட்டம்/திருச்சி–1/2025–2026/ நாள்–20.05.2025
முன்தகுதி விண்ணப்பம் மற்றும் விரிவான இன விலை ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை (இரு உறை முறை)
ஒப்பந்த வகை : ஒட்டு மொத்தம்
தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், திருச்சி–1 அவர்களால் பொதுப்பணித்துறையில் தகுந்த வகுப்பில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து கீழ்காணும் பணிக்கான மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

| வ.எண். | பணியின் பெயர் | பணியின் தோராய மதிப்பு (ரூபாய் இலட்சங்களில்) | முன்வைப்புத் தொகை | ஒப்பந்தக் காலம் | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் வகுப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | திருச்சி மாவட்டம் மணப்பாறை அரசு தலைமை மருத்துவமனையில் 50 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சை மையம் கட்டும் பணி | ரூ.1800.00 | ரூ.9,10,000/– | 16 மாதங்கள் | வகுப்பு -I மற்றும் அதற்கு மேல் |

1. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியினை அணுகவும்.
2. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் கிடைக்கப்பெறும் நாள் : 26.05.2025 முதல் 25.06.2025 மாலை 3.00 மணி வரை
3. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம்: 25.06.2025 மாலை 3.00 மணி வரை.
4. ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலமாக திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 26.06.2025 மாலை 3.30 மணி முதல்
செ.ம.தொ.இ/2431/ஒப்பந்தப்புள்ளி/2025
கண்காணிப்புப் பொறியாளர், பொபது., கட்டட (க & ப) வட்டம், திருச்சி–1

# சேலம் தாதகாப்பட்டி உழவர் சந்தை தொடங்கி வைக்கப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி உழவர் சந்தைக்கான வெள்ளிவிழா

## அமைச்சர் இரா.ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது



சேலம்,மே.22-

முன்னாள் முதல்வர் கருணாநிதியால் சேலம், தாதகாப்பட்டி உழவர் சந்தை தொடங்கி வைக்கப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி, சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில் உழவர் சந்தைக்கான வெள்ளிவிழா (21.05.2025) நடைபெற்றது. இவ்விழாவில் கலெக்டர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, , மாநகராட்சி மேயர் ஆ. இராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சிப்பொறுப்பேற்றவுடன் விவசாயிகளின் நலன் காத்திடும் வகையில் வேளாண்மைத்துறைக்கென தனி நிதிநிலை அறிக்கையினைச் செயல்படுத்தி உள்ளார்கள். அதன்படி கடந்த 4 ஆண்டுகளில் பல்வேறு உழவர் நலன் காக்கும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்தவகையில், நடப்பு நிதியாண்டில் ரூ.45,661 கோடி என அதிகளவிலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.,

விவசாயிகள் தங்களது விளைப் பொ ருட் களை இடைத்தரகர்கள் இன்றி நேரடியாக பொதுமக்களிடம் விற்பனை செய்ய திட்டமிட்ட அப்போதைய தமிழ்நாடு முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட உன்னத திட்டம் உழவர் சந்தை திட்டமாகும். சேலம் மாவட்டத்தில் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களால் சூரமங்கலம், அம்மாப்பேட்டை மற்றும் ஆத்தூர் உழவர் சந்தைகள் துவக்கி வைக்கப்பட்டு 25 ஆண்டுகள் கடந்த ஆண்டு வெள்ளிவிழா கொண்டாடப்பட்டது. தாதகாப்பட்டி உழவர்சந்தையானது 19.05.2000 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டு தற்போது 25 ஆண்டுகள் சிறப்பாக செயல்பட்டு 26வது ஆண்டில் அடியெடுத்து வைத்து வெள்ளிவிழா கொண்டாடப்படுகிறது.

தற்பொழுது சேலம் மாவட்டத்தில் 13 உழவர் சந்தைகள் செயல்பட்டு வருகின்றது. தமிழ்நாட்டிலேயே சேலம் மாவட்டம் அதிக உழவர் சந்தைகளை கொண்டுள்ளது. காய்கறிகள் அதிக வரத்து மற்றும் விற்பனை செய்யும் உழவர் சந்தைகளில் சூரமங்கலம் உழவர் சந்தை தமிழகத்திலேயே 4 வது இடத்திலும், தாதகாப்பட்டி உழவர் சந்தை தமிழகத்திலேயே 5 வது இடத்தில் உள்ளது. 90 கடைகளுடன் தொடங்கப்பட்ட தாதகாப்பட்டி உழவர்சந்தை கூடுதலாக 80 கடைகள் கட்டப்பட்டு தற்போது 170 கடைகளுடன் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இதுவரை 650 க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. நாள் ஒன்றுக்கு சராசரியாக 17 முதல் 195 வரை விவசாயிகள் தங்கள் காய்கறிகளை விற்பனை செய்ய வருகை புரிகின்றனர். தினசரி 45 முதல் 55 டன் வரையிலான காய்கறிகள் விற்பனையாகிறது. மேலும், 2024-ஆம் ஆண்டு மேச்சேரி மற்றும் வாழப்பாடி வட்டாரங்களில் புதிய உழவர் சந்தைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கிராமங்களில் இருந்து விவசாயிகள் விளைப்பொருட்களை உழவர் சந்தைக்கு பேருந்துகளில் எடுத்து வர சுமைகட்டணம் முற்றிலும் இலவசமாக உள்ளது.

காய்கறிகள், பழங்கள் மற்றும் பூக்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் விவசாயிகளை கண்டறிந்து, அவர்களது விளைபொருட்களை உழவர் சந்தையில் விற்பனை செய்வதற்கு ஏதுவாக அடையாள அட்டை வழங் கப் ப டு கி றது. அனைத்து உழவர் சந்தைகளுக்கும் எடைத்தராசுகள், மின் இணைப்பு, குளிர்பதன கிடங்கு மற்றும் கழிப்பிட வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. இதுமட்டுமல்லாமல் தரமான மலை காய்கறிகளும் மற்றும் மதிப்பூட்டப்பட்ட பொருட்களும் நுகர்வோருக்கு குறைந்த விலையில் கிடைக்க ஆங்கில காய்கறி கடைகளும், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், உற்பத்தியாளர் குழுக்கள் மற்றும் சுய உதவி குழுக்கள் மூலம் நடத்தப்படுகின்றன.

விவசாய பெருங்குடி மக்களின் நலனில் அக்கரையுடனும், உழவர்களை போற்றும் அரசாகவும் தமிழ்நாடு முதலமைச்சர் திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் பேசினார்கள்.

வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் சார்பில் இன்றைய தினம் 21 பயனாளிகளுக்கு ரூ.6.30 இலட்சம் மதிப்பிலான உழவர் சந்தை அடையாள அட்டை, தார்ப்பாய், தார்பாலின், டிராக்டர், பவர் வீடர் மற்றும் வேளாண் விளை பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் வழங்கினார்கள்.

பின்னர் முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களால் 19.05.2000 ஆம் ஆண்டு உழவர் சந்தை தொடங்கப்பட்டபோது உழவர் சந்தை அடையாள அட்டை பெற்ற விவசாயிகளை பாராட்டி பொன்னாடை அணிவித்து சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் கௌரவித்தார்கள். முன்னதாக சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தாதகாப்பட்டி உழவர் சந்தையில் விவசாயிகள் மற்றும் பொதுமக்களிடம் உழவர் சந்தையின் செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்தார்கள்.

இந் நி கழ் வின் போது, மாநகராட்சி துணை மேயர் மா.சா ர தா தே வி, வேளாண்மை இணை இயக்குநர் சி.சிங்காரம், சேலம் வருவாய் கோட்டாட்சியர் அ.அபிநயா, துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) ஆர்.பிரேமா, சேலம் விற்பனைக் குழு முதுநிலை செயலாளர் இரா.சுரேஷ்பாபு, கொண்டலாம்பட்டி உதவி ஆணையர் வேடியப்பன், மண்டலக்குழுத்தலைவர் அசோகன், மாமன்ற உறுப்பினர் ஜி.கனிமொழி கணேசன், சமூக ஆர்வலர் இராஜேந்திரன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.

# தருமபுரி மாவட்ட அனைத்து துறைகளின் வளர்ச்சி திட்டப்பணிகள் மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாட்டு பணிகள்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக்குழு தலைவர் எஸ்.காந்திராஜன் தலைமையில் ஆய்வு



தருமபுரி,மே.22-

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, மதிப்பீட்டுக்குழு தலைவர் / வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.காந்திராஜன் தலைமையில், குழு உறுப்பினர்கள், கலெக்டர் ரெ.சதீஸ், முன்னிலையில் தருமபுரி மாவட்ட அனைத்து துறைகளின் வளர்ச்சி திட்டப் பணிகள், அடிப்படை வசதிகள் மேம்பாட்டு பணிகள் குறித்து (21.05.2025) பல்வேறு இடங்களில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

இந்த ஆய்வில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, மதிப்பீட்டுக்குழு தலைவர் / வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.காந்திராஜன் தலைமையில் குழு உறுப்பினர்களான சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன், வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர்.தி.சதன் திருமலைக்குமார், மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சுதர்சனம், ஆரணி சட்டமன்ற உறுப்பினர் சேவூர்.S.இராமச்சந்திரன், திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் S.S.பாலாஜி, தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பி. வெங்கடேஷ்வரன் ஆகியோர் தருமபுரி மாவட்டத்தில் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகள், அடிப்படை வசதிகள் மேம்பாட்டு பணிகள் உள்ளிட்ட பல்வேறு திட்டப்பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுவினர் தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், நார்த்தம்பட்டியில் வனத்துறையின் சார்பில் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் சுமார் 2 1/2 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள மரகதப்பூங்காவில் மரங்கன்றுகளை நட்டு வைத்து, மரகத்பூங்காவினை பார்வையிட்டார்கள்.

இதனைதொடர்ந்து, அதியமான்கோட்டையில் இந்து சமய அறநிலைய துறையின் சார்பில் ரூ.1.79 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் அருள்மிகு காலபைரவர் திருக்கோவில் பக்தர்கள் தங்கும் விடுதியினை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு பக்தர்கள் தேவைக்காக மேற்கொள்ளப்பட்டு வரும் தங்கும் அறைகள் குறித்தும், குடிநீர், கழிப்பறை, மின்விளக்குகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்தும் கேட்டறிந்தார்கள்.

தொடர்ந்து, தருமபுரி வட்டம், மதிகோண்பாளையத்தில் சனத்குமார் நதியினையினையும், சோகத்தூர் கூட்டுரோடு அருகில் அமைந்துள்ள மாவட்ட சிறைச்சாலையினையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, சிறைச்சாலைகளில் அறைகளின் தூய்மை, குடிநீர் வசதி, காற்றோட்ட வசதி, உணவின் தரம் சிறைவாசிகளுக்கு உரிய சட்ட உதவிகள் வழங்கப்படுவது குறித்து கேட்டறிந்தார்கள்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுவினர் தருமபுரி மாவட்டம், பாப் பா ரப் பட்டி வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நிலைய செயல்பாடுகள், செயல்விளக்க திடல்கள், பயிர் இரகங்கள், வகைகள் ஆகியவற்றை நேரில்

பார்வையிட்டு, விஞ்ஞானிகள் மற்றும் விவசாயிகளிடம் கலந்துரையாடினர். மேலும், இந்நிகழ்வில் 17 விவசாயிகளுக்கு ரூ.8.82 இலட்சம் மதிப்பில் ராகி விதை, சிறுதானிய விதை, பயிர்கடன்கள், சொட்டுநீர் பாசனம், தென்னைமரம் ஏறும் கருவிகள் உள்ளிட்ட அரசு நலத்திட்ட உதவிகளை மதிப்பீட்டுக்குழு தலைவர் வழங்கினார்.

பின்னர், தருமபுரி மாவட்ட கலெக்டர் அலுவலக கூடுதல் கூட்டரங்கில், மாவட்ட திட்டப்பணிகள் குறித்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுவின் (2024-2026) கள ஆய்வுக்கூட்டம் மதிப்பீட்டுக் குழு தலைவர் எஸ்.காந்திராஜன் தலைமையில், கலெக்டர் ரெ.சதீஸ், குழு உறுப்பினர்கள் சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன், வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர். தி.சதன் திருமலைக்குமார், மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சுதர்சனம், ஆரணி சட்டமன்ற உறுப்பினர் சேவூர்.S.இ ரா மச் சந் தி ரன், திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் S.S.பாலாஜி, தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பி. வெங்கடேஷ்வரன் மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கோவிந்தசாமி, அரூர் சட்டமன்ற உறுப்பினர் வே.சம்பத்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்த ஆய்வுக்கூட்டத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் 5 பயனாளிகளுக்கு ரூ.3.00 இலட்சம் மதிப்பில் இலவச வீட்டுமனை பட்டாக்களையும், ஊரக வளர்ச்சித்துறை சார்பில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் ஒரு பயனாளிக்கு ரூ.3.50 இலட்சம் மதிப்பில் ஆணையினையும், மகளிர் திட்டம் சார்பில் ஒரு மகளிருக்கு ரூ.1.50 இலட்சம் மதிப்பில் சமுதாய முதலீட்டு நிதி உதவியினையும், தொழிலாளர் நலத்துறையின் சார்பில் ஒரு தொழிலாளியின் வாரிசுதாரர்ருக்கு ரூ.55,000/- மதிப்பில் இயற்கை மரண உதவித் தொகை என மொத்தம் 8 பயனாளிகளுக்கு ரூ.8.55 இலட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகளை ரூபாய் 72 இலட்சத்து 45 ஆயிரம் மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழு தலைவர் எஸ்.காந்திராஜன் வழங்கினார். தொடர்ந்து பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக்குழு தலைவர் பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வுகளின்போது, சட்டமன்றப் பேரவை முதன்மை செயலாளர் முனைவர்.கி.சீனிவாசன், கூடுதல் கலெக்டர் (வளர்ச்சி) செல்வி.கேத்தரின் சரண்யா, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.எஸ்.மகேஸ்வரன், மாவட்ட வன அலுவலர் ராஜாங்கம்,இ.வ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் ஆர்.கவிதா, வருவாய் கோட்டாட்சியர் இரா.காயத்ரி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) கவிதா, அனைத்து துறை முதன்மை அலுவலர்கள், சட்டமன்ற பேரவை குழு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



நாமக்கல் மாவட்டம், மல்லசமுத்திரம் ஊராட்சி ஒன்றியம், காட்டூர் ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழ்நாடு அரசின் சாதனை விளக்க புகைப்பட கண்காட்சியினை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.

# ஊத்தங்கரையில் அனுமதியின்றி கனிமம் கடத்திய வாகனம் பறிமுதல்

## தாசில்தார் மோகன்தாஸ் நடவடிக்கை



கிருஷ்ணகிரி,மே.22-

கிருஷ்ணகிரி கலெக்டர் ச. தினேஷ்குமார் ஆலோசனையில் ஊத்தங்கரை வட்டம், சிங்காரப்பேட்டை தரப்பு, கோவிந்தாபுரம் கிராமத்தில் ஊத்தங்கரை தாசில்தார் மோகன்தாஸ் தலைமையில் வாகனத் தணிக்கையில் ஈடுபட்டிருந்தனர், அப்போது வண்டி எண் TN 52 D 3348 கொண்ட லாரியில் அரசின் உரிய அனுமதியின்றி M sand (அரவை மணல் ) கனிமத்தை கடத்திச் சென்றது தெரியவந்தது, மேற்படி வாகனத்தை கனிமத்துடன் கைப்பற்றப்பட்டு சிங்காரப்பேட்டை காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது, உடன் வருவாய் ஆய்வாளர் திருவேங்கடம், முதுநிலை வருவாய் ஆய்வாளர் சென்ராயன் உள்ளிட்ட வருவாய் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

# ஓசூரில் பணிபுரியும் பெண்கள் தங்கும் தோழி விடுதி முதல்வர் ஸ்டாலின் காணொளி மூலம் திறந்து வைத்தார்



கிருஷ்ணகிரி,மே.22-

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் அருகே உள்ள விஸ்வநாதபுரம் கிராமத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் நிறுவனம் சார்பில் ரூ.12 கோடியே 37 லட்சம் மதிப்பில் புதியதாக கட்டப்பட்டுள்ள தோழி விடுதி கட்டிடத்தை தமிழக முதல்வர் ஸ்டாலின் காணொளி மூலம் திறந்து வைத்தார். இதனை தொடர்ந்து விடுதியை கலெக்டர் தினேஷ்குமார், எம்எல்ஏ பிரகாஷ், மேயர் சத்யா ஆகியோர் குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்து பார்வையிட்டனர்.

பின்னர் கலெக்டர் கூறும்போது, பணி நிமித்தமாக தங்கள் சொந்த ஊர்களை விட்டு பிறநகரங்களுக்கு இடம் பெயர்ந்து பணிபுரியும் பெண்களின் தேவைகளை உணர்ந்து தரமான, பாதுகாப்பான மற்றும் குறைந்த கட்டணத்தில் பெண்களுக்கான தங்கும் விடுதிகளான 'தோழி விடுதிகள்'' சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ் நடத்தப்பட்டு வருகின்றது. அதே போல் விஸ்வநாதபுரத்தில் தொடங்கப்பட்டுள்ளது. இந்த விடுதியில் 166 படுக்கை வசதிகளுடன் கூடிய 59 அறைகளும், பயோமெட்ரிக் உள் நுழைவு, 24 மணிநேரமும், பாதுகாப்பு வசதி, இலவச இன்டர்நெட் வசதி, பொழுதுபோக்கு அம்சங்கள், அயனிங் வசதி, கெய்சர் வசதி, சிசிடிவி வசதி, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், ஆரோக்கியமான உணவு, தொலைக்காட்சி, சலவை இயந்திரம், இஸ்திரி வசதி, வாகன நிறுத்துமிடம் போன்ற வசதிகள் அமைக்கப்பட்டுள்ளது. இத்தோழி விடுதியிலிருந்து 3 கிலோ மீட்டர் தூரத்தில் பேருந்து நிலையமும், 5 கிலோ மீட்டர் தூரத்தில் ரயில் நிலையமும், 4 கிலோ மீட்டர் தூரத்தில் அரசு மருத்துவமனையும், 4 கிலோ மீட்டர் தூரத்தில் காவல் நிலையமும் அமைந்துள்ளது. எனவே, பல்வேறு மாவட்டங்களிலிருந்து ஓசூர் மாநகரை சுற்றியுள்ள தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் பெண்கள் இத்தோழி விடுதியை பயன்படுத்திக் கொள்ளலாம் என கலெக்டர் கூறினார். இந்த நிகழ்வில் ஓசூர் உதவி கலெக்டர் பிரியங்கா, துணை மேயர் ஆனந்தய்யா, மாவட்ட சமூக நல அலுவலர் சக்தி சுபாசினி, வட்டாட்சியர் குணசிவா, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் முருகன், விஜயா, ஓசூர் ஒன்றிய செயலாளர்கஜேந்திர மூர்த்தி, ஒன்றிய துணை செயலாளர் வீரபத்திரப்பா, ஆராதனா அறக்கட்டளை நிறுவனர் ராதா, சமூக நலத்துறை பணியாளர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# நாமக்கல் மாவட்டம் ஆர்.புதுப்பட்டியில் வீட்டுமனை பட்டா வழங்குவது குறித்து கலெக்டர் ச.உமா கள ஆய்வு



நாமக்கல்,மே.22-

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், ஆர்.புதுப்பட்டி பேரூராட்சியில் (21.5.2025) கலெக்டர் மருத்துவர் ச.உமா, நகர்ப்புற பகுதிகளில் வீட்டுமனை வழங்கும் சிறப்புத் திட்டத்தின் கீழ் வீட்டுமனைப் பட்டா வழங்குவது தொடர்பாக ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர் நகர்ப்புற பகுதிகளில் நீண்ட நாட்களாக பட்டாக்கள் ஏதுமின்றி, ஆட்சேபனையற்ற அரசு புறம்போக்கு நிலங்களில் ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக வீடு கட்டி வாழும் மக்களுக்கு அவர்களுடைய வாழ்வாதார மேம்பாட்டிற்காக அரசின் சில வரைமுறைகளுக்கு உட்பட்டு, பட்டா வழங்கிட அறிவுறுத்தியுள்ளார்கள்.

அதன்படி, ஆர்.புதுப்பட்டி பேரூராட்சியில் உள்ள குடியிருப்பு வாசிகள் நகர்ப்புற வீட்டுமனைப் பட்டா வழங்கும் சிறப்புத் திட்டத்தின் கீழ் விண்ணப்பித்திருந்த நபர்களின் குடியிருப்புகளுக்கு கலெக்டர் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வில் குடியிருப்புவாசிகளிடம், நீண்ட வருடங்களாக வசிப்பதற்கான வீட்டு வரி ரசீது, மின் இணைப்பு ரசீது, மற்றும் வருமான வரம்பு உள்ளிட்ட ஆவணங்களை சரி பார்த்து ஆய்வு மேற்கொண்டார். ஆவணங்கள் சரியாக இருப்பின் அரசின் விதிமுறைகளுக்குட்பட்டு வீட்டுமனை வரன்முறைபடுத்தி, நகர்ப்புற பகுதிகளில் வீட்டுமனை வழங்கும் சிறப்பு திட்டத்தின் கீழ் விரைவில் பட்டா வழங்கப்படும் என தெரிவித்தார்.


முன்னதாக, இராசிபுரம் வட்டம், இம்மானுவேல் மாணவர்கள் விடுதியில் உரிமம் வழங்குவது குறித்தும், இராசிபுரத்தில் செயல்பட்டு வரும் தூய இருதய மாணவியர் விடுதியில் அடிப்படை வசதிகள், மாணவியர்களுக்கான பாதுகாப்பு வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

ஸ்ரீ தேவி திரையங்கில் வருடாந்திர உரிமம் (சி படிவம்) புதுப்பித்தல் குறித்து வாடிக்கையாளர்களுக்கான அடிப்படை வசதிகள், இருக்கைகள் வசதி, திரை அளவு, ஒலி, ஒளி அளவுகள் மற்றும் தரம், தீயணைப்பு கருவிகள், அவரச கால வெளியேறும் வழி வசதிகள், கட்டண விபரம் உள்ளிட்டவை குறித்து ஆய்வு மேற்கொண்டு, அரசின் விதிமுறைகளை முறையாக பின்பற்ற வேண்டுமென திரையரங்க உரிமையாளர்களுக்கு உத்தரவிட்டார்.

தொடர்ந்து, சேந்தமங்கலம் வட்டம், பேளுக்குறிச்சி, கெஜகோம்மை மற்றும் கல்குறிச்சி உள்ளிட்ட பகுதிகளில் வன எல்லை நிர்ணயம் செய்தல், காப்பு நிலமாக அறிவித்தல் ஆகியவை குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
17-A/2, Meyyanur Road,
Salem - 636 004.
Ph: 0427- 2334165
E-Mail: salemedi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2001/4003
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# தேய்பிறை அஷ்டமியை முன்னிட்டு வெள்ளி கவச அலங்காரத்தில் காலபைரவர்



தர்மபுரி,மே.22-

வைகாசி மாத தேய்பிறை அஷ்டமியை முன்னிட்டு தர்மபுரி அடுத்த அதியமான்கோட்டை தட்சணகாசி கால பைரவர் கோயிலில் நேற்று தட்சணகாசி கால பைரவருக்கு, அஷ்ட பைரவ யாகம், அஷ்டலட்சுமி யாகம், தனகார்சன குபேர யாகம் உள்ளிட்ட பல்வேறு யாகங்கள் நடந்தன. தொடர்ந்து, 64 வகையான அபிஷேகங்கள், 1,008 அர்ச்சனை, 28 ஆகம பூஜைகள் நடந்தன.

அதை தொடர்ந்து தட்சணகாசி காலபைரவர் வெள்ளி காப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்தார். தேய்பிறை அஷ்டமியை முன்னிட்டு அதியமான்கோட்டை கால பைரவர் கோயிலுக்கு தமிழகம் மற்றும் கர்நாடகாவில் இருந்து பல்வேறு பகுதிகளை சேர்ந்த ஏராளமான பக்தர்கள் தட்சண காசி கால பைரவரை வழிபட்டனர். மேலும் சாம்பல் பூசணி, தேங்காய், எள் தீபம் உட்பட பல்வேறு தீபங்கள் ஏற்றி தங்களது நேர்த்திக்கடனை செலுத்தினார்கள்.

# சட்டவிரோதமாக மதுபாட்டில்கள் பதுக்கி வைத்து விற்றவர் கைது

சென்னை மே 22-

திருவொற்றியூர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், காவல் குழுவினர் திருவொற்றியூர், டி.எச் ரோட்டில் காலை, கண்காணித்து, அங்கு சட்டவிரோதமாக மது பாட்டில்களை பதுக்கி வைத்து விற்பனை செய்த செந்தில்குமார், என்பவரை கைது செய்தனர்.

அவரிடமிருந்து 9 மதுபாட்டில்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட எதிரி செந்தில் குமார் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.

# ஓய்வு குறித்த ரோகித் சர்மாவின் பரிந்துரையை நிராகரித்த பி.சி.சி.ஐ.



**புதுடெல்லி, மே 22-**

ஓய்வு குறித்த ரோகித் சர்மாவின் பரிந்துரையை பி.சி.சி.ஐ. நிராகரித்ததாக புதிய தகவல் வெளியாகியுள்ளது.

**டெஸ்டில் ஓய்வு...**

இந்திய கிரிக்கெட் அணியின் கேப்டன் ரோகித் சர்மா டெஸ்ட் போட்டியில் இருந்து ஓய்வு பெறுவதாக சமீபத்தில் திடீரென அறிவித்தார். அவரைதொடர்ந்து விராட் கோலியும் டெஸ்டில் ஓய்வு முடிவை வெளியிட்டார். இருவரும் ஏற்கனவே 20 ஓவர் போட்டியில் இருந்து ஓய்வு பெற்று விட்டனர். ஒரு நாள் போட்டியில் மட்டுமே ஆடுவார்கள்.

**பி.சி.சி.ஐ நிராகரிப்பு....**

இந்த நிலையில் ரோகித் சர்மாவின் ஓய்வு குறித்து புதிய தகவல்கள் வெளியாகி உள்ளது. டோனி பாணியில் அவர் ஓய்வு பெறும் திட்டத்தை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்திடம் (பி.சி.சி.ஐ.) பரிந்துரை செய்து உள்ளார். ஆனால் பி.சி.சி.ஐ. அதை நிராகரித்துள்ளது.

**வீரராகவே தேர்வு....**

2014-ம் ஆண்டு ஆஸ்திரேலிய பயணத்தின்போது டோனி பாதியிலேயே டெஸ்டில் இருந்து ஓய்வு பெற்றார். இதே மாதிரி இங்கிலாந்துக்கு எதிரான 5 டெஸ்ட் தொடரின் பாதியிலேயே ஓய்வு பெற ரோகித் சர்மா முடிவு செய்து இருந்தார். இதை கிரிக்கெட் வாரியம் நிராகரித்து விட்டது. இங்கிலாந்து தொடரில் அவரை கேப்டனாக இல்லாமல் வீரராகவே தேர்வு செய்ய தேர்வு குழு முடிவு செய்ததாகவும் கூறப்படுகிறது. இதனால் தான் ரோகித் சர்மா திடீர் ஓய்வு முடிவை எடுத்ததாகவும் அந்த தகவல் தெரிவிக்கிறது.

## இந்திய அணிக்கு கடினமானதாக இருக்கும்:
# இங்கி.. தொடர் குறித்து விக்ரம் ரத்தோர்

**மும்பை, மே 22-**

இந்திய டெஸ்ட் அணியின் முன்னணி வீரர்கள் அடுத்தடுத்து ஓய்வு அறிவித்த நிலையில், இங்கிலாந்து தொடர் இந்திய அணிக்கு மிகவும் கடினமானதாக இருக்கப் போகிறது என இந்திய அணியின் முன்னாள் பேட்டிங் பயிற்சியாளர் விக்ரம் ரத்தோர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக விக்ரம் ரத்தோர் கூறுகையில் "இங்கிலாந்து தொடர் இந்திய அணிக்கு எளிதாக இருக்கப் போவது இல்லை. ஏனென்றால் சீனியர் வீரர்கள் 3 பேர் ஓய்வு பெற்றுள்ளனர். ஆகவே, இளம் அணி விளையாட இருக்கிறது. புதிய கேப்டன் அணியை வழி நடத்த இருக்கிறார். இந்த அனைத்து விசயங்களும், கூடுதலாக நெருக்கடியை ஏற்படுத்தும். இருந்தபோதிலும், இளம் வீரர்கள் தங்களுடைய திறமை மற்றும் திறனை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பாக இருக்கும்" என்றார்.

## ஐ.பி.எல். 62-வது லீக் ஆட்டம்:
# சென்னையை வீழ்த்திய ராஜஸ்தான்



**புதுடெல்லி, மே 22-**

ஐ.பி.எல். 62-வது லீக் ஆட்டத்தில் சென்னையை வீழ்த்தி ராஜஸ்தான் அணி ஆறுதல் வெற்றியை பெற்றது.

**பந்துவீச்சு தேர்வு...**

டெல்லியில் நடைபெற்ற ஐ.பி.எல். தொடரின் 62-வது லீக் ஆட்டத்தில் ராஜஸ்தான் ராயல்ஸ், சென்னை சூப்பர் கிங்ஸ் அணிகள் மோதின. டாஸ் வென்ற ராஜஸ்தான் அணி பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி, முதலில் பேட்டிங் செய்த சென்னை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 187 ரன்கள் எடுத்தது. ஆயுஷ் மாத்ரே அதிரடியாக விளையாடி 20 பந்தில் 43 ரன் எடுத்து ஆட்டமிழந்தார். பிரேவிஸ் 42 ரன்னில் வெளியேறினார். ஷிவம் துபே 39 ரன்னில் அவுட் ஆனார்.

**188 ரன்கள் எடுத்து...**

ராஜஸ்தான் சார்பில் யுத்வீர் சிங் சரக், மத்வால் ஆகியோர் தலா 3 விக்கெட் வீழ்த்தினர். இதையடுத்து, 188 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ராஜஸ்தான் களமிறங்கியது. ஜெய்ஸ்வால் 19 பந்தில் 33 ரன் எடுத்து அவுட்டானார். அதிரடியாக ஆடிய சூர்யவன்ஷி 33 பந்தில் 57 ரன்னும், சஞ்சு சாம்சன் 41 ரன்னும் எடுத்து வெளியேறினர். கடைசி கட்டத்தில் பொறுப்புடன் ஆடிய ஜுரெல் 12 பந்தில் 31 ரன் எடுத்து அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றார். இறுதியில் ராஜஸ்தான் 17.1 ஓவரில் 4 விக்கெட்டுக்கு 188 ரன்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது. இது ராஜஸ்தான் பெற்ற 4வது வெற்றி ஆகும்.

**மோசமான சாதனை....**

இந்நிலையில், 2022ம் ஆண்டுக்குப் பிறகு நடப்பு சீசனிலும் அதிகபட்சமாக 10 போட்டிகளில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி தோல்வியை சந்தித்துள்ளது நடப்பி ஐபிஎல் தொடரில் 13 போட்டிகளில் விளையாடியுள்ள சி.எஸ்.கே. அணி 10 போட்டிகளில் தோல்வியை சந்தித்துள்ளது. சி.எஸ்.கே. அணி தனது கடைசி போட்டியில் (மே 25) குஜராத்தை எதிர்கொள்கிறது.

**சி.எஸ்.கே.வின் அதிக தோல்விகள்:**

1) 2022 - 10 தோல்விகள்.
2) 2025 - 10* தோல்விகள்.
3) 2012 - 8 தோல்விகள்.
4) 2020 - 8 தோல்விகள்.

# பேட்ஸ்மேன்களுக்கு தோனி அட்வைஸ்

டெல்லியில் நடந்த 62வது லீக் ஆட்டத்தில் சி.எஸ்.கே, ராஜஸ்தான் அணிகள் மோதின. முதலில் ஆடிய சிஎஸ்கே 187 ரன்கள் எடுத்தது. அடுத்து ஆடிய ராஜஸ்தான் 188 ரன்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது. இந்நிலையில், தோல்விக்கு பிறகு சிஎஸ்கே அணி கேப்டன் எம்.எஸ்.தோனி கூறியதாவது: நாங்கள் பேட்டிங்கில் நிர்ணயித்த இலக்கு ஒரு நல்ல ஸ்கோர் என நினைக்கின்றேன்.

ஏனென்றால் விக்கெட்டுகளை நாங்கள் அதிக அளவு இழந்ததால் கீழ் வரிசை வீரர்களுக்கு கடும் நெருக்கடி ஏற்பட்டது. விக்கெட்டுகள் அதிகம் இழப்பதன் மூலம் 20 ஓவரும் முழுமையாக விளையாட முடியாத நிலை ஏற்படும். ஆனால் பிரவீஸ் அபாரமாக விளையாடி சரியான வாய்ப்பை பயன்படுத்தி ரன்களை சேர்த்தார். எங்கள் அணியின் ரன்ரேட்டும் நன்றாகத்தான் இருந்தது. பவர் பிளேவில் நாங்கள் அதிக அளவு விக்கெட்டுகளை இழந்தோம். கூடுதலாக விக்கெட் இழந்ததால் எங்களால் ரிஸ்க் எடுத்து விளையாட முடியவில்லை. பவர்பிளேவில் நாங்கள் தொடர்ந்து மோசமாக செயல்பட்டு வருகிறோம். முதல் ஆறு ஓவரில் இவ்வளவு அதிக ரன்களை விட்டுக் கொடுக்கக் கூடாது. பேட்ஸ்மேன்கள் தங்களுடைய திறமையை புரிந்து கொண்டு விளையாட வேண்டும். பேட்ஸ்மேன்கள் தொடர்ந்து ஒரே மாதிரியான கன்சிஸ்டன்டுடன் விளையாட வேண்டும். உங்களால் சிக்சர்களை எந்த நிலையிலும் அடிக்க முடியும் .உங்களுக்கு நீங்களே அழுத்தத்தை செலுத்திக் கொள்ளாதீர்கள். சீனியர் வீரர்கள் மற்றும் பயிற்சியாளர்களிடமிருந்து கற்றுக் கொள்ளுங்கள். விளையாட்டை எப்படி அணுக வேண்டும் என்பதை கற்றுக் கொள்ள வேண்டும். இதுதான் என்னுடைய அறிவுரையாக இளைஞர்களுக்கு சொல்ல விரும்புகிறேன் என தெரிவித்துள்ளார்.

# பேட்மிண்டன்: பி.வி. சிந்து தோல்வி

மலேசியா மாஸ்டர்ஸ் சர்வதேச பேட்மிண்டன் போட்டி கோலாலம்பூரில் தொடங்கி நடைபெற்று வருகிறது. இதில் நடைபெற்ற ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் இந்தியாவின் பிரியான்ஷு ராஜாவத் சிங்கபூர் வீரரான ஜேசன் டெஹ் ஜியா ஹெங் உடன் மோதினர். இந்த ஆட்டத்தில் ராஜாவத் 15-21, 17-21 என்ற செட் கணக்கில் தோல்வியடைந்தார். மற்றொரு ஆட்டத்தில் ஸ்ரீகாந்த் கிடாம்பி, பிரனோய், ஷெட்டி, கருணாகரன் ஆகியோர் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினர்.

இதேபோல் பெண்களுக்கான ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் இந்தியாவின் பிவி சிந்து, வியட்நாமின் நுயான் துய் லின் உடன் மோதினார். முதல் செட்டை வியட்நாம் வீராங்கனையும் 2-வது செட்டை சிந்துவும் வெற்றி பெற்றனர். வெற்றியாளரை தீர்மானிக்கும் கடைசி செட்டை வியட்நாம் வீராங்கனை வென்றார். இதன்மூலம் 21-11, 14-21, 21-15 என்ற செட் கணக்கில் பிவி சிந்துவை வீழ்த்தி வியட்நாம் வீராங்கனை அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

## நாடு முழுவதும் 103
# அம்ரித் பாரத் ரயில் நிலையங்களை பிரதமர் இன்று திறந்து வைக்கிறார்

**புதுடெல்லி, மே 22-**

நாடு முழுவதும் 103 அம்ரித் பாரத் ரயில் நிலையங்களை பிரதமர் மோடி இன்று திறந்து வைக்கிறார்

'அம்ரித் பாரத்' திட்டத்தின் கீழ், 508 ரயில் நிலையங்களை, 24,470 கோடி ரூபாயில் மேம்படுத்தும் பணிகள் ஓராண்டாக நடந்து வருகின்றன. தெற்கு ரயில்வேயில், 40க்கும் மேற்பட்ட ரயில் நிலையங்கள் மேம்படுத்தப்படுகின்றன. இந்த நிலையில், நாடு முழுதும் பணிகள் நிறைவடைந்த 103 ரயில் நிலையங்களை, பிரதமர் மோடி டெல்லியில் இருந்து, காணொலி காட்சி வாயிலாக, இன்று திறந்து வைக்க உள்ளார்.

சென்னை பரங்கி மலை, சிதம்பரம், மன்னார்குடி, ஸ்ரீரங்கம், விருத்தாசலம், திருவண்ணாமலை, போளூர், கிருஷ்ணகிரி மாவட்டம் சாமல்பட்டி, ஆந்திர மாநிலம் சூலூர்பேட்டை உட்பட 12க்கும் மேற்பட்ட ரயில் நிலையங்கள் திறக்கப்பட உள்ளன. புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் மாஹே அம்ரித் பாரத் ரயில் நிலையங்களில் ஒன்றாக இருக்கும்.ரயில் நிலையத்தை பயணிகள் எளிதாக அடையாளம் காணும் விதமாகவும், முகப்புப்பகுதியை மேம்படுத்துவது, ரயில் நிலையங்களில் குறைந்தபட்ச அடிப்படை தேவைகளை ஏற்படுத்துதல், எஸ்கலேட்டர் வசதி, மாற்றுத்திறனாளிகளுக்கான வசதிகள், ரயில் நிலையத்தின் வடிவமைப்பு, 5-ஜி சேவை, நடைமேடைகளை மேம்படுத்துதல் மற்றும் ஏற்கனவே உள்ள வசதிகளை மேம்படுத்துதல் என்று நீண்டகால தேவையின் அடிப்படையில் புதிய நவீன வசதிகளுடன் ரயில் நிலையங்கள் புத்துருவாக்கப்பட்டுள்ளன.

## எந்த மனக்கசப்பு இல்லை:
# அன்புமணி விவகாரத்தில் டாக்டர் ராமதாஸ் விளக்கம்

**விழுப்புரம், மே 22**

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் அடுத்த தைலாபுரம் தோட்டத்தில் பாமக மாவட்ட செயலாளர்கள் மற்றும் தலைவர்களுக்கான ஆலோசனை கூட்டம் அதன் நிறுவனர் டாக்டர் ராமதாஸ் தலைமையில் கடந்த 15, 16-ம் தேதிகளில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் 9 மாவட்ட செயலாளர்கள், 11 மாவட்ட தலைவர்கள் மட்டுமே பங்கேற்றனர்.

பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ், 82 மாவட்ட செயலாளர்கள், 80 மாவட்ட தலைவர்கள் கூட்டத்தை புறக்கணித்தனர். மேலும் கட்சிக்குள் அப்பா, மகன் இருவரிடையே கோஷ்டி பிரச்சினை ஏற்பட்டுள்ளதாக அரசியல் நோக்கர்கள் கருத்து தெரிவித்தனர். இதனால் கட்சியினா'டையே தொடர்ந்து பரபரப்பும், குழப்பமும் நீடித்து வருகிறது.

இத்தகைய பரபரப்பான சூழ்நிலையில், திண்டிவனம் தைலாபுரம் தோட்டத்தில் பாமக நிறுவனர் டாக்டர் ராமதாஸ் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:- எனக்கும் அன்புமணி ராமதாசுக்கும் இடையே எந்த மனக்கசப்பும் இல்லை. வரும் நாட்களில் நடைபெறும் ஆலோசனை கூட்டங்களில் அன்புமணி ராமதாஸ் கலந்து கொள்வார். கசப்பான செய்தியை என்றும் நான் சொல்லவில்லை, இனிப்பான செய்தியை தான் சொல்வேன். பாமகவில் இருந்து அன்புமணி ராமதாஸை நீக்கபோவதாக வதந்திகளை கிளப்பி விடுகின்றனர். அவர்கள் யார் என எனக்கு தெரியும். பாமக நான் உருவாக்கிய கட்சி. அன்புமணியை நானே கட்சியில் இருந்து நீக்குவேனா?. இந்திய அளவில் சமூக நீதியை பேசுவது நான் ஒருவன்தான். நான் மட்டும்தான் அதை பேச முடியும். என்னை விட்டால் வேறு யாரும் பேச முடியாது. மற்றவர்களுக்கு அதைப் பற்றித் தெரியாது. சிங்கத்தின் கால்கள் பழுது படவில்லை; சீற்றமும் குறையவில்லை என நிரூபிக்கவே நேற்று நீச்சல் அடித்தேன். இவ்வாறு அவர் கூறினார்.

# காலை தொட்டு வணங்கிய வைபவ்

டெல்லியில் நடைபெற்ற ஐபிஎல் தொடரின் 62-வது லீக் ஆட்டத்தில் ராஜஸ்தான் ராயல்ஸ், சென்னை சூப்பர் கிங்ஸ் அணிகள் மோதின. டாஸ் வென்ற ராஜஸ்தான் அணி பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி, முதலில் பேட்டிங் செய்த சென்னை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 187 ரன்கள் எடுத்தது. இதையடுத்து, 188 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய ராஜஸ்தான் அணி 17.1 ஓவரில் 4 விக்கெட்டுக்கு 188 ரன்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது. இது ராஜஸ்தான் பெற்ற 4வது வெற்றி ஆகும்.

இப்போட்டியில் சிறப்பாக விளையாடிய ராஜஸ்தான் வீரர் வைபவ் சூர்யவன்ஷி அரைசதம் அடித்து அசத்தினார். இந்நிலையில், போட்டி முடிந்து இரு அணி வீரர்களும் கைகுலுக்கும்போது தோனியின் காலை தொட்டு வைபவ் சூர்யவன்ஷி வணங்கினார். இது தொடர்பான வீடியோ இணையத்தில் வைரலாகியுள்ளது.

# சி.எஸ்.கே பயிற்சியாளர் விளக்கம்

ஐ.பி.எல். தொடரில் டெல்லியில் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் ராஜஸ்தான் 6 விக்கெட் வித்தியாசத்தில் சென்னையை வீழ்த்தி அபார வெற்றி பெற்றது. இந்த தொடரில் இதுவரை 13 ஆட்டங்களில் ஆடியுள்ள சென்னை அணி அதில் 3 வெற்றி, 10 தோல்வி கண்டு புள்ளிப்பட்டியலில் கடைசி இடத்தில் உள்ளது. இந்நிலையில் நேற்றைய ஆட்டத்தில் தோல்வி கண்ட பின்னர் சி.எஸ்.கே பயிற்சியாளர் ஸ்டீபன் பிளெமிங் பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது,

உண்மையில் நாங்கள் புள்ளி பட்டியலில் கீழே இருப்பது எங்களுக்கு பிடிக்கவில்லை. இது எங்களுக்கு உந்து தலை தரக்கூடியது கிடையாது. நாங்கள் நல்ல செயல் திறனை மட்டுமே வெளிப்படுத்த விரும்பினோம். சில செயல் திறன்களை ஒன்றிணைக்கவும் நினைத்தோம். ஆனால், எங்களால் செய்ய முடியாமல் போய்விட்டது. நாங்கள் விளையாடிய முறைக்கு நாங்கள் புள்ளி பட்டியலில் பத்தாவது இடத்தில் இருக்க தகுதியானவர்கள். நான் எதையும் மறைக்க விரும்பவில்லை.

நாங்கள் எங்களுடைய பேட்டிங் ஆர்டரை மறுசீரமைக்க எப்பொழுதும் வேலை செய்து வருகிறோம். அடுத்த ஆண்டுக்கான வலுவான யோசனைகள் எங்களிடம் இருக்கிறது. ஆனால், இந்த ஆண்டு எங்களால் அதை செய்ய முடியாது. ஏனென்றால் எங்களுடைய டாப் ஆர்டரிடம் இருந்து ரன்கள் வரவில்லை.

நாங்கள் எவ்வளவு சிறப்பாக ஆரம்பத்தில் பேட்டிங்கை தொடங்குகிறோம் என்பதை பொறுத்து தான் அடுத்த யார் பேட்டிங் செய்ய வரவேண்டும்? என்பது தீர்மானிக்கப்படுகிறது. எங்களுக்கு நாங்கள் நினைத்தபடி மேலே இருந்து ரன்கள் கிடைக்கவில்லை. இதன் காரணமாக நாங்கள் நல்ல இன்னிங்சை உருவாக்குவதற்கு பதிலாக சரி செய்து வருகிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

# தோனி குறித்து சஞ்சய் பாங்கர்

ஒரு போட்டித் தொடரில் ஒரு அணி 13 போட்டிகளில் 10 போட்டியில் தோற்கிறது என்றால் கேப்டன்சி, அணித் தேர்வு, வீரர்களின் கடப்பாடு, ஸ்பிரிட் என்று அனைத்தும் கேள்விக்குட்பட்டே தீரும். இதில் தோனி பாவம் அவர் என்ன செய்வார் என்று ஒருதலைபட்சமாக வக்காலத்து வாங்க முடியாது. அவருக்கு போதுமென்ற மனம் வேண்டும் என்று பரிந்துரைக்கிறார் சஞ்சய் பாங்கர்.

ஆகாஷ் சோப்ராவோ இன்னும் ஒரு படி மேலே போய் 7 வீரர்களை சிஎஸ்கே உடனடியாக விடுவித்தால்தான் அடுத்த ஐபிஎல் தொடருக்காவது ஓர் இளம் சவால் அணியை உருவாக்க முடியும் என்று அவர் தெரிவித்துள்ளார்.



துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினிடம் நேற்று சென்னை, கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் கட்டப்பட்டு வரும் முதல்வர் சிறு விளையாட்டு அரங்கில், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உள்ளரங்க இறகு பந்து மைதானம் கட்டும் பணிக்காக சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் சார்பில் 2.25 கோடி ரூபாய்க்கான காசோலையை இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரும் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும தலைவருமான பி.கே.சேகர்பாபு வழங்கினார்.

# அரக்கோணத்தில் அ.தி.மு.க. ஆர்ப்பாட்டம்



**அரக்கோணம், மே 22-**

அரக்கோணம் நேற்று அ.தி.மு.க.வினர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் அடுத்த பருத்திபுத்தூர் கிராமத்தை சேர்ந்தவர் 21 வயது கல்லூரி மாணவி தெய்வச்செயல் என்பவர் மீது அரக்கோணம் மகளிர் காவல் நிலையத்தில் மாணவி சமீபத்தில் புகார் அளித்தார். இந்த புகார் குறித்து காவல் துறையினர் முறையாக விசாரிக்கவில்லை என்று மாணவி தரப்பில் குற்றசம் சாட்டப்பட்டது.

இந்நிலையில், மாணவிக்கு ஆதரவாக அ.தி.மு.க. சார்பில் அரக்கோணம் பழைய பேருந்து நிலையத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று அறிக்கை வெளியிட்டு இருந்தார். அதனடிப்படையில் நேற்று காலை 9.30 மணி அளவில் பழைய பேருந்து நிலையத்தில் அ.தி.மு.க. சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்த நகர காவல் நிலையத்தில் அனுமதி கேட்டு மனு அளித்தனர். இதற்கு காவல்துறை தரப்பில் அனுமதி மறுக்கப்பட்டது. இருப்பினும் தடையை மீறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுபவர்களை கைது செய்ய 200- க்கும் மேற்பட்ட போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அ.தி.மு.க.வி னர் தடையை மீறி முன்னாள் அமைச்சர் வளர்மதி தலைமையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்துக்கு அரக்கோணம் சட்டப்பேரவை உறுப்பினர் சு. ரவி, முன்னாள் மக்களவை உறுப்பினர் கோ.ஹரி ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆர்ப்பாட்டத்தில் தெய்வச்செயலை கண்டித்து கோஷங்கள் எழுப்பினர். தொடர்ந்து, முன்னாள் அமைச்சர் வளர்மதி தலைமையிலான அ.தி.மு.க.வினர் அரக்கோணம் வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர் சண்முகசுந்தரத்திடம், இவ்விவகாரத்தில் நடவடிக்கை எடுக்கவும், இந்த வழக்கை சிபிஐக்கு மாற்ற உத்தரவிட வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளுடன் புகார் மனு அளித்தனர்.

# மோடி அரசு கவர்னர்களை தவறாக பயன்படுத்துகிறது
## ராகுல் காந்தி குற்றச்சாட்டு

**புதுடெல்லி, மே 22-**

மோடி அரசு கவர்னர்களை தவறாக பயன்படுத்துகிறது என்று மக்களவை எதிர்கட்சி தலைவர் ராகுல் காந்தி குற்றச்சாட்டியுள்ளார்.

மக்களவை எதிர்கட்சி தலைவரும், காங்கிரஸ் கட்சியின் முக்கிய தலைவருமான ராகுல் காந்தி தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:- இந்தியாவின் பலம் அதன் பன்முகத்தன்மையில் உள்ளது - ஒவ்வொன்றும் அதன் சொந்தக் குரலைக் கொண்ட மாநிலங்களின் ஒன்றியம். மோடி அரசாங்கம் கவர்னர்களை தவறாகப் பயன்படுத்தி அந்தக் குரல்களை நசுக்கி, தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளைத் தடுக்கிறது. இது கூட்டாட்சியின் மீதான ஆபத்தான தாக்குதல், இதை எதிர்க்க வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தமிழ்நாடு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், இந்த விவகாரம் தொடர்பாக 8 மாநில முதல்-மந்திரிகளுக்கு எழுதிய கடிதம் தொடர்பான பதிவையும் ராகுல் காந்தி, தனது எக்ஸ் வலைதள பதிவில் பகிர்ந்துள்ளார்.

# மகாராஷ்டிராவில் கொரோனா பாதித்த 52 பேருக்கு சிகிச்சை

**மும்பை, மே 22-**

மகாராஷ்டிராவில் தற்போது கொரோனா பாதிப்பு காரணமாக லேசான அறிகுறிகளுடன் 52 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். அதே நேரத்தில் 16 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று அம்மாநில சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு ஜனவரி முதல் மகாராஷ்டிராவில் கோவிட்-19 பாதிப்பு காரணமாக இரண்டு பேர் உயிரிழந்துள்ளதாக மகாராஷ்டிர மாநில சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது. இதுகுறித்து சுகாதாரத் துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், "கொரோனா பாதித்து உயிரிழந்த இரண்டு பேரும் மும்பையைச் சேர்ந்தவர்கள். அவர்கள் இணை நோய்களை கொண்டவர்கள். இறந்தவர்களில் ஒருவருக்கு ஹைபோகால்சீமியா வலிப்புடன் நெஃப்ரோடிக் நோய் இருந்தது. மற்றொருவர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்.

மகாராஷ்டிராவில் ஜனவரி முதல் மொத்தம் 6,066 ஸ்வாப் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டது. அவற்றில் 106 பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டது. இவற்றில் 101 பேர் மும்பையைச் சேர்ந்தவர்கள், மீதமுள்ளவர்கள் புனே, தானே மற்றும் கோலாப்பூரைச் சேர்ந்தவர்கள் ஆவர். தற்போது, லேசான அறிகுறிகளுடன் 52 நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர், அதே நேரத்தில் 16 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இப்போது மகாராஷ்டிராவில் மட்டுமல்ல, பிற மாநிலங்கள் மற்றும் பிற நாடுகளிலும் கூட கோவிட்-19 பாதிப்புகள் அதிகரித்து காணப்படுகிறது" என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# மேட்டூர் அணையின் நீர் மட்டம் உயர்வு

**மேட்டூர், மே 22-**

காவிரி நீர் பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் மழையால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து நேற்று (மே.21) விநாடிக்கு 12,819 கன அடியாக அதிகரித்துள்ளது. அணையின் நீர்மட்டம் 110.03 அடியாக உயர்ந்துள்ளது

காவிரி நீர் பிடிப்புப் பகுதிகளில் கடந்த சில தினங்களாக மழை பெய்து வருவதால், மேட்டூர் அணைக்கான நீர்வரத்து அதிகரித்துள்ளது. தொடர் மழையின் காரணமாக காவிரியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, மேட்டூர் அணைக்கு நீர்வரத்து கடந்த 6 நாட்களாக அதிகரித்து வருகிறது. அதன்படி, 16-ம் தேதி 3,306 கன அடியும், 17-ம் தேதி 3,479 கன அடியும், 18-ம் தேதி 4,764 கன அடியும், 19-ம் தேதி 6,233 கன அடியும், நேற்று முன்தினம் (மே.20) விநாடிக்கு 9,683 கன அடியாக இருந்த நிலையில் நேற்று (மே.21) விநாடிக்கு 12,819 கன அடியாகவும் நீர்வரத்து அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக, மேட்டூர் அணையின் நீர் மட்டம் 109.33 அடியில் இருந்து, நேற்று காலை 110.03 அடியாக உயர்ந்துள்ளது. அணையின் நீர் இருப்பு 77.46 டிஎம்சியிலிருந்து, நேற்று 78.45 டி.எம்.சியாக உயர்ந்துள்ளது. மேட்டூர் அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக விநாடிக்கு 1,000 கன அடி நீர் திறக்கப்பட்டு வருகிறது. அணையில் இருந்து திறக்கப்படும் நீரின் அளவை விட, நீர்வரத்து பல மடங்கு அதிகரித்து இருப்பதால் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்து வருகிறது.

கடந்த 3 நாட்களில் அணை நீர்மட்டம் 1.51 அடியாகவும், நீர் இருப்பு 2.13 டிஎம்சியாகவும் உயர்ந்துள்ளது. அணைக்கு நீர்வரத்து தொடர்ந்து அதிகரிக்கும் பட்சத்தில் முழு கொள்ளளாவான 120 அடியை விரைவில் எட்ட வாய்ப்புள்ளது. எனவே, நீர்வளத்துறை அதிகாரிகள் காவிரி கரையோர பகுதிகள் மற்றும் அணைக்கு வரும் நீரின் அளவை தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

## காணொளிக்காட்சி மூலம் திருமங்கலம் அருகே
# ரூ.60.48 கோடியில் கட்டப்பட்ட அடுக்குமாடி குடியிருப்புகளை முதல்வர் திறந்து வைத்தார்
## ப.மாணிக்கம்தாகூர் எம்.பி. குத்துவிளக்கேற்றினார்



**திருமங்கலம்,மே 22-**

நகர்ப்புற ஏழை குடும்பங்களின் வாழ்க்கை தரத்தினை மேம்படுத்திடும் வகையில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகேயுள்ள உச்சப்பட்டியில் ரூ.60.48 கோடி திட்ட மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் கூடிய 672 குடியிருப்புகள் கொண்ட பிரமாண்ட அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. திருமங்கலம் மற்றும் உச்சப்பட்டிக்கு இடையே ஏழை எளிய மக்கள் பயன்பெற்றிடும் வகையில் அனைத்து வசதிகளுடன் கட்டி முடிக்கப்பட்டுள்ள இந்த அடுக்குமாடி குடியிருப்பினை சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொலி காட்சியின் வாயிலாக நேற்று திறந்து வைத்தார்.

இதனை தொடர்ந்து உச்சப்பட்டி அடுக்குமாடி குடியிருப்பு பகுதியில் நடைபெற்ற எளிய விழாவினில் விருதுநகர் எம்.பி ப.மாணிக்கம்தாகூர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு குத்துவிளக்கினை ஏற்றி வைத்தும் மரக்கன்றுகளை நடவு செய்தும் அடுக்குமாடி குடியிருப்பினை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்து சிறப்புரையாற்றினார்.

இதனை தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த விருதுநகர் எம்.பி ப.மாணிக்கம் தாகூர் கூறுகையில்: ஏழை எளிய மக்கள் பயன்பெற்றிடும் வகையில் ரூ.60.48 கோடி செல்வில் 672 குடியிருப்புகளுடன் கட்டப்பட்டுள்ள இந்த பயன்மிகு அடுக்குமாடி குடியிருப்பினை தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்றைக்கு திறந்து வைத்துள்ளார்.

ஆபரேசன் சிந்தூர் மூலம் பாகிஸ்தான் மீது இந்தியா தாக்குதல் நடத்தவுள்ள ராணுவ நடவடிக்கையை முன்கூட்டியே பாகிஸ்தானுக்கு தகவல் தெரிவித்ததாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். நாடாளுமன்ற ஜனநாயகத்தில் எதிர்கட்சியினர் எழுப்பும் தேசிய பாதுகாப்பு தொடர்பான கேள்விகளுக்கு மத்திய அமைச்சர்கள் பதில் கொடுக்காமல் உள்ளனர். வெளியுறவுத்துறை அமைச்சர் மௌனமாக உள்ளார். இது பல்வேறு சந்தேகங்களை எழுப்புகிறது.

பாகிஸ்தான் மீது இந்தியா நடத்தவுள்ள தாக்குதல்களை முன்கூட்டியே தகவல் கொடுத்தது தேச துரோகம் என்று தெரிவித்தார்.

இந்த விழாவில் மதுரை தெற்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் அம்மாபட்டி பாண்டியன், மாநில பொதுக்குழு உறுப்பினர் உலகநாதன், தி.மு.க மாவட்ட மகளிரணி அமைப்பாளர் கிருத்திகா தங்கப்பாண்டியன், தி.மு.க ஒன்றிய செயலாளர் தங்கப் பாண்டியன், தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய கண்காணிப்பு பொறியாளர் சித்துராஜ், செயற்பொறியாளர் பழனிகுமார், உதவி செயற்பொறியாளர் பழனிமுருகன், உதவி பொறியாளர் குமார் மற்றும் கட்சி நிர்வாகிகள், பயனாளிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# ராமநாதபுரத்தில் காங்கிரஸ் கட்சி சார்பில் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி நினைவுதினம்




**ராமநாதபுரம்,மே 22-**

ராமநாதபரத்தில் காங்கிரஸ் கட்சியின் சார்பில் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் நினைவுதினத்தையொட்டி மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது, இந்திய தேசத்தை 21 ஆம் நூற்றாண்டிற்கு எடுத்துச்சென்ற கணினி நாயகன் முன்னாள் பாரத பிரதமர் பாரத ரத்னா ராஜீவ்காந்தி 34 வது நினைவு தினம் நாடு முழுவதும் அனுசரிக்கப்பட்டது. இதன்படி ராமநாதபுரம் நகர, மாவட்ட காங்கிரஸ் கட்சியின் சார்பில் ராமநாதபுரம் நகர் மத்திய கொடிக்கம்பம் பகுதியில் நினைவு தினம் கடைப்பிடிக்கப்பட்டது. இதனையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சிக்கு மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினரும், மாவட்ட பொருளாளருமான நகரசபை கவுன்சிலர் ராஜாராம்பாண்டியன் கோபால் தலைமை வகித்தார்.

மாவட்ட பொறுப்புக் குழு உறுப்பினர் ஜோதிபாலன், மாநில செயலாளர் ஆனந்தகுமார், முன்னாள் கவுன்சிலர் காமராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் ராஜீவ் காந்தியின் திருஉருவபடத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தி கொடுஞ்செயல் எதிர்ப்பு உறுதிமொழி எடுத்து கொண்டனர். இதில் வட்டார தலைவர்கள் காருகுடி சேகர், சேது பாண்டியன், முன்னாள் ராணுவ வீரர் கோபால், நாகராஜன், கவுன்சிலர் மணிகண்டன், ஜெயக்குமார், அழகு, ராகுல், ஸ்ரீகாந்த், வலம்புரி முனியசாமி, மேகநாதன் உள்ளிட்ட காங்கிரஸ் கட்சியினர் கலந்து கொண்டனர். நகர் தலைவர் கோபி நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தார்.

## திண்டுக்கல் மலைக்கோட்டை அருகே
# அலங்கார நுழைவு வாயில் விவகாரம்: கலெக்டருக்கு ஐகோர்ட் நோட்டீஸ்

**மதுரை, மே 22-**

திண்டுக்கல் மலைக்கோட்டை அருகே அலங்கார நுழைவு வாயில் விவகாரம் குறித்து கலெக்டருக்கு ஐகோர்ட்டு நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

திண்டுக்கல் பகுதியைச் சேர்ந்த செந்தில்வேலு என்பவர் மதுரை ஐகோர்ட்டு மதுரை அமர்வில் பொதுநல வழக்கு ஒன்றை தாக்கல் செய்திருந்தார். அதில், திண்டுக்கல் மலைக்கோட்டை பகுதி தொல்லியல் துறையால் பராமரிக்கப்பட்டு வரும் பிரபலமான சுற்றுலா தளம். மலைக்கோட்டை பகுதியில் ஒன்றுக்கும் மேற்பட்ட நுழைவாயில்கள் உள்ள நிலையில், அனைத்து நுழைவாயில்களிலும் காவலர்கள் நியமிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் மலைக்கோட்டைக்கு உள்ளேயும், அதனைச் சுற்றியும் ஏராளமான ஆக்கிரமிப்புகள் அமைந்துள்ளன. இவை மலைக்கோட்டையின் தனித்தன்மையும், பழமையும் சிதைக்கும் வகையில் அமைந்துள்ளன. மலைக்கோட்டையில் உள்ள அய்யன் குளத்தை முறையாக சுத்தம் செய்து பராமரிக்க அதிகாரிகள் எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனால் அக்குளம் குப்பை கூழங்கள் நிறைந்து மோசமான நிலையில் காணப்படுகிறது. அதோடு திண்டுக்கல் மலைக்கோட்டை அருகே கிறித்தவ அலங்கார வளைவும் அமைக்க முயற்சிகள் நடைபெற்று வருகிறது. இவை தொடர்பாக நடவடிக்கை எடுக்க அதிகாரிகளிடம் மனு அளித்து எவ்வித பயனும் இல்லை. ஆகவே திண்டுக்கல் மலைக்கோட்டை பகுதியில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றவும், அய்யன் குளத்தை சுத்தம் செய்து தூய்மையாக பராமரிக்கவும், அப்பகுதியில் வழிபட அனுமதிக்கவும் உத்தரவிட வேண்டும். அதோடு மலைக்கோட்டை அருகிலேயே கிறிஸ்தவ அலங்கார நுழைவு வாயில் அமைக்க தடை விதித்து உத்தரவிட வேண்டும் எனக் கூறியிருந்தார். இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் ஸ்ரீமதி, விஜயகுமார் அமர்வு, திண்டுக்கல், மலைக்கோட்டை அருகே கிறிஸ்தவ அலங்கார நுழைவு வாயில் அமைக்கும் விவகாரத்தில் தற்போதைய நிலையை தொடரவும், வழக்கு தொடர்பாக திண்டுக்கல் மாவட்ட கலெக்டர், மாநகராட்சி ஆணையர் பதிலளிக்கவும் உத்தரவிட்டு வழக்கை ஜூன் 18-ந்தேதிக்கு ஒத்தி வைத்து உத்தரவிட்டனர்.



அருப்புக்கோட்டை நெசவாளர் காலனி முத்து மாரியம்மன் கோவிலில் முதல் வருட அபிஷேக கும்பாபிஷேகம் நடைபெற்றது.

## வரும் 3-ம் தேதி
# ராமநாதசுவாமி கோயிலில் ராமலிங்க பிரதிஷ்டை திருவிழா தொடங்குகிறது

**ராமேசுவரம், மே 22-**

ராமலிங்க பிரதிஷ்டை திருவிழா வருகிற 3-ம் தேதி ராமேசுவரம் ராமநாதசுவாமி கோயிலில் தொடங்குகிறது.

ராமேசுவரம் ராமநாதசுவாமி கோயிலில் ராமலிங்க பிரதிஷ்டை திருவிழா ஜூன் 3ம் தேதி தொடங்கி மூன்று நாட்கள் நடைபெறுகிறது. இதையொட்டி ஜூன் 3ம் தேதி கால பூஜை முடிந்து மாலை ராவண சம்ஹாரமும், ஜூன் 4-ம் தேதி பகல் 12 மணியளவில் தனுஷ்கோடி அருகே உள்ள கோதண்ட ராமர் கோயிலில் விபீஷணர் பட்டாபிஷேக வைபவ விழாவும், ஜூன் 5-ம் தேதி காலை 8 மணியளவில் ராமலிங்க பிரதிஷ்டை நிகழ்வும் நடைபெறுகிறது.

ஜூன் 4-ம் தேதி புதன்கிழமை அதிகாலை 2.30 மணிக்கு நடை திறக்கப்பட்டு, ராமநாதசுவாமி கோயிலில் ஸ்படிக லிங்க பூஜைக்கு பின்னர் ராமநாத சுவாமி, பர்வத வர்த்தினி அம்பாள் மற்றும் ராமர், விபீஷணர் பட்டாபிஷேக விழாவுக்கு கோதண்ட ராமர் கோயிலுக்குச் செல்வதால் அன்று காலை 7 மணியிலிருந்து மாலை 5 மணி வரையிலும் கோயில் நடை அடைக்கப்படுவதுடன், கோயில் தீர்த்தங்களில் புனித நீராட பக்தர்கள் அனுமதிக்கப் படமாட்டார்கள் என்று கோயில் நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஸ்ரீவில்லிபுத்தூர்: மோட்டர் சைக்கிள், மற்றும் நகை திருடிய 3 பேர் கைது



**விருதுநகர், மே 22-**

ஸ்ரீவில்லிபுத்தூர் பெருமாள் பட்டி கீழத்தெருவில் வசிக்கும் காளீஸ்வரி செல்வம் வயது 32 என்பவர் சம்பவத்தன்று இரவு தனது ரூ90 ஆயிரம் மதிப்புள்ள புதிய மோட்டார் சைக்கிளை வீட்டின் முன்பு நிறுத்திவிட்டு மறுநாள் காலை வந்து பார்த்தபோது நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் காணாமல் போனது தெரிய வந்தது. மேலும் ஸ்ரீவில்லிபுத்தூர் மாயாண்டி பட்டி தெருவை சேர்ந்த 80 வயது முதியவர் ஒருவர் வீட்டில் இருந்தபோது மூன்று பேர் கொண்ட கும்பல் அவர் வீடு புகுந்து வீட்டில் இருந்த 4 பவுன் தங்க மோதிரத்தை திருடியுள்ளது. இது குறித்து ஸ்ரீவில்லிபுத்தூர் நகர் காவல் நிலைய குற்றப்பிரிவு போலீசார் வழக்கு பதிவு செய்து குற்றவாளிகளை தேடி வந்தனர்.

நகர் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் முத்துக்குமார் தலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டு மோட்டர் சைக்கிள் திருடிய சம்பவம் முதியவரிடம் மோதிரம் திருடிய சம்பவம் ஆகியவற்றில் ஈடுபட்ட ஸ்ரீவில்லிபுத்தூர் மாரியம்மன் கோவில் மாயாண்டி பட்டி தெரு மாதவன் மகன் முத்துகிருஷ்ணன். வயது 21 ஸ்ரீவில்லி பெரும்பள் சேரி புளுகாண்டி மகன் கோட்டை காளி வயது 17 சங்கூரணி ஓடை தெரு காளிமுத்து மகன் செல்வகுமார் வயது 24 ஆகிய மூன்று பேரையும் பிடித்து திருட்டுப் பொருட்களை பறிமுதல் செய்து கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ராமநாதபுரம் மாவட்டத்திற்கு இன்று உள்ளூர் விடுமுறை

**ராமநாதபுரம், மே 22-**

ஏர்வாடி சந்தனக்கூடு திருவிழாவை முன்னிட்டு ராமநாதபுரம் மாவட்டத்திற்கு இன்று உள்ளூர் விடுமுறை விடுக்கப்பட்டுள்ளது. ராமநாதபுரம் மாவட்டம் ஏர்வாடியில் உலக பிரசித்தி பெற்ற மஹான் சுல்தான் செய்யது இப்ராகிம் ஷஹீத் ஒலியுல்லாஹ் தர்கா உள்ளது. இந்த தர்காவில் ஆண்டுதோறும் மத நல்லிணக்கத்திற்கு எடுத்துக்காட்டாக சந்தனக்கூடு திருவிழா நடைபெறும். அதன்படி, ஏர்வாடி தர்காவில் 851-ம் ஆண்டு மத நல்லிணக்க சந்தனக்கூடு திருவிழா நேற்று தொடங்கி நடைபெற்றது. நாளை (வியாழக்கிழமை) அதிகாலையில் சந்தனம் பூசும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது. சந்தனக்கூடு திருவிழாவில் பங்கேற்க பல்லாயிரக்கணக்கானோர் பக்தர்கள் வருவதை முன்னிட்டு பல்வேறு முன்னேற்பாடு பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில், ஏர்வாடி தர்காவில் நடைபெறும் சந்தனக்கூடு திருவிழாவை முன்னிட்டு ராமநாதபுரம் மாவட்டத்திற்கு இன்று (வியாழக்கிழமை) ஒருநாள் உள்ளூர் விடுமுறை அளித்து மாவட்ட கலெக்டர் சிம் ரன்ஜீத் சிங் காலோன் உத்தரவிட்டுள்ளார்.

# நத்தத்தில் பைக் மோதி மூதாட்டி படுகாயம்

**நத்தம், மே 22-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே லிங்கவாடியை சேர்ந்தவர் சமுத்திரம் (71). இவர் கடந்த 19-ம் தேதி மதியம் நத்தத்தில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு சென்று வீட்டு மீண்டும் ஊருக்கு செல்வதற்காக பஸ்நிலையம் பகுதியில் சாலையை கடக்க முயன்றார். அப்போது நத்தம்- காமராஜர் நகரை சேர்ந்த தரணி (17) என்பவர் ஓட்டி வந்த பைக் மூதாட்டி மீது மோதியது. இதில் தூக்கி வீசப்பட்ட மூதாட்டிக்கு தலை, கை, கால்களில் பலத்த காயம் ஏற்பட்டது.

ஆபத்தான நிலையில் அக்கம்பக்கத்தினர் அவரை மீட்டு நத்தம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். பின்னர் மேல் சிகிச்சைக்காக அவர் மதுரை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் குறித்து போலீஸ்-சப்-இன்ஸ்பெக்டர் அருள்குமார் வழக்குபதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்.



தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் ஏலம் விவசாயிகள் கல்லூரியில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் சார்பில் நடைபெற்ற மாவட்ட அளவிலான மா சகுபடி கருத்தரங்கில் அமைக்கப்பட்டுள்ள மாம்பழங்களின் கண்காட்யினை கலெக்டர் ரஞ்சீத் சிங் பார்வையிட்டார்.



முன்னாள் முதல்வர் கலைஞர் பிறந்தநாளை முன்னிட்டு மதுரை தெற்கு மாவட்ட மகளிர் அணி சார்பாக திருப்பரங்குன்றத்தில் நடைபெற்ற கல்வி கடன் மற்றும் கல்வி வழிகாட்டி சிறப்பு முகாமை மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் துவக்கி வைத்து பேசினார். உடன் மாவட்ட மகளிரணி அமைப்பாளர் கிருத்திகா தங்கப்பாண்டி, ஐ.டி.விங் மாநில துணைச்செயலாளர் பாச பிரபு, ஒன்றிய செயலாளர்கள் தங்கப்பாண்டி, மதன்குமார் மற்றும் கல்வியலாளர்கள், வங்கி அதிகாரிகள், கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# திருமங்கலம் வட்ட ஜமாபந்தியில் மக்களின் மனுக்களுக்கு தீர்வு



**திருமங்கலம், மே 22-**

மதுரை மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் மு.ராமகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற திருமங்கலம் வருவாய் வட்டத்தில் 2024-2025-ம் ஆண்டிற்கான நிலவரிக் கணக்கு முடிப்பு வருவாய் தீர்வாயத்தில் பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட 487 மனுக்களில் 58 மனுக்களுக்கு உடனடி தீர்வு காணப்பட்டது.

மதுரை மாவட்டம் திருமங்கலம் வட்டத்தில்பசலி 1434-ம் ஆண்டிற்கான நிலவரிக் கணக்கு முடித்திடும் கிராமங்களுக்கான வருவாய் தீர்வாயம் எனப்படும் ஜமாபந்தி நிகழ்ச்சி மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் மு.ராமகிருஷ்ணன் தலைமையில் திருமங்கலம் தாலுகா அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த வருவாய் தீர்வாயம் நிகழ்ச்சியில் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு தங்களது நலத்திட்ட உதவிகள் கோரிடும் மனுக்கள் மற்றும் நில உடமைகள் தொடர்பான மனுக்களை மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் மு.ராமகிருஷ்ணன் மற்றும் அதிகாரிகளிடம் கொடுத்தனர்.

அதன்படி இந்த வருவாய் தீர்வாய நிகழ்வினில் திருமங்கலம் வட்டத்திலுள்ள 3 உள் வட்டங்களில் மொத்தமாக 61 கிராமங்களுக்கு ஜமாபந்தி நிகழ்ச்சி நான்கு நாட்கள் தொடர்ச்சியாக நடைபெற்றதில் பொது மக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 487 மனுக்கள் பெறப்பட்டது. இதையடுத்து அதிகாரிகள் மேற்கொண்ட துரித நடவடிக்கை காரணமாக முதியோர் ஓய்வுத்தொகை, பட்டாமாறுதல், இலவசவீட்டு மனை பட்டா உள்ளிட்ட 58மனுக்களுக்கு உடனடியாக தீர்வு காணப்பட்டு பயனாளிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன் மற்ற மனுக்கள் பரிசீலனையில் உள்ளது.அதன்படி இந்த ஆண்டு ஜமாபந்தி நிகழ்விற்கான அனைத்து ஏற்பாடுகளையும் திருமங்கலம் வட்டாட்சியர் சுரேஷ் பிரெடரிக் கிளமென்ட் தலைமையிலான வருவாய்த்துறை அதிகாரிகள் செய்திருந்தனர்.

## வரும் 26-ம் தேதி பாலமேடு அருகே
# வலையபட்டி மஞ்சமலை அய்யனார் கோவில் குதிரை எடுப்பு உற்சவ விழா



**அலங்காநல்லூர், மே 22-**

பாலமேடு அருகே வலையபட்டி ஜமீன்தார்கள் கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ மஞ்சமலை அய்யனார் ஈரடி கருப்புசாமி திருக்கோவில் குதிரை எடுப்பு உற்சவ திருவிழா வருகின்ற 26-ம் தேதி திங்கட் கிழமை வெகு விமரிசையாக நடைபெற உள்ளது.

தென் மாவட்டங்களில் மிகவும் பிரசித்தி பெற்ற கோவில்களில் ஒன்றானது மதுரை மாவட்டம் பாலமேடு அருகே வலையபட்டி ஜமீன்தார்கள் கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ மஞ்சமலை அய்யனார் ஈரடி கருப்புசாமி திருக்கோவில் ஆகும். இக்கோவிலில் கடந்த 8 ஆண்டுகளுக்கு பிறகு குதிரை எடுப்பு உற்சவ திருவிழா வருகின்ற 26-ம் தேதி திங்கட் கிழமை வெகு விமரிசையாக நடைபெற உள்ளது.

இந்த உற்சவ விழாவில் சுற்று வட்டார கிராமங்கள் மட்டும் வெளி மாவட்டங்களைச் சேர்ந்த பக்தர்கள் ஏராளமானோர் தங்களது நேர்த்திக் கடன் நிறைவேறியதையொட்டி குதிரைகள், காளைகள், மட்டும் சுவாமி சிலைகள், குழந்தை பொம்மை சிலைகள், பைரவர் வீடு, ஆட்டோ உள்ளிட்ட பல் வேறு வகையான சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிலைகள் செய்து வர்ணம் பூசப்பட்டு செய்யபட்டு தயார் நிலையில் உள்ளது.

இந்த சிலைகள் அனைத்தும் திருவிழா நடைபெறும் நாளில் இருப்பிடத்திலிருந்து எடுத்து செல்லப்பட்டு சுமார் 5 கிலோமீட்டர் தொலைவில் உள்ள மஞ்சமலைக்கு சென்று சிறப்பு பூஜை செய்யபட்டு வைக்கப்படும். விழா ஏற்பாடுகளை அரண்மனை ஜமீன்தார்கள், வலையபட்டி, அரசம்பட்டி, சல்லிக்கோடாங்கிபட்டி, புதூர், லக்கம்பட்டி, கிராம பொதுமக்கள் செய்து வருகின்றனர்.




● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று காவல்துறை சார்பில் பணிக்காலத்தில் காலமான காவலர்களின் வாரிசுதாரர்கள் 115 நபர்களுக்கு கருணை அடிப்படையில் தகவல் பதிவு உதவியாளர்/காவல் நிலைய வரவேற்பாளர் பணியிடங்களுக்கு பணி நியமன ஆணைகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். இதில் தலைமைச்செயலாளர் நா.முருகானந்தம், கூடுதல் தலைமைச்செயலாளர் தீரஜ்குமார், காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், காவல்துறை இயக்குநர் வினித்தேவ் வான்கேடே, காவல்துறை தலைவர் சத்திய பிரியா ஆகியோர் கலந்து கொண்டனர்.




● சென்னை கலைவாணர் அரங்க வளாகத்திலுள்ள மாநில செய்தி நிலைய கூட்டரங்கில் நேற்று தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் மதுரை, திருநெல்வேலி மண்டல இணை இயக்குநர்கள், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களுடனான பணி ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் செயலாளர் வே.ராஜாராமன், கூடுதல் இயக்குநர் ச.செல்வராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.



● மதுரை மாவட்டம் இரணியம் பகுதியில் ரூ.22.10 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேலூர் அழகர்கோவில் சாலையில் விரிவாக்க பணிகளை நேற்று அமைச்சர்கள் எ.வ.வேலு, பி.மூர்த்தி ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர். இதில் அரசு செயலாளர் செல்வராஜ், மாவட்ட ஆட்சித்தலைவர் சங்கீதா ஆகியோர் உடனிருந்தனர்.



● சென்னை நந்தனத்திலுள்ள மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையரகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் திருவள்ளூர், சென்னை மற்றும் செங்கல்பட்டு ஆகிய 3 கடலோர மாவட்டங்களை சேர்ந்த மீனவ பயனாளிகளுக்கு மீன்பிடி தடைக்கால நிவாரண தொகையை பயனாளிகளின் வங்கிக்கணக்கில் வரவு வைத்திடும் வகையிலான ஆணைகளை மீன்வளம், மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மீனவர் நலத்துறை செயலாளர் ந.சுப்பையன், மீனவர் நலத்துறை ஆணையர் இரா.கஜலட்சுமி உள்ளனர்.



● மதுரை உத்தங்குடி பகுதியில் வரும் ஜூன் 1-ம் தேதி நடைபெறவுள்ள தி.மு.க. பொதுக்குழு கூட்டத்திற்கான ஏற்பாடுகள் குறித்து அமைச்சர்கள் எ.வ.வேலு, பி.மூர்த்தி, பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர். உடன் மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## பிரதமர் தலைமையில் நிதி ஆயோக் கூட்டம்:

# முதல்வர் மு.க.ஸ்டாலின் நாளை டெல்லி பயணம்

சென்னை, மே 22-

நிதி ஆயோக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் நாளை டெல்லி செல்கிறார்.

இந்தியாவில் மத்திய திட்டக்குழு 1950-ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. நாட்டின் 5 ஆண்டு திட்டத்தை செயல்படுத்தும் நோக்கில் இந்த திட்டக்குழு உருவாக்கப்பட்டது.

இந்த திட்டக்குழு ஆண்டுதோறும் கூடி நாட்டின் அடுத்தக்கட்ட வளர்ச்சி உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து ஆலோசனை நடத்தி அதற்கேற்ற முடிவுகளை எடுத்து வந்தது.

இதனிடையே, 2015ம் ஆண்டு மத்திய திட்டக்குழு மாற்றப்பட்டு, நிதி ஆயோக் அமைப்பாக உருவாக்கப்பட்டது. நிதி ஆயோக் தலைவராக பிரதமர் மோடி உள்ளார்.

நிதி ஆயோக்கின் கூட்டம், பிரதமர் தலைமையில் ஒவ்வொரு ஆண்டும் நடைபெற்று வருகிறது. கடந்த ஆண்டு ஜூலையில் டெல்லியில் இந்த கூட்டம் நடத்தப்பட்டது. ஆனால், மத்திய பட்ஜெட்டில் ஆந்திரா, பீகார் ஆகிய மாநிலங்களை தவிர வேறு மாநிலங்களுக்கும் நிதி ஒதுக்கவில்லை என்று குற்றம் சாட்டி, தமிழகத்தின் முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் கர்நாடகா, தெலுங்கானா, இமாச்சல பிரதேசம், கேரளா, பஞ்சாப் ஆகிய மாநிலங்கள், டெல்லி, புதுச்சேரி யூனியன் பிரதேசங்களின் முதல்வர்கள் அந்த நிதி ஆயோக் கூட்டத்தில் பங்கேற்கவில்லை.

இன்டியா கூட்டணி கட்சியைச் சேர்ந்தவர்கள் யாரும் அதில் பங்கேற்காத நிலையில், மேற்கு வங்காளத்தின் முதல்வர் மம்தா பானர்ஜி மட்டும் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசினார். ஆனால் 5 நிமிடங்களுக்கு மேல் பேச வாய்ப்பு தரவில்லை என கூறி கூட்டத்தில் இருந்து மம்தா பானர்ஜி வெளியேறினார். இந்நிலையில், நடப்பு நிதியாண்டிற்கான நிதி ஆயோக் கூட்டம் தலைநகர் டெல்லியில் 24ம் தேதி (நாளை மறுநாள்) நடைபெற உள்ளது. பிரதமர் மோடி தலைமையில் நடைபெறும் நிதி ஆயோக் கூட்டத்தில் பங்கேற்க அனைத்து மாநில முதல்வர்களுக்கு மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது.


அந்த வகையில் நிதி ஆயோக் கூட்டத்தில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்கிறார். பிரதமர் மோடி தலைமையிலான நிதி ஆயோக் கூட்டத்தில் பங்கேற்க முதல்வர் மு.க.ஸ்டாலின் நாளை (23ம் தேதி) சென்னையில் இருந்து விமானம் மூலம் டெல்லி செல்கிறார். அன்று இரவு டெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் தங்கும் மு.க.ஸ்டாலின் 24ம் தேதி நடைபெறும் நிதி ஆயோக் கூட்டத்தில் பங்கேற்கிறார். இந்த கூட்டத்தில் தமிழகத்திற்கு தேவையான நிதியை தரும்படி பிரதமர் மோடியிடம் முதல்வர் வலியுறுத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது. பின்னர் அன்று மாலை முதல்வர் மு.க.ஸ்டாலின் டெல்லியில் இருந்து விமானத்தில் புறப்பட்டு சென்னைக்கு வருவார்.

# மத்திய நிதியமைச்சர் நிர்மலாவுடன் கனிமொழி தி.மு.க. எம்.பி. சந்திப்பு

## செங்கல் மீதான ஜி.எஸ்.டி.யை குறைக்கக்கோரி மனு

டெல்லி, மே 22-

டெல்லியில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனுடன் தி.மு.க. பாராளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி சந்தித்தார். அப்போது, செங்கல் மீதான ஜி.எஸ்.டி வரியை குறைக்க வேண்டும் என்று வலியுறுத்தி அவர் மனு அளித்தார்.



அவர் அளித்த அந்த மனுவில் , "செங்கல் விற்பனைக்கான ஜி.எஸ்.டி. வரியைக் குறைக்கக் கோரி செங்கல் உற்பத்தியாளர்கள் நீண்டகாலமாக கோரிக்கை முன்வைத்து வருகின்றனர். 01.04.2022 முதல் செங்கல் விற்பனைக்கு உள்ளீட்டு வரி கடன் (ஐடிசி) இல்லாமல் 6 சதவீத ஜி.எஸ்.டி.யும், உள்ளீட்டு வரி கடனுடன் 12 சதவீத ஜி.எஸ்.டி.யும் விதிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக கடந்த இரண்டு ஆண்டுகளாக செங்கல் உற்பத்தி கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. செங்கல் உற்பத்தியாளர்கள் பெரும்பாலோர் தங்கள் தொழிலை நடத்த சிரமம் ஏற்பட்டுள்ளது. நாடு முழுவதும் சுமார் 1.5 லட்சம் செங்கல் உற்பத்தி இடங்கள் உள்ளன. பல கிராமப்புற மக்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்கு இந்தத் தொழிலைச் சார்ந்துள்ளனர். எனவே செங்கல் விற்பனைக்கான ஜி.எஸ்.டி.யை 3 சதவீதம் மற்றும் 5 சதவீதமாகக் குறைப்பது குறித்து பரிசீலிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

## தேடப்பட்ட தலைவன் பசவராஜ் உள்ளிட்ட

# 27 நக்சல்கள் சத்தீஷ்கரில் சுட்டுக்கொலை

ராய்ப்பூர், மே 22-

சத்தீஸ்கரில் நடந்த என்கவுன்டரில், நக்சல் அமைப்பு தலைவன் பசவராஜ் சுட்டுக் கொல்லப்பட்டான். இவன் குறித்து தகவல் தெரிவிப்பவருக்கு ரூ.1கோடி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு இருந்தது. மேலும் 27 நக்சல்களும் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

சத்தீஸ்கரில் நேற்று பாதுகாப்பு படையினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் நக்சலைட்டுகள் 27 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதில், நக்சல் அமைப்பின் தலைவன் நம்பலா கேசவ் ராவ் என்ற பசவராஜூம் ஒருவன். 68 வயதான பசவராஜ், மாவோயிஸ்ட் இயக்கத்தின் முக்கிய தலைவன். இவன் இந்தியாவில் தடை செய்யப்பட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் (மாவோயிஸ்ட்) பொதுச் செயலாளராக இருந்துள்ளான்.

1970களில் இருந்தே நக்சல் இயக்கத்தில் பசவராஜ் இருக்கிறான். தெலுங்கானாவின் ஸ்ரீகாகுளம் மாவட்டத்தில் உள்ள ஜியன்னாபேட்டாவைச் சேர்ந்த இவன், வாரங்கலில் உள்ள பிராந்திய பொறியியல் கல்லூரியில் பொறியியல் பட்டம் பெற்றுள்ளான். இவன் பல்வேறு சதி வேலைகளுக்கு திட்டம் தீட்டி கொடுத்துள்ளான். இவன் குறித்து தகவல் அளித்தால், ரூ. 1 கோடி சன்மானம் வழங்கப்படும் என என்.ஐ.ஏ., மற்றும் சத்தீஸ்கர் அரசு அறிவித்து இருந்தது.

இவனுக்கு, பிரகாஷ், கிருஷ்ணா, விஜய், பசவராஜ், உமேஷ், ராஜூ மற்றும் கம்லு என பல்வேறு பெயர்கள் உள்ளன. இவனை நாடு முழுக்க உள்ள பாதுகாப்புப் படையினர் தேடி வந்தனர். இவனை சுட்டுக் கொன்றது நக்சல் அமைப்புக்கு மிகப்பெரிய பலத்த அடி என கருதப்படுகிறது. இவனை பாதுகாப்பு படையினர் சுற்றுக் கொன்றதை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா உறுதி செய்துள்ளார்.



இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அமித்ஷா வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது: நக்சலைட்டை ஒழிக்கும் போரில் ஒரு மைல்கல் சாதனை. இன்று (நேற்று), சத்தீஸ்கரின் நாராயண்பூரில் நடந்த என்கவுன்டரில், நமது பாதுகாப்புப் படையினர் நக்சலைட்டுக்கள் 27 பேரை சுட்டு வீழ்த்தியுள்ளனர். அவர்களில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் (மாவோயிஸ்ட்) பொதுச் செயலாளரும், நக்சல் இயக்கத்தின் தலைவனுமான நம்பலா கேசவ் ராவ் என்ற பசவராஜூவும் ஒருவன்.

நக்சலைட்டுக்கு எதிரான இந்தியாவின் மூன்று தசாப்த காலப்போரில், பொதுச் செயலாளர் பதவியில் இருந்த ஒருவன் நமது படைகளால் வீழ்த்தப்படுவது இதுவே முதல் முறை. நமது பாதுகாப்பு படையினரை பாராட்டுகிறேன். ஆபரேஷன் பிளாக் பாரஸ்ட் முடிந்த பிறகு, சத்தீஸ்கர், தெலுங்கானா மற்றும் மஹாராஷ்டிராவில் நக்சலைட்டுகள் 54 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 84 பேர் சரணடைந்துள்ளனர் என்பதையும் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். மார்ச் 31, 2026க்கு முன்பு நக்சலைட்டை ஒழிக்க பா. ஜ., அரசு உறுதியாக உள்ளது.

இவ்வாறு அமித்ஷா கூறியுள்ளார்.

# மீன்பிடி தடைக்கால நிவாரணம் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்தார் அமைச்சர்

சென்னை, மே 22-

மீன்பிடி தடைக்கால நிவாரணம் வழங்கும் திட்டத்தை 10 பயனாளிகளுக்கு வழங்கி அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாட்டின் கடல் மீனவக் குடும்பங்களுக்கு மீன்பிடி தடைக்கால நிவாரணம் வழங்கும் திட்டத்தினை மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் தொடங்கி வைத்தார். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடல் மீன்வளத்தைப் பேணிக்காத்திட, தமிழ்நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் கிழக்குக் கடற்கரை பகுதிகளில் ஏப்ரல் 15-ம் தேதி முதல் ஜூன் 14-ம் தேதி வரையிலும், மேற்கு கடற்கரை பகுதியில் ஜூன் 1-ம் தேதி முதல் ஜூலை 31-ம் தேதி வரையிலும் 61 நாட்களுக்கு மீன்பிடி தடைக்காலம் அமல்படுத்தப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு ஆண்டும் மீன்பிடி தடைக்காலத்தின்போது மீன்பிடி விசைப்படகுகள்/இழுவலைப்படகுகளில் மீன்பிடிப்பு செய்யும் பணியாளர்கள் மற்றும் முழுநேர மீன்பிடிப்பினை சார்ந்து வாழும் மீனவ குடும்பங்களுக்கு தொழிலின்றி வாழ்வாதாரம் முற்றிலும் பாதிக்கப்படுவதால், மீன்பிடி தடைகால நிவாரணத் தொகை வழங்கப்படுகிறது.

ராமநாதபுரம் மாவட்டத்தில் 18.08.2023 அன்று நடைபெற்ற மீனவர் நல மாநாட்டில், தமிழ்நாடு முதல்-அமைச்சரால் அறிவிக்கப்பட்டதற்கிணங்க, கடந்த ஆண்டு முதல் மீன்பிடி தடைக்கால நிவாரணத் தொகையானது ரூ.5,000-லிருந்து ரூ.8,000-ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது. நடப்பாண்டின் மீன்பிடி தடைக்காலத்தில் தமிழ்நாட்டின் 14 கடலோர மாவட்டங்களில் உள்ள 1.75 லட்சம் கடல் மீனவக் குடும்பங்களுக்கு, மீன்பிடி தடைக்கால நிவாரணத் தொகையாக ரூ.8,000 வீதம் வழங்கிடும் பொருட்டு, அரசு ரூ.140.07 கோடி நிதி ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

இத்திட்டத்தினை தொடங்கி வைத்திடும் முகமாக 20.05.2025 அன்று சென்னை, நந்தனத்தில் உள்ள மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையரகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் திருவள்ளூர், சென்னை மற்றும் செங்கல்பட்டு ஆகிய 3 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த தலா 10 மீனவ பயனாளிகளுக்கு மீன்பிடி தடைக்கால நிவாரணத் தொகையினை அவரவர் வங்கிக் கணக்கில் வரவு வைத்திடும் வகையிலான ஆணைகளை வழங்கினார்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.